கல்கி

KALKI 6.8.95 ரூ. 3.00





இன்றைக்கு மார்க்கெட்டில், தலைக்குப் போடுகிற ஷாம்புவி லிருந்து நகத்துக்குப் போடு கிற நெயில் பாலீஷ் வரை - கிட்டத் தட்ட 46 வகை அழகு சாதனங்கள் புழக்கத் தில் இருக்கின்றன!

இவற்றைப் பார்த்து மையல் உண்டாகி, அழகுக்கு அழகு சேர்க்க விரும்பி காஸ்மெடிக்ஸ் கடைகளுக் குப் படை எடுக்கும் வரை பெண் களுக்கு உற்சாகம்தான். மண்டை காய்வதெல்லாம் அப்புறம்!

கலர் கலராக ஏகப்பட்ட ட்யூப் களில் திட, திரவ (நல்லவேளை, வாயு இல்லை!) அழகு சமாசாரங்கள். எதை எடுப்பது? எதை விடுப்பது? நம் முகத் துக்கு, சருமத்துக்கு, உடல்நலத்துக்கு, தோற்றத்துக்கு எது உகந்தது? (அதை விட நம் பர்ஸுக்கு!) எதை எத்தனை நாள் வைத்திருக்கலாம் - உபயோகிக்க லாம்? கெமிக்கல்ஸ் ஏதும் தீங்கு செய்து பொன்னான மேனி புண் ணாகிப் போனால்?

தீராத சந்தேகங்கள்; குழப்பங்கள்.

என்னதான் தீர்வு?

பொன்னான மேனி புண்ணாகலாமா?

அரசு அனுமதியுடன் அழகு சாதனங்கள் தயாரிக்கும் லாக்மே, ஷானாஸ், பயோ டெக் போன்ற நிறுவனங்கள் நமது சந்தேகங்களைப் போக்குவதற்கென்றே, நகரின் முக்கிய ஷாப்பிங் சென்டர்களில் கன்ஸல் டிங் கௌண்ட்டர்கள் வைத்து நடத்தி வருகின்றன - இரண்டு வருஷங் களாக!

லாக்மே நிறுவன, சென்னைக் கிளை அதி காரி குஸும் பாட்டா சொல்கிறார் :

"அறிமுகமாகப் போகும் அழகு சாதனம் ஒன்று, பகிரங்க மார்க்கெட்டில் நுழையும் முன், பலப்பல சோதனைகளைக் கடந்தாக வேண்டும்.

"முதல் கட்டமாக ஆய்வு மற்றும் அபி விருத்திப் பிரிவு மருத்துவர்கள், தோல் மற்றும் அழகுக் கலை நிபுணர்களின் ஆலோசனை களின்படி, நாட்டின் தட்ப வெப்பம், மக்களின் தேவை, பிரச்னை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே தயாரிப்புப் பொருட்களின் அளவு, தரம் நிர்ணயிக்கப்படுகின்றன.

"தயாரிக்கப்பட்டபின் ஓராண்டு காலம் முதல் ஐந்தாண்டுகள் வரைகூட பலகட்ட சோதனைகள் உண்டு. பிறகுதான் விற்பனைக்கு வருகின்றன.

"இம்மாதிரி அழகு சாதனங்களின்மேல் தயாரிப்பு தேதி குறிப்பிடப்பட்டிருக்கும்! ஆனால் எக்ஸ்பயரி டேட் இருக்காது! குறுகிய கால அளவுதான் இவற்றுக்கு ஆயுள்! 'காஜல்' போன்ற 'மை' பொருட்களை, ஆறு மாதங் களுக்கு மேல் உபயோகப்படுத்தாதிருப்பது நலம்.

"இப்போது காஸ்மெடிக்ஸ் பொருட்கள் விளம்பரத்தில், 'மூலிகை' என்ற சொல் அதிகம் அடிபடுகிறது. அழகு சாதனத் தயாரிப்பில் இயற்கையான பொருள்களையும் (மலர், தேன், வேப்பிலை, சந்தனம்...) அதிகம் உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

"எழுபதிலிருந்து 400, 500 ரூபாய் வரை கூட சில அழகு சாதனங்கள் விற்கப்படுகின்றன!"



கீதா மோஹன்
மாடல் : கவிதா
வண்ணப்படம் : யோகா

பத்து பைசாவுக்கு என்ன கிடைக்கும்?

ஸ்ரீராம் நகரிலுள்ள மணவாளன் மார்ட்.

"பத்து பைசாவுக்கு என்ன கிடைக்கும்?" என்றோம். ஒரு சின்ன பட்டியலாவது தேறும் என்று காத்திருக்க, பாட்டிலிலிருந்து ஒரு சின்ன முறுக்கைக் கையிலெடுத்தார் கடைக்காரர். (குட்டிப் பாப்பா வளையல் சைஸ், அவ்வளவே).

இதுதான் இங்கே விக்கறதிலேயே விலை குறைஞ்ச ஐட்டம். நாலணா" என்று முறுக்கிக் கொண்டார்.

அடையாறிலுள்ள புஷ்பா டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ்.

"பத்து பைசான்னா சொன்னீங்க?"

தன் காதுகளையே நம்ப முடியாமல் மீண்டும் கேட்டார் அக்கௌண்ட்ஸ் பிரிவிலுள்ள சரோஜா.

"பொருள்களை சுற்றிக் கொடுக்கும் ப்ளாஸ்டிக் கவரின் விலையே அதைவிட அதிகமாச்சே. இங்கே மிகக் குறைந்த விலையிலே கிடைப்பது க்ரெனன் பாக்குத்தான் பொட்டலம்தான். ஒரு ரூபாய்" என்றார்.

கடையிலிருந்து வந்த போது 'கோட்ஸை' சந்தித்தேன். நண்பன். விவரம் கேட்டவன், "நடை பாதைக் கடைகளையல்லவா நாடியிருக்க வேண்டும்?" என்று இடித்துரைத்தான். தி.நகர் ரங்கநாதன் தெருவுக்கு விரைந்தோம்.

எங்கிருந்தோ "மூணு பத்து", "மூணு பத்து" என்ற கூவல் கேட்டது.

"பார், ஒன்றென்ன மூணு ஐட்டங்கள் கிடைக்கப் போகுது பத்து பைசாவுக்கு" என்று ஒரு மைதாஸ் பார்வையோடு, குரல் வந்த திசையை நோக்கி அவன் சிறுத்தைப் பாய்ச்சல் பாய, நாமும் பின் தொடர்ந்தோம்.

நிறைய சின்னச் சின்னப் பொருள்கள் கொட்டிக் கிடந்தன.

சோப் பாக்ஸ், ப்ரஷ், பென்சில் பாக்ஸ் இப்படி..

எந்த மூன்று பொருள்களை எடுத்துக் கொண்டாலும் பத்து ரூபாய் என்று விற்றுக் கொண்டிருந்தார் நாகராஜன். கோட்ஸின் பாய்ச்சல் காரணத்தை அறிந்து அவர் சற்றே சூடானார்.



"நான் விக்கறதிலேயே விலை கம்மியானது வாஷ்பேஸின் துடைக்க உதவும் இந்த ப்ரஷ்தான். இது மொத்த விலையிலேயே டஜன் 24 ரூபா ஆகுது. தைரியமா பத்து பைசாவை வச்சுக்கிட்டு வியாபாரத்துக்கு வந்திருக்கீங்களே, சரியான ஆளுய்யா!"

அடுத்து கோட்ஸின் கவனத்தைக் கவர்ந்தது 'சேஃப்டிபின்'. நடைபாதைக் கடையொன்றில் அதை விற்றுக் கொண்டிருந்தவரை விசாரிக்க, 12 பின்கள் அடங்கிய ஒரு செட் இரண்டு ரூபாய் என்று தெரியவந்தது. ஒவ்வொரு செட்டிலும் வெவ்வேறு அளவிலான பின்கள் கோக்கப்பட்டிருந்தன. டக்கென்று அவற்றில் இருந்து ஒன்றைக் கோட்ஸ் பிரிக்க, நாம் அவன் காதில் "டேய், ஒண்ணு 17 பைசா ஆகுது" என்றோம். கோட்ஸ் சளைக்கவில்லை. "இந்த சின்ன சைஸ் 'பின்'னைப் பத்து பைசாவுக்குக் கொடுத்தால் என்ன?" என்று பேரத்தைத் துவக்க, முதலில் முறைத்த கடைக்காரர்,

"எவ்வளவு டஜன் வாங்கப் போறீங்க?"

"டஜனில்லை. ஒன்னே ஒன்னு" என்று பதில் வந்ததும் வெறுத்தார், மறுத்தார்.


ஆரஞ்சு மிட்டாய், பல்ப்பம், - இப்படி சல்லிசாகக் கிடைக்கும் என்று நாம் நினைத்த பொருள்களில் ஒன்று கூட பத்து பைசாவுக்குக் கிடைக்கக் காணோம். ரப்பர் பாண்ட், கற்பூர உருண்டை, சாக்பீஸ் ஆகியவற்றைக் கூட வாங்க முடியவில்லை. ஒன்று பத்து பைசா என்றாலும் மொத்தமாகத்தான் விற்பார்களாம்.

நொந்து போன நிலையில் "இந்தப் பத்து பைசாவுக்கு ஒரு உபயோகம் கூட இல்லையே" என்று சலித்துக் கொண்டேன்.

"அவசரப்படாதே" என்றான் கோட்ஸ். "பத்துப் பைசாவுக்குப் பொருள் கிடைக்குதான்னு பார்க்க உன்னை அனுப்பின எடிட்டர் புத்திசாலியா, அல்லது அவரை சிரியஸா எடுத்துக்கிட்டு அலைஞ்ச நாம புத்திசாலியான்னு பூவா தலையா போட்டுப் பார்ப்போம்.."

அந்த பத்து பைசாவை என்னிடமிருந்து வாங்கிச் சுண்டினான் கோட்ஸ்!

— குல்ஸ்





• முதலில் சாமி கும்பிட்டு...

• ஹிகின்பாதம்ஸ் : ஒன்றரை மணி நேரம்!

• ரத்னா ஸ்டோர்ஸில் ரெயின்கோட்

• "புடைவை பிடிச்சிருக்கா அக்கா...?"

ஷாப்பிங் கிளம்புவதற்குமுன் சாமி கும்பிடும் பழக்கம் எத்தனை பேருக்கு இருக்கும்...? பரமேசுவரிக்கு இருக்கிறது! பரீட்சை நேர பயபக்தியுடன் கண்மூடி ஒரு நிமிடம் தியானம் செய்து புறப்பட்டார்.

அசோக் நகரில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் படிக்கிறார் பரமேசுவரி. பிளஸ் ஒன் வகுப்பு. பத்தாம் வகுப்பில் ஸ்கூல் ஃபர்ஸ்ட் வந்த அவருக்கு ஏன் ஒரு பரிசாக ஷாப்பிங் அனுபவத்தைத் தரக்கூடாது என்று யோசித்தோம். தலைமையாசிரியையிடம் அனுமதி கேட்டோம். மகிழ்வுடன்





• ஸ்கூலுக்கு ஒரு வால் கிளாக்



• நாயுடு ஹால்: "போட்டோவுக்காக போஸ் கொடுங்க..."

சம்மதித்து அரை நாள் லீவும் கொடுத்தனுப்பினார்.

"உங்கள் பட்ஜெட் இரண்டாயிரம் ரூபாய்" என்று பரமேசுவரியிடம் முன் கூட்டியே சொல்லியிருந்ததால் அவர் அதற்கேற்ப ஷாப்பிங் லிஸ்ட் போட்டு வைத்துக் கொண்டு தயாராயிருந்தார்.

மேட்டுப்பாளையத்தில் உள்ள அவர் வீட்டிலிருந்து அப்பா அம்மாவுடன் புறப்பட்டார். முதலில் 18-K பஸ் பிடித்து ஹிகின்பாதம்ஸ்.

ஆசை ஆசையாகப் புத்தகங்களைப் புரட்டினார் பரமேசுவரி.

இரண்டேகால் நிமிஷத்தில் ஒரு செலக்ஷன்!

கிரவுண்ட் ஃப்ளோரில் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம்; அப்புறம் மாடியில் பாடப் புத்தகங்களைக் கவனமாக ஆராய்ந்தார். கடைசியில் பில் போட கவுன்டருக்கு வந்தபோது ஆக்ஸ்போர்ட் டிக்ஷனரி, ஜெனரல் நாலெட்ஜ், பயாலஜி, அடிப்படை விஞ்ஞான உண்மைகள், ஜுவாலஜி என்று அத்தனையும் பாட சம்பந்தமான புத்தகங்கள். ஒரு கதைப் புத்தகம், நாவல்.... ஊஹூம்...! ஒரு ஜோக் புக் கூட இல்லை!

"விட்டால், இப்பவே மெடிகல் காலேஜ் என்ட்ரன்ஸுக்குப் படிக்க ஆரம்பிச்சுடுவீங்க போலிருக்கே..." என்று நாம் கமென்ட் அடித்தபோது சிரித்துக் கொண்டார்.

ஹிகின்பாதம்ஸ் பில் 482 ரூபாய். ஷோரூம் மானேஜர், பரமேசுவரி பற்றிய விவரம் அறிந்ததும் மேலும் ஐம்பது ரூபாய்க்கு எது வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்துக் கொள்ளச் சொன்னார். அந்த போனஸ் தொகையில் பேனாக்கள், பென்சில்,



"வரவர என் மாமியார் பண்றது கொஞ்சம் கூட நல்லா இல்லே."

"ஏன்?"

"ரெண்டு நாள் வெளியூர் போறதால, என்னைத் திட்டிப் பேசி கேசட்ல பதிவு பண்ணி வெச்சிருக்காங்களாம். போரடிச்சா போட்டுக் கேளுன்னு சொல்லிட்டுப் போறாங்க!"

- வி. டி. பசுபதி

மைக்ரோடிப் பென்சில் என்று சின்ன ஐட்டங்கள் வாங்கிக் கொண்டார் பரமேசுவரி.

அடுத்த 'ஹால்ட்' நாயுடு ஹாலில்... சரியாக இரண்டேகால் நிமிடங்களில் ஒரு மஜந்தா கலர் சல்வார் செட்டை தமக்கெனத் தேர்ந்தெடுத்துவிட்டார் பரமேசுவரி! (கின்னஸ் சாதனை?)

"இவ்வளவு வேகமாக செலக்ட் பண்ணிட்டீங்களே; போட்டோவுக்காகத் திரும்பவும் போஸ் கொடுங்க..." என்று கேட்டுக் கொள்ளும்படியாகிவிட்டது.

"அடுத்தபடி எங்கே போகலாம்?"

"சைக்கிள்ல ஸ்கூலுக்குப் போறா. அவளுக்கு ரெயின் கோட் இருந்தா சௌகரியம்" என்றார் பரமேசுவரியின் அப்பா, பாலசுந்தரம்.

ரத்னா ஸ்டோர்ஸின் மாடியில் ரெயின் கோட் தேர்வு செய்து கொண்டு காஷ் பாலன்ஸைப் பார்த்தபோது 918 ரூபாய் மீதம் இருந்தது.

"அக்காவுக்குப் புடைவை வாங்கணும்" என்றார் பரமேசுவரி. நல்லிக்குள் நுழைந்தோம். பெங்கால் காட்டன் - திரும்பவும் மஜந்தா கலர்தான்! இம்முறை 2¼ நிமிடங்களல்ல, ஐந்து நிமிடங்கள் ஆனது, செலக்ஷன் முடிக்க...

நெல்சன் வாட்ச் கம்பெனி.

"எங்க ஸ்கூலுக்கு ஒரு வால் கிளாக் வேணுங்க..." என்று கேட்டார் பரமேசுவரி. கறுப்பு டயலும் அழகான கண்ணாடி விளிம்பும் கொண்ட அஜந்தா கலர் கடிகாரம்... பாக் செய்து வாங்கிக் கொண்டு வெளியே வந்தால்...

பரமேசுவரி முகத்தில் ஏக டென்ஷன்! "இன்னைக்கு மத்தியானம் அரை நாள் லீவ் போட்டுட்டு ஷாப்பிங் வந்துட்டேன்... நாளைக்கு நான் பிஸிக்ஸ் டெஸ்ட் எழுதி ஆகணும்.லேட் ஆயிடுச்சு; வீட்டுக்குப் போகலாமா? நான் படிக்கணும்..."

- பரமேசுவரி இப்படிச் சொன்னபோது மாலை மணி ஆறரை.

"இன்னும் கிட்டத்தட்ட அறுநூற்றைம்பது ரூபாய் பாக்கி இருக்கே...?"

"படிக்கிறதுக்கு டேபிள் லாம்ப் வேணும்னு கேட்டுக்கிட்டிருக்கா... அதை வாங்கிடலாமா...?"

"நீங்களே போய் வாங்கிட்டு வந்துடுங்கப்பா. நான் வீட்டுக்குப் போய்ப் படிக்க ஆரம்பிக்கிறேன்..."

புறப்பட்டு விட்டார் பரமேசுவரி. அசோகா எலக்ட்ரிகல்ஸில் ஒரு மேஜை விளக்கு வாங்கிக் கொண்டு கிளம்பினார் பாலசுந்தரம்.


"கல்கியில பரிசு கொடுத்தது போதாதுன்னு நாம போன ஒவ்வொரு கடையிலயும் பரமேசுவரி பற்றித் தெரிஞ்சதும் டிஸ்கவுண்ட் கொடுத்தாங்களே... மகிழ்ச்சியான விஷயம்" என்றார் பாலசுந்தரம்.

வீடு திரும்பி பரமேசுவரியிடம் மீதியிருந்த நூற்றியறுபது ரூபாய் பற்றி நினைவூட்டினோம். "என் ஃப்ரெண்ட்ஸுக்கு சின்னப் பரிசுகள் வாங்கணும். அவங்களுக்குத் தெரிஞ்ச கடையிருக்கு, அழைச்சிட்டுப் போய் வாங்கித் தரட்டுமா...?" என்று கேட்டார்.

"ஓ.கே." சொல்லிவிட்டு நாம் புறப்பட, படிப்பில் மூழ்கினார் பரமேசுவரி.

— அலமேலு கணேசன்

படங்கள் : **யோகா**



"பஸ்ஸிலே வந்தது என்னோட தம்பிதான்னு தெரிஞ்சும் அவன்கிட்டே பிக்பாக்கெட் அடிச்சிருக்கியே, இது நியாயமா மாயாண்டி?"

"சைக்கிள்லே லைட் இல்லாம வந்தது என்னோட அண்ணன்தான்னு தெரிஞ்சும் அவர்கிட்டே 'மாமூல்' வாங்கியிருக்கீங்களே, அதுமட்டும் நியாயமா?"

- எஸ். இராஜேந்திரன்

இரட்டை அறைகள்

கி. ராஜேந்திரன்

இடியோசை கேட்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள் ரஸியா. 'மழை கொட்டப் போகிறதா? மின்னல் வெட்டுமா? ஜன்னல்களை சாத்தி விட்டுப் படுப்பது நல்லது...'

கட்டிலை விட்டு இறங்கினாள். அப்போது அந்தக் குரல் கேட்டது. 'ஐயோ! ஐயய்யோ!'

பரபரப்புடன் ஜன்னல் வழியே பார்த்தாள். எதிர் சாரியில் ஒரு வீடு தள்ளி அந்தப் பெரிய கட்டடம் இருந்தது. "அகில பாரத ஹிந்து பரிவார்" என்று போர்டு தொங்கும். இருட்டில் சரியாகத் தெரியவில்லை. ஆனால் ஒரு ஜன்னல் வழியே தீ ஜுவாலையைப் பார்க்க முடிந்தது. தெருவோர சோடியம் வேப்பர் விளக்கொளியில் புகை மேகங்கள் கருண்டெழுந்தன.

'அந்தக் கட்டடத்தின் மீது இடி விழுந்து தீப்பற்றிக் கொண்டதா? 'ஐயோ' என்று அலறியது யார்? காவல்காரனா?' அனுதாபம் பொங்க உடனே அங்கு போய் உதவத் தோன்றியது. ஆனால் இந்த இரவு நேரத்தில் வெளியே போவது அப்பாவுக்குத் தெரிந்து விட்டால் கொன்றே போட்டு விடுவார்.

அவள் எப்போதுமே டார்ச் லைட்டுடன்தான் படுப்பது வழக்கம். இரவில் ஓரிருமுறை எழுந்து டார்ச் அடித்து மணி பார்ப்பாள். காலை ஐந்து மணிக்குப் படிக்க உட்கார்ந்து விடுவாள். இப்போது சுவர் கடி காரத்தில் மணி இரண்டரை. பக்கத்து அறையில் அப்பாவும் அம்மாவும் அசந்து தூங்கினார்கள். அங்கே ஜன்னல்கள் தெருவைப் பார்க்க இல்லை. எதிர்ப்புறம். அவளுக்கு வயதுக்கு வந்த பிறகு அவர்கள் தங்கள் படுக்கை அறைக் கதவைத் தாளிடுவதில்லை. அதில் இருவகை பாதுகாப்பு இருப்பது எண்ணி அவள் தனக்குள் சிரித்துக் கொண்டதுண்டு.

மாடிப் போர்ஷன் அவர்களுடையது. ரெண்டு பெட்ரூம்; கிச்சன்; பாத்ரூம்; மாதம் ஆயிரத்து ஐந்நூறு விழுங்கிய 675 சதுர அடி. பாத்ரூம் கதவை வெளிப்புறம் திறந்தால் ஒரு சிறிய 5X5 வராந்தா. அதிலே மரப்படி. ஏறினால் மொட்டை மாடி. ஆவலும் குறுகுறுப்பும் ஓர் அசட்டுத் துணிச் சலும் சேர அவளுக்கு டார்ச் ஒளி வழிகாட்டி அழைத்துப் போனது.

மொட்டை மாடி. திறந்தவெளியில் குளிர் ஜில்லென்று தாக்கியது. துப்பட்டாவை தலைக்கு மேலாகக் கொண்டு போய் காதுகளை மறைத்து இழுத்துப் போர்த்திக் கொண்டாள். கைப்பிடிச் சுவர் அருகே நின்ற போது, புகை அடங்கி இப்போது இடிபாடுகள் தெரிந்தன. 'இடிக்கு இத் தனை சக்தியா?' அண்ணாந்து பார்க்க, நட்சத்திரங்கள் பரிகசித்தன.

'இடி விழவில்லை; குண்டு வெடித்திருக்கிறது!' சிலீரென்று உண்மை நெஞ்சில் இறங்கியது, கூரிய ஐஸ் கத்தி போல. அதனால் உசுப்பி விடப் பட்டு இருதயம் 'பக் பக்' என்று உரக்கத் தாளம் போட்டது.

"யாருடா அது!, பிடிடா அவனை!" அகில பாரத ஹிந்து பரிவார் அமைப்பின் சென்னைக் கிளையின் காவலாளி. முன்பு "ஐயோ! ஐயய்யோ!" என்று அலறியதும் இவன்தானோ?

திபுதிபுவென்று ஒருவன் தெருவில் ஓடிவந்து சாலையோர மரத்தின் மறைவில் பதுங்கி, சுவர் ஏறி...

'அடப்பாவி! நம் வீட்டின் தோட்டத்தில் அல்லவா குதிக்கிறான்!'

ரஸியாவின் பயம், திகிலாக மாறியது. தான் மொட்டை மாடிக்கு வந்ததே தப்பு! பாதுகாப்பான தன் அறைக்கு உடனே திரும்பி, கட்டிலில் சுருண்டு, போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு கொட்டக் கொட்ட விழித்திருக்கலாமே தவிர...

பின்நோக்கி இரண்டு அடி எடுத்து வைத்தவளின் காலில் ஏதோ தட்டுப்பட, என்னமோ ஏதோ என்று துள்ளி டார்ச் ஆன் செய்த போது...

1


துண்டிக்கப்பட்ட ஒரு கரம் கருகி, கறுப்பாக அங்கு விழுந்து கிடந்தது. ரத்தம் கசிந்து தரையில் பரவிக் கொண்டிருந்தது. 'ஐயோ' என்று அலற எண்ணிய ரஸியாவின் வாய் திறந்ததே தவிர, சத்தம் ஏதும் - வரவில்லை.

'இதையா மிதித்தோம்?' அருவருப்புடன் உள்ளங்காலை மொட்டை மாடியின் சொர சொரப்பான தரையில் தேய்த்தாள். 'எப்படி இது இங்கு வந்தது...? காக்காய்... கழுகு... சே! இராது. சாயந்திரம் இங்கு வந்தபோது இதைப் பார்க்கலையே! குண்டு வெடித்த போது தாக்குண்ட ஒரு மனிதனின் உடல் சிதறி, கரம் துண்டிக்கப்பட்டு, தூக்கி யெறியப் பட்டு இங்கு வந்து விழுந்திருக்கிறது.'

வயிற்றைக் குமட்டியது. சுவர் ஓரமாக குந்தினாற்போல் உட்கார்ந்து மென்று விழுங்கி சுதாரித்துக் கொண்டாள். சுவர் ஏறிக் குதித்தவனின் நினைவு வர, கிடுகிடுவென்று படிகளில் இறங்கி வராந்தா கதவை நெருங்கி உள்ளே அடியெடுத்து வைக்க, மலைப்பாம்பு ஒன்று அவள் கழுத்தைச் சுற்றி வளைத்தது... அல்லது மலையாளப் பேய்க் கதைகளில் வருகிற ஓர் அமானுஷ்ய சக்தி... இரண்டுமில்லை, இது ஒரு மனிதனின் கரம்தான். அது சத்தம் எழாதவாறு குரல்வளையை நெரிக்க, ரஸியாவுக்கு திமிரவும் தோன்றவில்லை.

"இதோ பார்... நீ மொட்டை மாடிக்குப் போனது, நான் சுவர் ஏறிக் குதித்ததைப் பார்த்தது; என்னிடம் நீ சிக்கியது





உ

லாபம்

எத்தனையோ நிதி நிறுவனங்கள் மற்றும் பெனிஃபிட் ஃபண்டுகள் இருக்கையில் ஹார்வெஸ்ட் நிதி - இதில் மட்டும் என்ன விசேஷம்?

ஹார்வெஸ்ட் நிறுவனத்தின் இயக்குநர்கள், தொழில் உலகில் நல்ல தொடர்பு கொண்டவர்கள். நடுத்தர வர்க்க முதலீட்டாளர்கள், தங்கள் பணத்திற்கான பாதுகாப்பு குறைந்துவிடாமல், தங்கள் சேமிப்புக்குத் தேவைப்படும் அதிக வருமானங்களுக்கு இடையே சமநிலை இருக்க வேண்டும் என்று இந்த இயக்குநர்கள் கருதினார்கள். இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய, சாத்தியமாகக் கூடிய கோட்பாடு ஒன்றை இவர்கள் தீர்மானித்தார்கள்.

கே : ஹார்வெஸ்ட் கோட்பாடு – தெளிவான விவரம் தெரிய வேண்டுமே?

ப : வணிகம் மட்டுமே அதிக வட்டி விகிதங்களை வழங்க முடியும் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இயக்குநர்கள் கொண்டுள்ள வணிகத் தொடர்புகளால், ஹார்வெஸ்ட் நிறுவனம் அதிக அளவில் உறுப்பினர்களைப் பெற்றுள்ளது. தனிப்பட்ட உறுப்பினர்களுக்கான கடன்களுக்கு உச்ச வரம்புடன், இவர்களுக்குப் பிணையத்தின் பேரில் கடன்களை வழங்க முடியும். இதன் மூலம், கடன் பெறுவோரில் ஒரே ஒரு தனி நபர் அல்லது ஒரு குழுவின் கைகளில் அதிக விலையுள்ள நிதிகள் திரண்டு விடுவது தடுக்கப்படுகிறது. கடன் வழங்குவதில் உள்ள நஷ்ட அபாயமும் நீக்கப்படுகிறது.



மதக் கலவரமா? இங்கா?
கேரள முதல்வர்
ஏ.கே. ஆண்டனி
சிறப்புப் பேட்டி!
பக்கம் 73ல்

எதைப் பற்றியும் யாரிடமும் மூச்சு விடாதே! தப்பித் தவறி பேசினாயோ, தொலைந்தாய்! சாகடிக்க மாட்டேன்! செத்துப் போனாலே தேவலாம் என்று நினைக்குமளவில் பழி வாங்குவேன்! புரிந்ததா?"

'புரிந்தது! இவனைக் கண்டு நான் மட்டு மல்ல; என்னைக் கண்டும் இவன் பயப்படு கிறான். குரலை மாற்றிக் கொண்டு அடித் தொண்டையால் மிரட்டுகிறான்...' கொஞ்ச மாய்த் துணிவு பிறக்க, கையில் டார்ச் லைட் இன்னமும் இருப்பது நினைவு வந்தது. அதை ஆயுதமாகப் பயன்படுத்த முடியும் என்று கூட அவள் தன் படுக்கை அறையில் தனித்து இருக்கும் போது கற்பனை செய்து பார்த்ததுண்டு. இப்போது அந்த அளவுக்கு தைரியம் வரவில்லை. ஆனால் ஸ்விட்சைத் தட்டி டார்ச்சை உயர்த்துவதில் என்ன தப்பு?

அவன் கண்கள் கூச சட்டென்று இறுக்கி மூடிக் கொண்டான். அதற்கு முன்னால் அந்தக் கண்மணிகளின் நீலநிறம் வித்தியாசமாக அவள் கவனத்தைக் கவர்ந்தது. சிவந்த முகத்தில் கருகருவென்று ஒரு நாள் தாடி. அளவுக்கு அதிகமான அடர்த்தியான புருவங்கள். எடுப்பான மூக்கில் அலாதியான ஒரு பளபளப்பு. காதுகளில் ஒன்றில் லோலாக்கு. ஹிப்பி பாணியில் ஏரான கேசம்; டி. ஷர்ட்டுக்கும் மேலாக எட்டிப் பார்த்த மார்பு முடி; திரண்ட தோள்கள்; தன்னைச் சுற்றி வளைத்து ஆண்மையின் ஆளுமையை உணரச் செய்த கரங்கள்.... நிரந்தரமாய் இப்படி சிறைப்பட்டிருந் தால்தான் என்ன... சீச்சீ! உடல் ரசாயனத்தை அறிவு அதட்டி விரட்டியது.

"ரஸியா" - உள்ளேயிருந்து அம்மாவின் குரல்.

"இதோ வரேன்."

பிடியைத் தளர்த்தி, "நினைவிருக்கட்டும்" என்றான் அவன். வராந்தா சுவர் ஏறி, அந்தப் பக்கத்தில் மழைநீர் இறங்கும் பைப் வழியே சறுக்கி இறங்கி ஓடி மறைந்தான்.

"என்னமடீ அங்கே?"


"வேறென்ன, தேவதைகள் அழைத்தால் நடுராத்திரியானாலும் எழுந்து வரத்தானே வேணும்?" ரஸியா பிளஷ்டாங்கை இழுத்து விட்டாள். தண்ணீர்ப் பஞ்சம் உள்ள சென்னையில் நாலு சொம்பு நீர் வீணாகிப் போனது.

தூரத்தில் போலீஸ் சைரன் ஒலித்தது. "மெல்ல வாங்க, என்ன அவசரம்?" என்று பரிகசித்தபடியே படுத்தாள். ஒன்றன் பின் ஒன்றாக ஓர் இரவுக்குள் எத்தனை அதிர்ச்சிகள்! கண்களிலிருந்து தூக்கம் துடைக்கப் பட்டு விட்டது. தலைக்கு மேலே மொட்டை மாடியில் ஒரு கரம் துண்டிக்கப்பட்டுக் கிடக்கிறது! வேறொருவனின் வலிமையான கரங்கள் என்னைச் சுற்றி வளைத்த இடங்கள் இன்னமும் வலிக்கிறது. அவன் முகத்தில் ஏதோ வித்தியாசமாகத் தோன்றியதே... என்ன அது?

காலையில் ரஸியா வழக்கத்துக்கு மாறாக ரொம்ப நேரம் தூங்குவது அவள் தாயாருக்கு ஆச்சர்யம் அளித்திருக்க வேண்டும். ஆனால் அதற்குள் குண்டு வெடிப்பு சம்பவம் எல்லாருக்குமே தெரிந்து போக, தெருவே பரபரப்பாகி விட்டிருந்ததால் மெஹருன்னிசா தன் மகளைப் பற்றி நினைத்துப் பார்க்கவில்லை.

'பிறமதங்களை எதிர்ப்பதல்ல நோக்கம்; இந்து மதத்தைப் போற்றுவதே லட்சியம்; இந்தியனாய் வாழ்வதே சாத்தியம்' என்று தனது பேரியக்கப் பணிகளை மூன்றே வரிகளில் அடக்கிய அகில பாரத ஹிந்து பரிவாரின் சென்னைக் கிளை அலுவலகத்தில் அதிர்ஷ்டவசமாக அந்த இரவு நேரத்தில் யாரும் இல்லை. அதனால் கட்டடத்துக்குச் சேதம் ஏற்பட்டதேயொழிய, யாரும் உயிர்ப் பலியாகவில்லை.

வாட்ச்மேன் ஒருவன் மட்டுமே இருந்திருக்கிறான். குண்டு வெடித்ததும் அதிர்ச்சி அடைந்து சற்று நேரம் வாயடைத்துப் போனவன், பிறகு "ஐயோ" என்று அலறியிருக்கிறான். தலைசுற்றி மயக்கமாய் வந்திருக்கிறது. அதை சமாளித்துக் கொண்டு தடுமாறி எழுந்து பார்த்தபோது, நிழலுருவாக ஒரு ஆள் நடமாட்டம் தெரிய, "யாருடா அவன்! பிடிடா அவனை" என்று கூச்சல் போட்டிருக்கிறான். ஆனால் அவனைத் தொடர முடியாதபடி தடுத்தது, குண்டு



"இந்த ஊர் ஜனங்க மேல தலைவர் கோபமா இருக்கார்!"

"ஏன்?"

"எடைக்கு எடை மனு குடுக்கறாங்களாம்!"

— அம்பை தேவா

வெடிப்பிலே காலில் பாய்ந்து பதிந்து விட்ட ஒரு மரச் சில்லு. ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை நடக்கிறது. உயிருக்கு ஆபத்தில்லை...

ரஸியா குளித்து, சோப்பு மணக்க மணக்க புத்தாடை தரித்து, முக ஒப்பனைக்கு கண்ணாடி முன் நின்றாள். அவன் முகத்தருகே இரவு டார்ச் ஒளியில் பார்த்த அந்த முகமும் தெரிந்தது! 'ஹிந்து பரிவார் அலுவலகத்துக்கு அவன் ஏன் குண்டு வைக்க வேண்டும்? அவனுடன் ஒரு கூட்டாளியும் இருந்திருக்கிறான். அவன் கரம் தான் இப்போதும் மொட்டை மாடியில் இருக்கிறது. தன் உயிரையே கொடுக்கும் அளவுக்கு ஏன் இந்தப் பகை? அம்மா மெஹருன்னிஸா, அப்பா சுந்தரவதனத்தைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு, ரஸியாவாகிய என்னைப் பெற்றெடுத்து கான்வெண்ட் பள்ளிக்கு அனுப்பவில்லையோ? அங்கே மாதா கோயிலில் மேரி அன்னையிடம் நான் தினமும் பிரார்த்திக்கவில்லையோ? அப்படி எல்லாரும் பரந்தமனப்பான்மையுடன் இருந்தால் என்ன? இம்மாதிரி குண்டு வெடிப்பு சம்பவங்களும் நிகழாது; நான் பயந்து சாகவும் நேராது.'

ஆனால் அந்த பயம் கலந்த நினைவுகளில் ஒரு சுவாரஸ்யம் இருப்பதை ரஸியா உணர்ந்தாள். போலீஸ்காரர்கள் அந்த இடிபாடுகளுக்கிடையில் தடையங்களைத் தேடுவார்கள். தேடட்டும்! அவர்களுக்குத் தெரியாத பல விஷயங்கள் தனக்குத் தெரியும். எவ்வளவு த்ரில்!

பிளஸ் டூ புத்தகச் சுமையுடன் பள்ளிக் கூடம் நோக்கி நடந்த போது ஏற்கெனவே இருந்த போலீஸ் மாருதிகளுக்கு இடையில் மந்திரி ஒருவரின் அம்பாசிடர். "என்னங்க இப்படி நடந்து போச்சு; சி.எம். ரொம்ப அப்செட் ஆயிருக்காரு" என்று சொல்லிக் கொண்டே இறங்கிய மந்திரிக்கு காக்கி அதிகாரிகள் சல்யூட்.

"டிராஜிக்தான் ஸார்; கண்டுபிடிச்சுடலாம்; வி வில் புக் தெம்" என்ற ஐ.ஜி.

"பம்பாயில் நடந்ததுக்கும் இதுக்கும் முடிச்சுப் போட்டு சி.பி.ஐ.கிட்டே ஒப்படைச்சுடலாமான்னு சி.எம். கேக்கறாரு."

"எதுக்கு ஸார், வேணாம், தலைகுனிவு."

"அப்படின்னா ஒரு டைம் லிமிட் சொல்லுங்க. அதுக்குள்ள கண்டுபிடிங்க. இல்லே, சி.பி.ஐ.க்கு வழி விட்டு விலகுங்க."

அப்போது ஒரு மோட்டார் சைக்கிள், இன்ஜின் ஆஃப் ஆகி வந்து ஓசைப்படுத்தாமல் நிற்க, "திங்க் ஆஃப் தி டெவில் அண்ட் தேர் ஹி இஸ்" என்றார் ஐ.ஜி. "சி.பி.ஐன்னு பேசினதுமே இன்பசாகரன் வந்து நிற்கிறாரு!"

"ஏங்க தமிழ்ல சிந்திக்கவே மாட்டீங்களா? 'நினைத்தேன் வந்தாய் நூறு வயது'ன்னு சொல்றது" என்றான் இன்பா.

மந்திரிக்குக் கரம் குவித்து ஐ.ஜிக்கும் கரம் நீட்டுவதற்கு முன் 'களுக்'கென்ற சிரிப்பு அவனைத் திரும்ப வைக்க... ரஸியா.

மெல்ல மெல்ல போலீஸ் கார்டனை அணுகி, அவர்கள் பேச்சு காதில் விழும் அளவுக்கு நெருங்கி விட, இன்பசாகரன் ஐ.ஜியைக் கிண்டலடித்தது அவளுக்குச் சிரிப்பை வருவித்து விட்டது.

கொஞ்சம் டைட்டான லைட் கிரீன் கான்வெண்ட் யூனிஃபார்ம், இரட்டைப் பின்னலில் அவள்; லைட் கிரே ஸஃபாரியில் அவன். கம்பீரம் ஸபாரி தந்ததல்ல. அவன் அந்த உடைக்கு அளித்தது.

'சம்பந்தமில்லாத விஷயத்தில் மூக்கை நுழைப்பதில் என்ன ஆர்வம் இந்தப் பெண்ணுக்கு!' என்று நினைத்தான் இன்பசாகரன். அத்துடன் 'என்ன அழகு.'

தான் நெருங்கி நின்றது, கேட்டது, சிரித்தது எல்லாமே தப்பு என்று உணர்ந்து சற்றே கலக்கமும் வெட்கமும் அடைந்து திரும்பிப் போக யத்தனித்தாள். ஆயினும் இன்னொரு தடவை இன்பசாகரனை ஏறிட்டுப் பார்ப்பதைத் தவிர்க்க முடியவில்லை. பட்டாம் பூச்சி இறகுகளாக மாறிய கண்ணிமைகள்.

இன்பசாகரன் இதயத்தில் இரண்டு விஷயங்கள் பனிச்சிட்டன. சி.பி.ஐ.யைச் சேர்ந்த தனக்கு போலீஸிடம் ஒத்துழைப்புக் கிடைக்காது. இந்தப் பெண்ணுக்கு குண்டு வெடிப்பு தொடர்பாய் ஏதோ தெரியும் என்பது போலீஸுக்குத் தெரியாது!

(தொடரும்)



தேடிவந்த ராசா

மறுபடியும் ராமராஜன்! எத்தனை நாளாயிற்று பார்த்து? கொஞ்சம் குண்டாகி இருக்கிறார் தோற்றத்தில். நடிப்பில்? பழையபடியே லெஃப்ட் அண்ட் ரைட் வந்து போகிறார். எம்.ஜி.ஆர். சமாதி எதிரே, வேண்டுதல் போல் விழுந்து விழுந்து எழுகிறார். அப்புறம் பஞ்சு மிட்டாய், பாப்கார்ன் கலர் சட்டைகளில் ஃபேஷன் பரேட் நடத்துகிறார். ஜோடியை கவனியுங்கள், குஷ்! கிட்டத்தட்ட ஹீரோயின் சப்ஜெக்ட் என்பதால் திரை முழுக்க பூ!

பாக்யராஜ் பாணியில் கதையைத் தொடங்கும் புதிய இயக்குநர் பூபதிராஜாவுக்கு, என்ன சொல்ல வேண்டும் என்பதில் இருக்கும் தெளிவு, எப்படிச் சொல்ல வேண்டும் என்பதில் இல்லை.

பாருங்கள், திடீரென்று ஒரு ஆசாமி கையில் குழந்தையோடு ஒரு க(ன்)னிப் பெண்ணிடம் வந்து 'ஹலோ, மனைவியே சுகமா?' என்று அதிரடியாக ஆரம்பிக்கிறாரென்றால் எப்படி நிமிர்ந்து உட்காருவோம்?

யார் அந்த ஆசாமி, ஏன் இப்படி வம்பு பண்ணுகிறார் - அதுவும் ஸ்ட்ராங் எவிடென்ஸோடு (நன்றி : சு. சுவாமி ஃபோட்டோ ஃபோர்ஜரி விவகாரம்) என்ன காரணமாயிருக்கும் என்று சஸ்பென்ஸை இடைவேளை வரை வெகு நேர்த்தியாக இழுத்துப் போகிறார்கள்.

ரப்சர் எல்லாம் அப்புறம்தான். சஸ்பென்ஸ் உடைக்க உருப்படியான வழி தெரியாமல் வழிந்திருக்கிறார்கள்.

சே, இவ்வளவுதானா என்று எழுந்தால், 'உட்காரு நைனா, இன்னும் எட்டு ரீலு பாக்கி இருக்குது' என்று தலையை அழுத்துகிறார்கள்.

போதாக்குறைக்கு இசைராசா வேறு 'மூடு' இல்லாமல் வேலை செய்திருக்க - தியேட்டர் கேன்டீனில் நல்ல கும்பல்.

நகைச்சுவைக்கு என்று கௌ-செ கூட்டணி இருப்பினும் டைரக்டரே ஒரு ஸோலோ நடத்தியிருக்கிறார் பாருங்கள், தூள்!

விளக்கினால்தான் புரியும். ஷாட்டுக்கு ஷாட் ஆடை மாற்றுவது போல ராமராஜனுக்கும் ஜனகராஜுக்கும் இதில் மீசை மாற்றியிருக்கிறார்கள்!

ரா.ரா. வீட்டுக்குள் வரும் போது எம்ஜியார் மீசை. வெளியே போகும் போது கட்டபொம்மன் மீசை. மீசையோடு அடுத்த அறைக்குப் போகும் ஜனா, மறுபடி வரும் போது நாயகன் ஸ்டைல்! இது ஒருமுறை, இருமுறை அல்ல! வணக்கம் போடுகிற வரை!

படத்தில் யார் யார் எத்தனை முறை மீசை மாற்றி இருக்கிறார்கள் என்று எண்ணிச் சொல்பவர்களுக்குக் குலுக்கல் முறையில் ஒரு கொக்ககோலா தர தயாரிப்பாளர் முன்வரலாம்.

அதற்காகவாவது கூட்டம் வந்தால் சரி!

— ஆர்.பி.ஆர்.

Kalki Shopping Page

KALKI SHOPPING PAGE

KALKI SHOPPING PAGE

KALKI SHOPPING PAGE

புருஷேஷு ராமா : புஷ்பேஷு ரோஜா, நாரீஷு ரம்பா : நகரேஷு காஞ்சி

நடராஜ் எஸ்டேட்ஸ்

TEMPLE CITY OF INDIA - என்று
புகழப்படும் **காஞ்சி** நகருக்கு அருகில்,
பெங்களூர் -சென்னை நெடுஞ்சாலையை ஒட்டி

2 கிரவுண்ட் - 4800 ச. அடி நிலபரப்பில் -
10 தேக்கு மரங்களுடன்

அழகிய காட்டேஜ்

❑ மற்றும் தென்னை, மா, பலா, வாழை, கொய்யா, மாதுளை, சப்போட்டா, எலுமிச்சை, பப்பாளி, காய்கறிகள், பூச்செடிகள் - மேலும் பொழுது போக்கும் வசதிகளுடன் தயாராகிறது. ❑ உங்கள் குடும்பத்துக்குத் தேவையான பூக்கள், காய்கள், பழங்கள், - ஆகியவற்றை 5 ஆண்டு காலத்துக்கு விளைவித்தும், பராமரித்தும் தருகிறோம். ❑

மாதத் தவணை : ரூ.1000, ரூ.2000, ரூ.5000 - மொத்தமாக பணம் செலுத்துபவர்களுக்கு 10% விலை குறைப்பு உண்டு.

Phone : 4342098, 4840150

NATARAJ ESTATES (Farm House Promoters)
"Shanthi Complex" 3rd Floor, 26, Ranganathan Street, T. Nagar,
Madras - 600 017. B.O. Kancheepuram - 631 501
Tanjore Office : 2-B, Selvam Nagar, T.P.S. Bus Stop,
Medical College Road, Thanjavur - 613 007.

NATARAJ GROUP OF COMPANIES :
**NATARAJ FINANCE, NATARAJ CHITS (TAMIL NADU) PVT. LTD.,
NATARAJ EXPORTS OVERSEAS, NATARAJ OIL MILLS,
NATARAJ PUBLICATIONS.**

BEST PLACE TO PURCHASE BEST QUALITY SAREES

MADURAI TEXTILES

RANI SAREES

**MADURAI SUNGUDI SAREES
BENGAL CUTTON SAREES**

A SHOWROOM FOR EXCLUSIVE CUTTON SAREES

BRING THIS ADVERTISEMENT CUTTING AND AVAIL

10% DISCOUNT UPTO 12-8-95.

MADURAI TEXTILES

2 SIVAPRAKASAM ROAD.
PONDY BAZAAR, MADRAS - 600 017.

KALKI SHOPPING PAGE

ஆடி மாத சிறப்புத் தள்ளுபடி!

10% TO 30%

1.8.95 முதல் 10.8.95 வரை

ரூ. 120/- முதல் ரூ. 6000/- வரை

அனைத்து ரகங்களுக்கும்

BMSS

B.M. சில்க் சாரீஸ்

No. 5 வடக்கு மாட வீதி,
கபாலீஸ்வரர் கோவில் அருகில்,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
போன் : 4940291

All Credit Cards Accepted



SREE KRISHNA

CUT PIECE COLLECTION PVT. LTD.


THE SHOP FOR WHOLE FAMILY
39 GODOWN STREET, MADRAS - 1 PH: 589596

(WHOLESALE DIVISION FOR CUT-PIECES & SAREES MANUFACTURER - WHOLE SALER - RETAILER AVAILABLE AT EX-MILL PRICES)

EXCLUSIVE MATCHING BLOUSES

specialists in suiting, shirtings cut-pieces summer cotton sarees madurai chungudi cotton, belgaum pattu silks benaras silks venkatagiri bengal cotton and churidar

Kalki Shopping Page





1995 ஆகஸ்ட் 6
யுவ ஆடி 21
மலர் : 54
இதழ் : 1

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ரஜினி ராஜ்ஜியம்!

தமிழ்நாட்டில் நிலவி வரும் வெடிகுண்டு கலாசாரம் குறித்து கவலைப்பட்டும் தமிழக அரசைத் தட்டிக் கேட்டும் 'பாட்ஷா' படவிழாவில் ரஜினிகாந்த் பேசியதை வரவேற்கலாம். நாட்டு நிலை குறித்த அவரது அக்கறை நிஜமானது என்பதில் சந்தேகமேயில்லை. அதிலும் அடிமட்டத்திலிருந்து படிப்படியாக சூப்பர் ஸ்டார் நிலைக்கு உயர்ந்தவர் என்பதால் அடித்தட்டு மக்களின் துன்பமும் பிரச்னைகளும் அவர் நன்கு அறிந்தவையே.

அரசியலிலும் அடிமட்டத்திலிருந்து தொடங்கி, நல்ல பயிற்சி பெற்று தலைவராக ஒருவர் உருவானால் அவரது மதிப்பே தனி. மாறாக, சினிமா செல்வாக்கு மூலமாக் திடீரென்று அரசியலில் நுழைந்து பொறுப்பான பதவிகளைப் பெறும் ஒருவர், தமது பொறுப்புகளைச் சிறப்பாக நிறைவேற்ற முடியாது.

எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று ஆட்சி அமைத்த போதிலும் அவர்களுடைய ஆட்சிக்குச் சரித்திரத்தில் போற்றுதற்குரிய இடம் கிடைக்கப் போவதில்லை.

ரஜினி, தம்மையும் இதுபோன்ற ஒரு நிலைக்கு உட்படுத்திக் கொண்டு விடக் கூடாது. அரசியலில் அவர் நேரடியாகப் பிரவேசித்தால், 'சினிமாவில் வன்முறையை ஆதரித்து, ஆராதித்த ஒருவர் இன்று சட்டம் பேசவும் காக்கவும் வந்து விட்டாரே!' என்ற குற்றச்சாட்டு எழும்.



சினிமா என்ற கற்பனை உலகுக்கும் அரசியல் என்கிற யதார்த்த உலகுக்கும் இடையே பெரிய இடைவெளி இருக்கிறது. இதை உணராத நிலையில்தான், "குண்டு வைத்திருப்பவர்களைப் பிடித்து தூக்கில் போடுங்கள்!" என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிறார் ரஜினிகாந்த். ஜெ.யின் கொடும்பாவி எரிக்கும் அநாகரிகம் தொடர்கிறது.

நேரடியாக அரசியலில் புகாமலே நாட்டு நடப்புகளைக் கண்காணித்து வழி நடத்தும் செல்வாக்கு இன்று ரஜினிகாந்திடம் இருக்கிறது. அதை அவர் முறையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.


சிறந்த கொள்கைகளுடைய ஒரு நேர்மையான அரசியல் தலைவரைத் தேர்ந்தெடுத்து 'இவர்தான் நான் ஆதரிக்கும் தலைவர்' என்று இனம் காட்டலாம்.

ரஜினியின் நோக்கில், அப்படியொரு தலைவரே இல்லை என்னும் பட்சத்தில், தமிழ் நாட்டின் தலைசிறந்த அறிஞர்களையும் சிந்தனையாளர்களையும் தேர்ந்தெடுத்து, அவர்களை ஆட்சி அதிகாரத்துக்கு ஆசைப்படாத ஒரு குழுவாக ரஜினிகாந்த் ஒருங்கிணைக்கலாம். தமிழ்நாட்டின் அனைத்துப் பிரச்னைகள் குறித்தும் விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து முடிவுகளும் தீர்வுகளும் அளிக்கும் ஒரு நிழல் அமைச்சரவையாக இந்தக் குழு செயல்படலாம்.

ரஜினியின் முயற்சியால் இப்படி ஒரு குழு செயல்பட்டதெனில், ஆட்சியில் இருக்கும் எந்த அரசாங்கமும் அதை அலட்சியப்படுத்த முடியாது! ஒருவேளை அறிஞர் குழு சொல்வதை ஏற்க அரசாங்கம் மறுத்தாலும் மக்களுக்காவது உண்மைகள் தெரியவரும்.

சிறந்த மனிதர்...?

உலகின் சிறந்த மனிதர் என்ற பட்டம் பெற்றுத் திரும்பியதுமே சின்னத்தனமான காரியம் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுக் கைதாவோம் என்று நடராஜன் எதிர்பார்த்



திருக்க மாட்டார்.

காவல் துறை சி.ஐ.டி. ஒருவரை அவரும் அவரது அடியாட்களுமாகச் சேர்ந்து நையப் புடைத்தார்கள் என்ற குற்றச்சாட்டை மறுத்து, அந்த சி.ஐ.டி.யை ஒரு விடுதலைப் புலி என்று சந்தேகித்து, போலீஸில் ஒப்படைத்ததாகக் கூறியுள்ளார் நடராஜன்.

வழக்கு பதிவான பிறகு அது குறித்து விமர்சிப்பது சரியல்ல. என்றாலும், இவ் விஷயத்தில் பலரும் நடந்து கொண்டிருக்கும் முறை வெட்கக்கேடானது என்று சுட்டிக் காட்டலாம்.

தமது கைகள் சுத்தமானவை என்று அறிவிப்பதற்காகப் பத்திரிகையாளர் கூட்டத்தை நடத்தியவர், அது உண்மையாயின், அங்கு கடமை ஆற்ற வந்த சி.ஐ.டி.யை அழைத்து, அவருக்குத் தாமே தேவையான விவரங்களைக் கூறி அனுப்பியிருக்கலாம்.

அப்படி சிறந்த மனிதராக நடந்து கொண்டிருந்தால், பிறகு கமிஷனர் முன்னால் நின்று தம்மைக் கைது செய்யுமாறு நடராஜன் சவால் விட நேர்ந்திராது. கமிஷனர் முதலில் கடமையாற்றத் தயங்கி, பின்னர் மேலிட அனுமதி பெற்றதால் பாய்வதற்கு முற்பட்டிருக்க மாட்டார்.

நடராஜன் பதுங்கித் தலைமறைவாகி, மீண்டும் வெளிப்பட்டு, நீதிமன்றத்தில் தம்மை ஒப்புவிப்பதாக நாடகமாட அவசியம் இருந்திருக்காது.

தனி நபர்கள், சட்டத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளும் அளவுக்கு, ஆட்சியில் இருப்பவர்கள் விருப்பு-வெறுப்புடன் செயல்படுகிறார்கள். அதனால் காவல் துறையினரும் தடுமாறிப் போகிறார்கள்.

இந்தச் சம்பவத்தில் நமது அனுதாபத்துக்கு மட்டுமின்றி, பாராட்டுக்கும் உரியவர், அடிபட்ட யதுகுல திலகனின் மனைவி ராஜகுமாரிதான். அவருடைய துணிச்சலும் நாட்டு நடப்பு பற்றிய சிந்தனைத் தெளிவும் பாராட்டுக்குரியன.



பேசலாம். இந்த உபகரணத்தை உங்கள் கதவின் பூட்டோடு இணைப்பதன் மூலம் கதவையும் பட்டனை அழுத்தித் திறந்து விட முடியும்.

விலை? பூட்டோடு சேர்த்துப் பதினெட் டாயிரம் ரூபாய் ஆகிறது! அம்மாடியோவ்! இத்தனை விலை கொடுத்து யார் வாங்கு வார்கள்? "லட்சக்கணக்கில் விலை கொடுத்து ஃபிளாட் வாங்குகிறவர்கள் தங்களின் பாது காப்புக்காக இந்தச் சிறு தொகையைச் செல வழிக்கத் தயாராகவே இருக்கிறார்கள்! இதை யறிந்து கொண்ட பிறகுதான் இப்படியொரு முயற்சியிலேயே இறங்கினோம். இப் போதைக்குத் தைவானி லிருந்து இறக்குமதி செய்தே இக்கருவியை விற்கிறோமென் றாலும் விரைவில் தைவான் கம்பெனியின் கூட்டுறவோடு இங்கேயே தயாரிக்கவும் ஆரம்பித்து விடுவோம்!'' என்கிறார் ரே-இம்பெக்ஸ் கம்பெனியின் சீப்-எக்ஸி கியூடிவ் டி. ராஜன்.

டி.வி. வாங்கப் போகிறீர்களா!

'எஸ்' பாண்ட் வசதியுள்ள எங்கள் டெலிவிஷன்



டி. வேணுகோபாலன்



டி. ராஜன்

(படம் : கேமரா திருஞானம்)

புதுசா என்ன வந்திருக்கு?

இனி உங்கள் வீட்டு காலிங்பெல் அடித்தால் நீங்கள் கதவைத் திறந்துதான் யாரென்று பார்க்க வேண்டும் என்ப தில்லை. கதவைத் திறக்காமலேயே - ஏன் நீங்கள் உட்கார்ந்தபடியே கூட வெளியில் வந்திருப்பது உங்களுக்கு வேண்டிய வர்களா அல்லது வேண்டாதவர்களா என்று டெலிவிஷனில் பார்ப்பது போல் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்! வேண்டி யவராக இருந்தால், ஒரு பட்டனை அழுத்து வதன் மூலம் உங்கள் வீட்டுக் கதவைத் திறக்க வைத்து அவரை உள்ளே வரச் சொல்லலாம். வேண்டாதவராக இருந்தால் அப்படியே பேசி அவரை அனுப்பி விட லாம். இதற்கு வந்து விட்டது, வீடியோ டோர் போன்!

சிறு கேமராவும் சிறு மைக்ரோபோனும் உள்ள ஒரு சிறு உபகரணத்தைக் கதவுக்கு வெளியில் பொருத்தி விட்டால் டெலி போன் மாதிரியே வீட்டுக்குள் இருக்கும் உப கரணத்தில் நீங்கள் சம்பந்தப்பட்டவரின் படத்தைப் பார்த்துக் கொண்டே ரிசீவரில்

களையே வாங் குங்கள்!'' என்று பல டி.வி. கம்பெனிக்காரர்களும் விளம்பரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஆப் டானிகா டி.வியினரோ "கேபிள் ரெடி சானல்கள் (இதுவும் 'எஸ்' பாண்ட்தான்) கொண்ட எங்கள் மாடல்களையே வாங்குங் கள்'' என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், பழைய டெலி விஷன்களை இனி குப்பைக்

கூடையில் போடுங்கள் என்கிற ரீதியிலும் விளம்பரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்!

ஆமாம், அது என்ன 'எஸ்' பாண்ட்? ஆப்டானிகா டீவியின் முதன்மை விற்பனை மேலாளர் பி. என். வேணுகோபாலன் முதல், பல்வேறு தொழில்நுட்ப வல்லுநர்களிடமும் பேசினோம்.

டெலிவிஷன் ஒளி-ஒலிபரப்புகளை மொத்தம் மூன்று விதமாகத்தான் செய்ய முடியும். VHF, UHF மற்றும் S - Band என் பவையே அவை. அதாவது சாட்டிலைட்டு களின் மூலமாகப் பூமிக்கு வரும் சிக்னல் களை இந்த மூன்றுவிதமான முறைகளில் மாற்றிக் கொடுத்தால்தான் நமது டெலி விஷன் பெட்டிகளில் அவை படமாகவோ காட்சிகளாகவோ தெரியும்!

இந்த மூன்றுவிதமான ஒளிபரப்பிலும் VHF-ல் 11, UHF-ல் 49, S - Band-ல் 28 என்று மொத்தம் 88 சானல்கள்தான் ஒளிபரப்ப முடியும். அதற்கு மேல் ஒளிபரப்பினால் டிராபிக் ஜாம் மாதிரி, சிக்னல் ஜாம் ஆகி நம் பெட்டிகளில் எல்லா சானல்களும் ஒட்டுமொத்தமாகத் தெரிய ஆரம்பித்து விடும்!

ராணுவம் போன்ற அரசாங்கச் செய்தித் தொடர்புக்கு மட்டுமென்றே சில தனி சானல்கள் தேவைப்பட்டதால், S - Band-ல் உள்ள 28 சானல்களையும் அரசாங்கச் செய்தித் தொடர்புகளுக்குத் தவிர வேறு எதற்கும் யாரும் பயன்படுத்தக் கூடாது என்று உலகம் பூராவிலும் ஒரு சட்டம்.

மீதமுள்ள VHF, UHF ஆகிய இரண்டை மட்டும் டெலிவிஷன் ஒளிபரப்புக்காக எடுத்துக் கொண்டார்கள். எல்லா டீவிக் களிலும் VHF, UHF ஆகிய இரண்டை மட்டுமே பெற்றுப் படம் காட்டுபவைகளாகச் செய்யப்பட்டன.

VHF-ஐயும் முழுக்க முழுக்க நமது தூர் தர்ஷன்தான் பயன்படுத்த வேண்டும்; அந்த அலைவரிசைகளில் வேறு யாரும் ஒளிபரப் பக் கூடாது என்று ஒரு சட்டம். இந்த நிலை யில் கேபிள் டீவிக்காரர்கள் என்னதான் செய்வார்கள்? UHF-க்குத்தான் போயாக வேண்டும் என்கிற நிலை.

அதிலும் ஒரு சிக்கல்! வருகிற சிக்னல் களை UHF-ஆக மாற்றி அனுப்புவதற்குரிய உபகரணங்கள் எக்கச்சக்கமான விலையுடை யவை. அதோடு UHF-ஆக மாற்றும் போது சிக்னல் இழப்புகளும் நிறைய!

ஆகவே கேபிள் டீ.வி.க்காரர்கள் என்ன செய்ய முடியும்...?

VHFல் உள்ள பதினொரு சானல்களுள் இரண்டு சானல்களைத்தான் அனைவரும் சாதாரண ஆன்டெனாக்கள் மூலம் பார்க்கிற வகையில் தூர்தர்ஷன் ஒளிபரப் பிக் கொண்டிருக்கிறது. மீதி ஒன்பது VHF சானல்களும் இப்போது கேபிள் டீவி ஆபரேட்டர்கள் கையில்தான் உள்ளன. சட்டப்படி பார்த் தால் அந்த ஒன்பதிலும் நமது தூர்தர்ஷன் ஒளிபரப்புகிற சாடிலைட் சானல்களைத் தான் கேபிள் டீவிகாரர்கள் ஒளிபரப்ப வேண்டும். ஆனால் தூர்தர்ஷனும் மற்ற சானல்களுக்குக் கேபிள் ஆபரேட்டர் களையே நம்பியிருப்பதால் கொஞ்சம் நீக்குப் போக்காகவே நடந்து கொள்கிறார்கள்.





• வீடியோடோர் ஃபோன்!

அந்த ஒன்பது சானல்களிலும் இரண்டொரு தூர்தர்ஷன் சானல்களை ஒளி பரப்பிக் கொண்டு மற்றவற்றில் தனியார் சாடிலைட் சானல்களை ஒளிபரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியென்றாலும் மொத்தம் 11 சானல் களைத்தானே ஒளிபரப்ப முடியும்? சில கேபிள்காரர்கள் 12 சானல்களுக்கு மேல் ஒளிபரப்புகிறார்களே என்று கேட்கலாம். நிஜந்தான். அவர்கள் இந்த பதினொரு சானல்களுக்கும் இடையிலுள்ள மயிரிழை இடைவெளியில்தான் மேலும் இரண்டு

ஸ்ரீராம் பதில்கள்

உண்மைதான். இன்னிக்கு சேமிக்கணும்னா பல கம்பெனி இருக்கு. எதில பணம்போடறது, எதில போடக்கூடாதுங்கறதுதான் ஒரே குழப்பம். அதில சிறந்ததும் சரியானதும் எதுன்னு இப்போ பாக்கலாம்.

வங்கிகள்: இவற்றில் டெபாசிட் செஞ்சா 12% வட்டிதான் கிடைக்கும். அதிக லாபம் வேணும்னா மற்ற நிறுவனங்களத்தான் தேர்ந்தெடுக்கணும்.

பெனிஃபிட் ஃபண்டுகள் : இவை எப்படி தெரியுமா? பெரும்பாலும் நிலத்தின் பேர்ல கடன் கொடுக்கிறதுக்கு உங்களோட டெபாசிட்டுகளை பயன்படுத்துறதாக சொல்றாங்க. ஆனா, கடன் வாங்கினவங்க தொகையை திருப்பித்தர தவறினா, அந்த சொத்துக்களை கையகப்படுத்தி, விற்று அதுக்கப்புறந்தான் உங்க பணத்தை மீட்கணும். உங்களுக்குத் தேவைப்படும்போது உங்கள் பணத்தை திருப்பிக் கொடுப்பதற்கு கஷ்டப்படுவாங்கனு தோணுது.

உற்பத்தி நிறுவனங்கள்: இவை லாபகரமா இயங்கினாதான் உங்களுக்கு வட்டி. விற்பனையில் தேக்கமோ, வசூலில் தடங்கலோ, இல்ல வேலை நிறுத்தமோ ஏற்பட்டா



சேமிக்கணும்னு சொல்றீங்க, சரி. ஆனா எதிலேன்னு சொல்லலியே?

– ப. ஆனந்தி, ஆதம்பாக்கம்

உங்க டெபாசிட்டுகளை திரும்பப் பெறுவது ரொம்ப கஷ்டங்க. உதாரணமா, ஆந்திரா சிமெண்ட்ஸ், ஸ்டாண்டர்ட் மோட்டார் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா போன்ற உற்பத்தி நிறுவனங்கள் டெபாசிட் - தாரர்களின் பணத்தை திருப்பித் தரவே இல்லீங்க.

நிதி நிறுவனங்கள்: நிதி நிறுவனங்களுக்கு இந்த பிரச்சினைகள் இல்லை. ஆனால், நிதிநிறுவனங்களுடைய நிதியை எந்த தொழிலில் ஈடுபடுத்துகிறார்கள் என்பதை பொறுத்துதான் உங்கள் டெபாசிட்டுக்கு பாதுகாப்பும், வட்டியும் கிடைக்கிறது. கூடுதலான வட்டி கிடைக்கிறது என்று டெபாசிட் செய்துவிட்டு அசலை தொலைத்தவர்கள் பலரை உங்களுக்கே தெரிந்திருக்கும். எந்த நிதி நிறுவனத்தில டெபாசிட் செய்யலாம்ங்கிற முடிவை விளம்பரங்களை பார்த்து மட்டும் எடுத்தால், பண நஷ்டம்தான் ஏற்படும் என்று உறுதியாக சொல்ல முடியும்.

(இரண்டாம் பகுதி
34 .... ம் பக்கத்தில்)

மூன்று சானல்களையும் சேர்த்து ஒளிபரப்பு கிறார்கள்!

இப்படி அளவுக்கு மீறி ஒளிபரப்புவதால் தான் கேபிள் மூலம் பார்க்கிற பல சானல் களில் படங்கள் தூர்தர்ஷன் சேனல் மாதிரி துல்லியமாகத் தெரிவதில்லை.

இந்தக் குறைகளையெல்லாம் போக்க வேண்டுமானால் கேபிள் ஆபரேட்டர்கள் S - Bandக்கு மாறித்தான் ஆக வேண்டும்.

இதன் காரணமாகத்தான் S-Bandஐ கேபிள் டிவிக்காரர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஒரு சட்டத்திருத்தமும் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நாமும் S-Band டெலிவிஷன் பெட்டி களை வாங்கித்தான் ஆக வேண்டும். அப் போதுதான் கேபிள் மூலம் பார்க்கிற எல்லா சானல்களும் நமக்குப் பளிச்சென்று தெரியும். எனவேதான் புதிதாக டெலிவிஷன் வாங்கு பவர்கள் S-Band இருக்கிறதா என்று கேட்டு வாங்கச் சொல்கிறார்கள்.

இந்தியாவுக்குப் படையெடுக்கும் சோனி!

ஒனிடா, பி.பி.எல்., வீடியோகான், ஆப்டானிகா வரிசையில் சோனி குடும்ப மும் ஜப்பானிலிருந்து கொண்டு இந்தியா வுக்குள் இளைபரப்பி விட்டது. தொழிற் சாலை ஹரியானாவில் என்றாலும் அங்கே டெலிவிஷன், மியூசிக் சிஸ்டம், டெலிபோன் கருவிகள் போன்ற பொருள்களின் பாகங் களை ஒன்று சேர்த்து அனுப்புகிற தொழிற் சாலைதான். பாகங்களெல்லாம் முழுக்க முழுக்க ஜப்பானில் செய்தே அனுப்புகிறது சோனி.

தனது இந்திய வியாபாரத் துவக்கத்தை அறிமுகப்படுத்தும் விதமாகச் சென்னையில் ஒரு விளக்கக் கண்காட்சியை நடத்தியது சோனி. ஒன்பது இஞ்ச் அளவிலிருந்து 53 இஞ்ச் அளவு வரையிலான டெலிவிஷன் பெட்டிகள் பார்ப்போரை அசத்தின. மியூசிக் சிஸ்டம்களிலிருந்து வெளியான லேசர் டிஸ்க் இசைகளில் அத்தனை துல்லியம்! "இனி இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருள்களின் விலைகளை விட எங்கள் சோனி குடும்பத் தில் தயாரிக்கப்படும் பொருள்களின் விலை கள் நிச்சயம் குறைவாகத்தான் இருக்கும்!" என்கிறார் 'சோனி'யின் ரீஜனல் சேல்ஸ் மானேஜர் ஆனந்த்குமார்.

இன்னும் ஆறு மாதங்களுக்குள் ஜப் பானில் கிடைக்கும் எந்தவொரு சோனி மாடல் பொருளும் இந்தியாவிலும் கிடைக்கு மாம்! ஆக, இந்தியத் தயாரிப்பாளர்களின் வயிற்றில் இனி புளிதான்!

- சார்லஸ்

ஒரு தலம்

உச்சிப் பிள்ளையார் கோவில் என்றால் எல்லோருக்கும் தெரியும். திருச்சி மலைக்கோட்டையின் கம்பீரத்தின் காரணகர்த்தர் அவர். மலைக்கோட்டை கோவில் ஒரு பிள்ளையார் கோவில் என்றே பலர் தெரிந்து வைத்திருக்கிறார்கள். உண்மையில் அது ஒரு சிவன் கோவில். பிள்ளையின் புகழ் அப்பாவின் புகழை அள்ளி விழுங்கி விட்டதால் அப்பா மௌனமாக இருந்து விட்டார். பெரும் புகழ் பெறுகிற பிள்ளைகளைப் பெறுகிற எந்தத் தகப்பனாருக்கும் இந்த ஆனந்த அவமானம் தவிர்க்க முடியாத பரிசளிப்பு ஆகும்.

புகழ் பெற்ற தகப்பனாரின் பிள்ளையாகப் பிறப்பது, இருப்பது கொஞ்சம் கஷ்டமான காரியம். சராசரியாக அந்தப் பிள்ளை இருந்துவிட்டால் 'அப்பா மாதிரி இல்லையே' என்று அங்கலாய்ப்பார்கள். 'அவர் பிள்ளையா நீ' என்று குத்தலாகத் துக்கம் விசாரிப்பார்கள். ஆனால் புகழ் பெற்ற பிள்ளையின் அப்பாவாக இருப்பது இன்னும் சிரமமான காரியம். சமயத்தில் மானப் பிரச்னை வந்து விடும்.

மட்டுவார் குழலியும் தாயுமானவரும் பெருந்தன்மையான பெற்றோர்கள். 'ஈன்ற பொழுதில் பெரிதுவந்து', 'இவன் தந்தை என்நோற்றான் கொல்' என்ற இருகுறளின் பொழிப்புரையாக மலைக்கோவிலில் இருப்பவர்கள்.

மலைக்கோவிலில் கருணை மழைபொழியும் அம்பிகையின் திருப்பெயர்தான் மட்டுவார் குழலி. சுவாமியான தாயுமானவர் நம் பிள்ளையாரின் தகப்பனும் ஆனவர். தமது புகழ் மலையை ஒளித்துக் கொண்டு பிள்ளையின் புகழ் மலையில் ஒளிர்ந்து நிற்பவர்கள்.

அறுபதினாயிரம் ஆண்டு அரசாண்டு பெரும்புகழ் பெற்றவன் தசரதன். அரசர்க்கு அரசன். அவன் இராமனைப் பிள்ளையாகப் பெற்ற பிறகு, 'இராமனுக்கு அப்பா' என்கிற புகழ்தான் நிலைத்து நின்றது. ரசிகமணி டி.கே.சி இதை இன்னும் அழகாகச் சொல்வார்கள். தசரதன் மாண்டு, மேல் உலகம் போனதும் தேவர்கள் எல்லாம் கும்பிட்டார்களாம். அவர் நடந்து போகும் போது தசரதனைக் கை காட்டி கைகாட்டி ஏதோ பேசிக் கொண்டார்களாம். என்ன பேசினார்கள் தெரியுமா?

"நாமெல்லாம் 'ஐயா ஐயா' என்று கும்பிடும் திருமாலை - 'பையா பையா' என்று உரிமையுடன் அழைத்தவர்'' என்று பேசினார்கள்! அயோத்தி அரசர் என்பது பெரிய விஷயமில்லை. 'இராமனுக்கு அப்பா' என்பதுதான் பெரிய விஷயம்.



உச்சிப் பிள்ளையாரின் உச்சிமோந்த நமது தாயுமானவர் புகழும் உச்சியில் இருப்பது தான். அவரது கருணை யாருக்கு வரும்! வேட்டி கட்டிக் கொண்டு ஜம்மென்று ஆண்பிள்ளையாக இருக்க வேண்டியவர் ஒருமுறை பார்வதி தேவியின் சேலையைக் கட்டிக் கொண்டு பிரசவம் பார்த்திருக்கிறார். ஏன்? கருணைதான் காரணம்!

வணிகர் குலப்

ஒரு பாடல், ஒரு நயம்!

பெண்ணொருத்திக்குப் பேறு காலம். பிரசவ வலி எடுத்து விட்டது. அருகில் அம்மா இல்லை. எந்தப் பெண்ணுமே தான் அம்மா ஆகும்போது, தனது அம்மா அருகில் இருக்க வேண்டும் என்று விரும்புவாள். எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் அதில் அனுபவம் உள்ளவர்கள் அருகில் இருப்பது கொஞ்சம் தைரியம் தரும். அதுமாதிரி இந்தத் துன்பத்தை ஏற்கெனவே அனுபவித்த அம்மா அருகிருப்பது தைரியம் தரும் என்பது ஒரு காரணம்.

இன்னொரு நுட்பமான காரணம் உண்டு. புனிதமான தெய்வ சக்தி சில இடங்களில் இராது என்பது சாத்திர விதி. இது கருதியே மரணம், பிள்ளைப் பிறப்பு - மற்றும் சில விலக்கப்பட்ட காலங்களில் பூஜை அறைக்குள் நுழைவது இல்லை. "தீட்டுள்ள இடத்தில் தெய்வம் இராது" என்பது சாத்திர விதி. பிள்ளைப் பிறப்பு காலத்தில் இந்தக் குறை இருப்பதால், தெய்வசக்தி குறைந்த இடத்தில் தீயசக்திகள் நுழைந்து ஊறு செய்து விடக்கூடாதே என்று, தெய்வத்துக்கு நிகரான தாய் அருகிருப்பது அவசியம் என்று நமது முன்னோர்கள் விதி வகுத்தார்கள்.

அந்த வணிகப் பெண்ணுக்கு அவளது தாய் அருகிருக்க முடியாத நிலை. ஆற்றின் ஒரு கரையில் தாய். மறுகரையில் மகள் வீடு. ஆற்றில் வெள்ளம் புரண்டோட, இடியும் மின்னலும் அச்சுறுத்தும் இரவு நேரம். அம்மா அருகிருக்க முடியாத நிலையில் அலறிய மகள், அம்மையப்பனாகிய மலைக்கோயில் ஆண்டவரை அபயம் வேண்டி அழுது துடித்தாள்.

என்ன ஆச்சர்யம்! அம்மா வந்து விட்டாள். மகளுக்குப் பிள்ளைப் பேறு பார்த்தாள். விடியும் முன் வெளியே போய்விட்டாள். வெள்ளம் வடிந்த பின் உண்மையான அம்மா வந்தாள்.

அப்படியானால் முதலில் வந்தவள்?

மலைக்கோவில் இறைவர்! 'நீ போய்ப் பார்த்துவா' என்று பார்வதியை அனுப்பாமல் தாமே கருணை மீதூர்ந்து தாயுமாக வந்த இறைவன் தான் தாயுமானவர்.

'மக்கள் பணியே மகேசன் பணி' என்பதை மகேசனே சொன்ன மண் - இந்தமண். அந்தத் தாயுமானவர் கோவில் கருங்கல் திருப்பணிகள் செய்யப்பட்ட அற்புதமான, பிரம்மாண்டமான அழகுத் திருக்கோவில். வரலாறும் புராணமும் கலந்த வளப்பம் மிகுந்த திருத்தலம் இது.

இந்தத் திருக்கோயிலில் தனிச் சிறப்பு ஒன்று உண்டு. சிவ பெருமானுக்குரிய திருநந்தி தேவர், துவார பாலகர்கள், பரிவார தேவதைகள் எனப்படும் சுற்றுக்களில் அமைந்த தெய்வங்கள் எல்லாம் கோவிலின் கிழக்கில் இருக்க, இறையவரான தாயுமானவர் மட்டும் மேற்கே பார்த்தபடி இருப்பார். இது என்ன விந்தை? அதற்கொரு காரணம் சொல்லுவார்கள். தாயுமானவர் எவ்வளவு கருணையானவரோ அவ்வளவு கண்டிப்பும் ஆனவர்.

சாரமா முனிவர் என்பவர் இந்த மலைக்கோவில் சிவபெருமானுக்காகச் செவ்வந்தி மலர் கொணர்ந்தார். உள்ளூர் மலரல்ல அது. நாகலோகத்தில் இருந்து சிரமப்பட்டு, சிவனுக்காகக் கொண்டு வந்த செவ்வந்தி மலர். அந்த மலரைக் கண்ட உறையூர்ப் பராந்தக சோழன் மனம் தடுமாறியது. ஒப்பற்ற மலரைத் தன் மனைவிக்கு வழங்க நினைத்து, அடியாரிடம் இருந்து வலிந்து கவர்ந்தான். ஓம் என்று உரைக்க வந்த சாரமா முனிவர் ஓவென்று அலறி இறைவரிடம் முறையிட்டார்.

இறையவர் செவி மடுத்தார். சினந்தார். சிவந்தார். மேற்கு நோக்கித் திரும்பி உறையூரை நினைத்தார். உறையூரில் மண் மழை பெய்வித்தார் என்பது வரலாறு.

சிவ அபராதம் செய்த மன்னரைத் தண்டிக்க மேற்கே திரும்பிய வண்ணமே இன்றும் அன்பர்கட்கு அருள் பாலிக்கிறார் ஆண்டவர்.

இந்த இறைவர் மீது ஈடுபாடு கொண்டு பாடிய அருளாளரில் ஞானசம்பந்தப் பெருமான் ஒருவர். அவரது பாடல் சுவையானது.

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டைக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. தொலைவிலிருந்து அந்த மலையைப் பார்த்தால் ஒரு யானையின் முகம், துதிக்கை, முதுகு மேல் அம்பாரி இப்படி யானையாகவே காட்சி தரும். தொடர்ச்சியாகக் கிடக்கும் மலைகளைப் பார்த்து 'யானைக்

உத்திரவாதமும் ரொம்ப முக்கியம். அதனால, உங்க பணத்துக்கும், வட்டிக்கும் முழு பாதுகாப்பு கொடுக்கிற நிறுவனத்தை தேர்ந்தெடுப்பதுதான் நல்லது.

அப்படி நீங்க தேர்ந்தெடுக்கிற நிதிநிறுவனம் வலுவான மூலதன ஆதாரம் கொண்ட பப்ளிக் லிமிடெட் கம்பெனியா இருக்கணும். உங்க பணத்தை, அது முதலீடு செய்யும் தொழில் நிலையான வருமானம் பெறக்கூடியதா இருக்கணும். அப்போதான், அந்த நிறுவனம் கொடுக்கிற கடனுதவியை சுலபமா திரும்பப் பெறமுடியும். உங்க பணத்துக்கும் பாதுகாப்பு கிடைக்கும். இந்த மாதிரி லாபகரமா இயங்கக் கூடிய நிதிநிறுவனத்தை தேர்ந்தெடுக்கிறதுதான் புத்திசாலித்தனம்.

(அடுத்த இதழில் தொடரும்)

கூட்டம் படுத்திருப்பது போல' என்று பாடினார் சங்கப் புலவர். இந்த மலைக்கோட்டை கோவிலோ முதுகில் அம்பாரியுடன் ஒரு யானை சாவகாசமாகப் படுத்திருப்பது போல இருக்கும்.

ஆனை முகத்துப் பிள்ளை குடியிருக்கும் மலைக்கோவிலும் தொலைவில் இருந்து பார்த்தால் ஆனை போல் தெரியவும், ஞானக் குழந்தையான திருஞானசம்பந்தர் ஆனை... ஆனை என்று ஏகத்துக்கு அடுக்கி விட்டார். வெளியில் பார்த்தால் ஆனை போல் இருந்தாலும் உள்ளே சிவபெருமான் இருப்பது போல் - பாட்டில் மேலோட்டமாக யானை, யானை என்று வரும். ஆனால் அவையாவும் சிவனையே குறிக்கும். எப்படி சாமர்த்தியம் பாருங்கள்.

நன்றுடை யானை
தீயதில் லானை
நரை வெள்ளேறு ஒன்றுடை யானை
உமை ஒரு பாகம் உடையானைச்
சென்றடையாத திரு உடையானைச்
சிராப்பள்ளிக் குன்றுடை யானைக்
கூற என்னுள்ளம் குளிரும்மே!

என்று ஆனை... ஆனை என்று ஞானக் குழந்தை பொற்றாளம் தட்டி கெக்கலித்தது.

மருந்து நன்மை தரும் என்றாலும் பக்க விளைவு என்ற தீமை தரும். சிவ பெருமான் தான், தீமையற்ற நன்மை உடையவன். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலமாகிய தீமை இயல்பிலேயே அற்ற நன்றுடையான் அவன். வெள்ளை விடையாகிய ரிஷபம் உடையவன். உமா தேவியைப் பாகத்தில் உடையவன். சிராப்பள்ளி குன்றுடையவன். அவன் சென்று சேராத திரு உடையவன். அவனைப்பாட என் மனம் குளிரும் என்றார்.

நாம் சேர்த்த செல்வம், புகழ், எல்லாமே நம்மிடமிருந்து பிரிக்கப்படக் கூடியவை. அல்லது பிரியக் கூடியவை. நேற்று பணக்காரர். இன்று ஏழை. இன்று ஏழை. நாளை பணக்காரர். 'திரு' என்னும் செல்வம் சென்று சேரும். விலகும். ஆனால் இறைவன் திரு என்றும் விலகாது. காரணம் அவனே திரு. அவனே பெருஞ்செல்வம். அவன் வேறு; அது வேறு அல்ல!

சிராப்பள்ளி - என்ற ஊர் இறைவர் கோவில் கொண்டதால் திரு சேர்ந்து திருச்சிராப்பள்ளி ஆனது. 'திரு' சென்றடைந்தது. ஆனால் இறைவனே திரு என்பதால் அவர் சென்றடையாத திருவுடையார். அவரே சிராப்பள்ளி குன்றுடையார்.

(வளரும்)



புதிதாக ஏதேனும்...?

வைப்புத் திட்டங்கள், ஹயர் பர்ச்சேஸ், லீசிங் இவைகளெல்லாம் தானே? வேறொன்றும் இல்லையா, என்கிறீர்களா?

உண்டு. இண்டோ ஏசியன் ஃபைனான்ஸில் மற்றொன்றும் உண்டு. அது என்ன?

அது தான் - எங்கள் தனிப்பட்ட தோழமை. வாடிக்கையாளர்களின் குறிப்பான தேவைகளைப் புரிந்து கொள்ளும் தன்மை. உங்களுக்கு எது அவசியம், எது முக்கியம், எது வசதி, எது கூடுதல் லாபம் என்று ஆராய்ந்து, தனிப்பட்ட முறையில் சேவை செய்கிறோம். இதனால்தான் எங்கள் வாடிக்கையாளர்கள் நிரந்தரமாக எங்களையே நாடி வருகிறார்கள்.

சிறப்பு அம்சங்கள்

- உங்கள் விண்ணப்பம் கிடைத்த தேதி முதல் வட்டி வழங்கப்படுகிறது.
- RBI விதிமுறைகளின் படி, தேவைப் பட்டால், உங்கள் வைப்புத் தொகையைக் குறித்த தேதிக்கு முன்னதாகவே பெறலாம், உங்கள் வைப்புத்தொகையின் மீது கடன் வசதியும் பெறலாம்.

வெளியூர் வாடிக்கையாளர்களுக்கு

- DD க்களை DD கமிஷனைக் கழித்தே அனுப்பலாம்.
- வட்டித்தொகையை DDமூலம் உங்கள் இருப்பிடத்திலேயே பெறலாம்.
- உங்கள் வைப்புத் தொகையை DD மூலமாகவே திரும்பப் பெறலாம்.

ஆயுட்கால நம்பிக்கையின் சின்னம்.


INDO ASIAN FINANCE LTD,

Regd off: 84, GN Chetty Road, T.Nagar,
Madras - 600 017 Ph: 8253342, 8240459

Deposit Mobilisation Campaign Till 15.09.95

Calai Communications (P) Ltd.

படங்கள் : யோகா



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-1995

முடிவுகள்

பிரபல எழுத்தாளர்கள் ரா. கி. ரங்கராஜன், சிவகாமி, கவிஞர் தமிழன்பன், ஓவியர் மருது, 'கல்கி' நிர்வாக ஆசிரியர் கி. ராஜேந்திரன் ஐவரும் 16.7.95 அன்று கூடி போட்டிக் கதைகளைப் பரிசீலித்தனர்.

இரண்டாம் பரிசுக் கதைத் தேர்வில் – இரண்டு கதைகள் ஒரே தரத்தில் இருப்பதாகத் தோன்றியதால் இவ்வாண்டு இருவர் இரண்டாம் பரிசு பெறுகிறார்கள்.

பரிசுக் கதைகள் விவரம் கீழே. பிரசுரத்துக்குத் தேர்வான கதைகளின் பட்டியல் அடுத்த இதழில்.

வெற்றி பெற்றோருக்கு எம் வாழ்த்துக்கள்! போட்டியில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு நன்றி!

ரூ. 1500

முதல் பரிசு பெறும் சிறுகதை :

சமூகநலக் காடுகளும்
சாம்பல் பூத்த குழந்தைகளும்
முத்துராஜன்,
237, MES Road,
Jalahalli,
Bangalore - 13.

தலா ரூ. 1000

இரண்டாம் பரிசு பெறும் இரு கதைகள் :

1. உயிர்
இரா. ராமையா
(அறிமுக எழுத்தாளர்)
A/3, "இண்டஸ்-வைகை"
11, போரூர் தெரு,
கிழக்கு தாம்பரம்,
சென்னை – 59.

2. நாகூர் பயணம்
ப. முருகேசன்,
9, மொட்டையப் படையாச்சி வீதி,
முதலியார்பேட்டை,
புதுவை – 4.

தலா ரூ. 500/- மூன்றாம் பரிசு பெறும் கதைகள் :

1. இன்னமும் கங்கை
பிருதிவிராஜ்,
B-2, ஆர்சார்ட் மினார்,
திவான் ராமா ரோடு,
புரசைவாக்கம்,
சென்னை – 7.

2. பரிசு
அ. விநாயகமூர்த்தி,
258, பாரதியார் தெரு,
ஜெய்ஹிந்த்புரம்,
மதுரை – 11.

முதல் பரிசுக் கதை 44-ம் பக்கத்தில்...


• தமிழன்பன்


• மருது


• ரா. கி. ரங்கராஜன்


• சிவகாமி

♦ தேர்தலுக்கான பணியை 'ஜெ' வெகு நாளைக்கு முன்பே துவக்கி விட்டார். 'ஜெ' செய்கிற ஒவ்வொரு செயலும் தேர்தலை எதிர்நோக்கிச் செய்வதுதான். தேர்தல் சமயத்தில் சலுகைகள் அளித்தால் தேர்தல் கமிஷன் கெடுபிடி செய்யலாம். எனவே தான் இப்போதே சலுகைகள் அறிவிப்பு. ஹெலிகாப்டர் வாங்கியுள்ளது கூட தேர்தலை மனத்தில் வைத்துத்தான். சூறாவளிப் பிரச்சாரம் செய்ய அது உதவியாக இருக்கும் அல்லவா?

சென்னை - 14,
பொ. வஜ்ரவேலு.

♦ முதல்வரை நேரில் பார்ப்பது போல் இருந்தது. அப்படி ஒரு அருமையான அட்டைப்படம்! படம் எடுத்தவருக்கு ஒரு நன்றி முத்தம்.

கள்ளிக்கோட்டை,
கே. எம். முருகன்.

♦ இலங்கை ஈழப் பிரச்னையில் தாங்கள் இன்னும் தெளிவு பெற வேண்டும்! விடுதலைப் புலிகளின் வேண்டுகோள், விருப்பம், சந்திரிகாவின் சதி, இவற்றை நன்கு தெரிந்திருந்தால் இப்படியொரு தலையங்கம் எழுத அவசியமிருக்காது!

பம்பாய் - 19, ஜான் சாமுவேல்.

♦ "வீரம் என்பது தாக்குதலும் அழித்தலும் மட்டுமல்ல, போரையும் ஆயுதங்களையும் கைவிட்டு, அமைதியையும் ஜனநாயகத்தையும் ஏற்பதும் வீரம் தான்." தலையங்கத்தில் இந்த வைர வரிகளைப் படித்ததும் என்னுள் ஏற்பட்ட உணர்வுகளை விவரிக்க வார்த்தைகளைத் தேடுகிறேன். கண்களில் நீர், அவ்வளவுதான்.

திருப்பூர் - 1, எல்விபி. ஆர். ஆனந்த்.



ரூ. 20/- பரிசு பெறும் கடிதம்

♦ காக்கை கத்துவதாலா பொழுது விடிகிறது? கிராம உதவியாளர்கள் எந்த விதத்திலும் ஆளும் கட்சிக்கு வெற்றிக்கனியை அளிக்க முடியாது. எட்டாயிரம் ஆசிரியர்களுக்கும் மூவாயிரம் மின்சார இலாகா ஊழியர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதால் ஏற்படும் அனுகூலத்தை விட அவற்றில் நடந்திருக்கும் தில்லுமுல்லுகள் காரணமாக உண்டான கெட்ட பெயரே முன்னணியில் உள்ளது.

நான்கு ஆண்டுகள் வாங்கிச் சிவக்கும் அரசியல்வாதியின் கைகள் ஐந்தாம் ஆண்டு தேர்தல் காலத்தில் சலுகைகளை கொடுத்துச் சிவக்கின்றன. இது யாருடைய பணம் என்று பாமரன் முதல் படித்தவர் வரை உணராமல் அறிவுபூர்வமாக சிந்திக்கும் சக்தியை இழந்து விடுவதால் மீண்டும் மீண்டும் பழைய வேதாளங்களே அரியணையில் ஏறி விடுகின்றன.

தஞ்சாவூர் - 7, வளர்மதி ஆசைத்தம்பி.

♦ சாரதா நாகரத்தினத்தின் 'புரியாத கவிதைகள்', காழ்ப்புணர்ச்சி கொண்ட, இலக்கியவுணர்வற்ற படைப்பு. கவிதையின் Complexity, Sensitivity, style, purposes எதைப் பற்றியும் பிரக்ஞையில்லாமல் 'இலக்கியம் மக்களுக்காக' என்று சொல்லிச் சொல்லியே mediocre எழுத்துக்களுக்கு மகுடம் சூட்டுவது நம்முடைய தனித்தமிழ்ப் பண்பாடாகி விட்டது. 'வாழைப் பழத்தைத் தோலுரித்து வாயில் போடுவதுதான் மனிதநேயம்; அப்படித் தரப்பட்டால்தான் நல்ல இலக்கியம்' என்று சாதிப்பது அபத்தம்.

சென்னை - 15, லதா ராமகிருஷ்ணன்.

♦ 'வன்முறைக்கு பயந்து விடுவார்களா?' என்று திரையுலகப் புள்ளிகளிடம் கருத்து கேட்டது சரி! தாக்குதலுக்கு உள்ளான மணிரத்னம் என்ன முடிவு செய்கிறார் என்பதுதான் இப்போதைய எம் எதிர்பார்ப்பு!

பொன்மலை, ஆர். பிரகாஷ்.

♦ கனவுக் குடித்தனம் சிறுகதை மிக ஜோர். சிறு கருவை மையமாக வைத்து மிக அழகாகவும் ஆழமாகவும் சொல்லிய கிருஷ்ணாவுக்குப் பாராட்டுகள்.

கோயமுத்தூர், பாக்யலட்சுமி சுகவனம்.

♦ தமயந்தியின் 'சலனம்' சிறுகதை அருமை. பல இடங்களில் விரிவான பொருள் கொண்ட வாக்கியங்களை சிக்கனப்படுத்தி நாமே யூகித்துக் கொள்ளுமாறு படைத்திருந்த விதம் மிகவும் கவர்ந்தது. பாராட்டுக்கள்!

திருப்பூர் - 1, எஸ். ரமேஷ்குமார்.

அட்டையில் : ரஞ்சனி வண்ணப்படம் : யோகா
நன்றி : புஷ்பா ஷாப்

காசி பில்டர்ஸ் வழங்கும்

காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீமின்

50% சிறப்புத் தள்ளுபடி

காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்: இத்திட்டத்தில் ரூ.1,500/- முதல் ரூ. 5,000/- வரை மாதத்தவணைகளாகச் செலுத்தி குலுக்கல் மூலம் 300 முதல் 1000 சதுரடிகள் வரை உள்ள வீட்டினை தேர்ந்தெடுத்து சொந்த வீடாக்கிக் கொள்ளலாம். மீதித் தொகையை சொந்த வீட்டில் இருந்துகொண்டே வாடகைபோல் செலுத்தலாம். இத்திட்டத்தில் வீடு பதிவு செய்பவர்களுக்கு முதல் தவணைத் தொகையில் 50% சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும்.

சுபமங்களா திட்டம்: இத்திட்டத்தின் கீழ் தங்களுக்கு பிடித்தமான வீட்டைத் தேர்ந்தெடுத்து ரூ.10,000/- மட்டுமே அட்வான்ஸாகக் கொடுத்து உடனடியாக உங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம். பின்பு, ஒரு மாத காலத்திற்குள் வீட்டின் மொத்த தொகையில் 25% மட்டுமே செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% தொகைக்கு கடன் வழங்கும் நிறுவனமான எல்.ஐ.சி., கேன்ஃபின் ஹோம் மூலமாக தங்களுக்கு கடன் உதவி ஏற்பாடு செய்து தருகிறோம்.

ஒரு சதுரடியின் விலை

500/-

மட்டுமே

வீடு கிடைக்கும் இடங்கள் - சென்னை கே.கே.நகர் மேற்கு, விருகம்பாக்கம், வளசரவாக்கம், போரூர், வடபழனி, சாலிகிராமம், நங்கநல்லூர், கோடம்பாக்கம் (ரங்கராஜபுரம் மெயின்ரோடு), பல்லாவரம் (ரயில் நிலையம் அருகில்) ஆகிய இடங்களில் வீடுகள் பெறலாம்.

குறிப்பு: மேலும் "காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்"ன் தவணைமுறைத் திட்டத்தின் மூலமாக விரைவில் மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், பெங்களூர் போன்ற பெருநகரங்களில் வீடுகள் கட்டித் தரப்படும்.

குறிப்பு :- வாடிக்கையாளர்கள் எங்களது "காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்"ல் உறுப்பினராக சேர விரும்புவோர் கீழ்கண்ட கூப்பனை நாள், நேரம் குறிப்பிட்டு பூர்த்தி செய்து, கீழ்கண்ட எங்களது முகவரிக்கு அனுப்பி வைப்பீர்களேயானால், எங்கள் நிறுவனத்தின் பிரதிநிதி தங்களின் இருப்பிடத்திற்கு நேரில் வந்து அனைத்துத் திட்டங்களையும் தங்களுக்குப் புரியும்வண்ணம் எடுத்துரைப்பார்கள். தாங்கள் "காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்"ல் சேர விரும்பி அதற்கான தொகையை, எங்கள் பிரதிநிதியிடம் பணமாகவோ அல்லது காசோலையாகவோ செலுத்தும் பட்சத்தில் பணம் பெற்றுக் கொண்டதற்கான ரசீது மற்றும் சான்றிதழ்களை தாங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு

KGC

காசி பில்டர்ஸ் மற்றும்

காசி ஹவுசிங் & டெவலப்மெண்ட் லிட்.

காசி பில்டிங் காம்ப்ளெக்ஸ் 91, 92 ஜவஹர்லால் நேரு சாலை, அசோக் நகர், சென்னை - 600 083.

போன் : 4822206, 4821969, 4825506 FAX : 044-4825606

கிளை அலுவலகம் : எ. 13 கிழக்கு ஜோன்ஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-15. போன் : 456464

ஞாயிறு முழு அலுவலகம் உண்டு.

காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீமின் வெற்றிகரமான 17வது குலுக்கல் வரும் 29.10.95 அன்று நடைபெற உள்ளது.

தங்கள் நிறுவனத்தின் "**காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்**"ல் உறுப்பினராக சேர விரும்புகிறேன். இது பற்றிய விபரம் அறிந்துகொள்வதற்கு தங்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


பெயர் : ....

முகவரி : ....

....

நாள் .... நேரம் ....

கையொப்பம்



'ஷாப்பிங்' போகிறார் சசிகலா!

(ஒரு விபரீத கற்பனை)

அ.இ.அ.தி.மு.க. தலைமைக் 'கழகத்திலிருந்து திடீரென வெளியான அந்த உத்தரவைக் கண்டதும் காவல்துறை உயர் அதிகாரிகளின் கைகால்கள் எல்லாம் வெடவெடவென நடுங்க ஆரம்பித்தன. பலருக்கு வாய் குழறியது.

இன்னும் ஒரு மணி நேரத்தில் முதல்வரின் உடன்பிறவாத சகோதரி சசிகலா ஷாப்பிங் செல்லவிருக்கிறார். அதற்கான முன் ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென தலைமைக் கழக உத்தரவில் கூறப்பட்டிருந்தது. அந்த உத்தரவிலும் சசிகலாவே கையெழுத்திட்டிருந்தது நிலைமையை மேலும் பயங்கரமாக்கியது!

போர்க்கால அடிப்படையில் செயல்பட்டது காவல்துறை. போர்க்களத்தில் கூட இவ்வளவு பரபரப்பு இருக்காது.

சசிகலா செல்லவிருந்த ஷாப்பிங் காம்ப்ளெக்ஸுக்கு முன்னதாகச் சென்ற காவல் படை, அதற்கும் முன்னதாகவே அங்கு குழுமியிருந்த அமைச்சர் படையைக் கண்டு திடுக்கிட்டது.

“என்ன இவ்வளவு மெத்தனமா இருக்கீங்க? சின்னம்மா ஷாப்பிங்குக்கு வரப் போறாங்கன்னு கேள்விப்பட்டதும் பல் தேய்ச்சுக்கிட்டிருந்ததையே பாதியிலே விட்டுட்டு ஓடி வந்திருக்கேன். நீங்க இவ்வளவு மெதுவா வர்றீங்களே?” - என்று கோபித்துக் கொண்டார் எஸ்.டி.எஸ்.

“நீங்களாவது பாதி தேய்ச்சீங்க. எனக்கு அதுக்குக் கூட நேரமில்லைங்க” - என்றார் மற்றொரு அமைச்சர், கடமை உணர்வோடு.

பரபரப்பாகச் செயல்பட்டனர் போலீஸ் அதிகாரிகள். டிரைவரை அமைச்சர் என்று நினைத்து ஒரு போலீஸ் அதிகாரி விறைப்பாகச் சல்யூட் அடிக்க, அமைச்சர் ஒருவரை யாரோ என்று நினைத்து கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினார் மற்றொரு போலீஸ் அதிகாரி.

தன்னை யாராவது வெளியேற்றிவிடப் போகிறார்களே என்று பயந்த நெடுஞ்செழியன், முன்யோசனையோடு, 'நினைவு தெரிஞ்ச காலத்திலேர்ந்து நான் மந்திரியா இருக்கேன். இவ்வளவு சிறப்பான முதல்வரை நான் பார்த்ததே இல்லை' என்று உரக்கக் கூறி, தான் அமைச்சர்தான் என்று நிலை நாட்டினார்.

“என்னங்க நீங்க? சசிகலா இன்னும் முதல்வர் ஆகலைங்க!” என்று அவர் காதில் கிசுகிசுத்தார் கே.ஏ.கே.

“அம்மா வரப்போறாங்க. மூடுய்யா கடையை! அறிவுகெட்ட முண்டம்! தள்ளி நில்லுய்யா” என்று வழக்கம்போல விரட்டிக் கொண்டிருந்த காவலர்களை உயர் அதிகாரிகள் தடுத்து நிறுத்தி, “எல்லாக் கடைகளும் திறந்திருக்கட்டும். கடைக்காரர்கள் மட்டும் வெளியே போய்விடுங்கள்” என்று உத்தரவிட்டார்கள்.

திடீரென ஏழெட்டு கார்கள் வரிசையாக வர, எந்தக் காரிலிருந்து சசிகலா இறங்கப் போகிறார் என்று புரியாத சில ஜூனியர் அமைச்சர்கள் எதற்கும் இருக்கட்டும் என்று எல்லா கார்களின் முன்னாலும் விழுந்து எழுந்தார்கள்.

சீனியர் அமைச்சர்களுக்கும் சின்னம்மாவின் காலில் விழவேண்டும் என்ற சபலம் இருந்தாலும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார்கள். இரு கைகளையும் கூப்பி, 'வாங்கம்மா' என்று எல்லா பற்களும் வெளியே தெரியப் புன்னகைத்தவர்கள் வெகு நேரத்திற்குக் கும்பிட்ட நிலையிலேயே இருந்தார்





"மாசா மாசம் ஒண்ணாம் தேதி பட்டுப் புடைவை எடுத்துக்கிட்டுப் போறியே எங்கே போறே?"

"என் ஏரியாவுல மகளிர் காவல் நிலையம் வந்ததிலிருந்து... அவுங்க 'மாமூல்' பணத்துக்குப் பதில் பட்டுப் புடைவையா கேட்கிறாங்க. அதான்!"

— க. கன்னிகா

கள். சசிகலா, எஸ்.டி.எஸ்ஸை மட்டும் பார்த்து 'சௌக்கியமா?' என்று கேட்க, தன் ஜன்மம் சாபல்யம் அடைந்துவிட்டதாகவே உணர்ந்தார் எஸ்.டி.எஸ். 'சௌக்கியம்தான்' என்று தொடர்ந்து பலமுறை பலமாகத் தலையாட்டியதை மட்டும் யாரும் கவனிக்கவில்லை.

சடாரென்று சசிகலா திரும்பிப் பார்த்தார். என்ன கேட்கப் போகிறாரோ என்று எல்லரர் வயிற்றிலும் புளியைக் கரைத்தது.

"இது நல்லாயிருக்கு. இதுலே ஒரு ஏழெட்டு கிலோ பார்சல் கட்டுங்க" என்று ஒரு கடையின் முன் நின்று கூற, எல்லோருக்கும் 'திக்'கென்றது. ஏனென்றால் அது நகைக்கடை.

"அந்த நகையையெல்லாம் கார் டிக்கிலே வெச்சுடுப்பா. இடம் இல்லைன்னா வேறே கார்லே வை" என்று கடைச் சொந்தக்காரரிடம் எஸ்.டி.எஸ். கறுகறுப்பாக ஆணையிட்டார்.

"வந்து மேடம்... நான் பில்லை வீட்டுக்கு அனுப்பட்டுங்களா?" என்று கடைக்காரர் பரிதாபத்துடன் கேட்டார்.

"நோ, தேங்க்ஸ். அதெல்லாம் வேண்டாம்" என்று புன்னகைத்தார் சசிகலா. கடைக்காரருக்கு வியர்த்துக் கொட்டியது.

சசிகலா மேலே நடந்தார்.

"பணம் வந்துடும்பா. கவலைப்படாதே. வேலையைப் பாரு" என்று நகைக் கடைக்காரரின் முதுகில் தட்டிக் கொடுத்து ஆறுதல் கூறினார் போலீஸ் அதிகாரி ஒருவர்.

மற்றொரு கடையின் முன் நின்று, "இது என்ன விலை?" என்று கேட்டார் சசிகலா.

"விலையைப் பத்தி என்னங்க? உங்களுக்குப் பிடிச்ச பொருளை வாங்கிக்குங்க" என்று பெருந்தன்மையுடன் கூறினார் கடைக்காரர்.

"சேச்சே! நான் பொருளோட விலையைக் கேட்கலை. இந்தக் கடையோட விலையைக் கேட்டேன்."

வெலவெலத்துப் போனார் கடை சொந்தக்காரர். கைகால்கள் நடுங்கின. வாய் உலர்ந்தது.

"தைரியமா இருய்யா. நாங்க எல்லாம் இல்லை?" என்று ஒரு ஜூனியர் அமைச்சர் கடைக்காரரின் மேல் ஆவேசமாகப் பாய்ந்தார்.

"இந்த ஒரு கடைதாங்க என்கிட்டே இருக்குது. எந்தப் பொருளை வேணாலும் வாங்கிக்குங்க. தயவு செய்து கடையை மட்டும் கேக்காதீங்க" என்று அழாக்குறையாகக் கூறினார் கடைக்காரர்.

"ஷாப்பிங்னா என்னய்யா நினைச்சே? விக்க முடியாதுன்னா ஏன்யா இந்த இடத்துலே கடையை வெச்சே? அக்கிரமமாப் பேசினாப் பல்லைத் தட்டிடுவோம்" என்று கட்சிக்காரர்கள் சிலர் பொங்கியெழ, அவர்களை அடக்கினார் சசிகலா.

"ரசாபாசம் பண்ணாதீங்க. பத்திரம் எல்லாம் ரெடியாகணும். அவர்கிட்டே கையெழுத்து வாங்கிடுங்க. முப்பதாயிரத்துக்கு செக் அனுப்பிடறேன்."

"முப்பதாயிரமா? அம்மா... மார்க்கெட் நிலவரப்படி இது..." தயக்கத்துடன் கடைச் சொந்தக்காரர் இழுக்க,

"மார்க்கெட்டை அம்மா நேத்தே வாங்கியாச்சு. மார்க்கெட் விலையை அவங்ககிட்டேயே சொல்றியா?" என்று உறுமினார் கட்சிச் செயல்வீரர் ஒருவர்.

இந்த ஆளுடன் நமக்கென்ன பேச்சு என்ற பாவனையில் ஷாப்பிங்கைத் தொடர்ந்த சசிகலா, தன் கையிலிருந்த பையை எஸ்.டி.எஸ்ஸிடம் கொடுத்தார். பெருமையுடன் அதை வாங்கிக் கொண்ட எஸ்.டி.எஸ்., மற்ற அமைச்சர்களை இளப்பமாக நோக்கியபடி சின்னம்மாவைப் பின்தொடர்ந்தார்.

அப்போது, சசிகலா ஷாப்பிங்குக்கு வந்திருப்பதை அறியாத இரு செல்வந்தர்கள் சற்று தூரத்தில் நின்றபடி பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர்,

"உடம்பு இளைக்கறதுக்காக தினமும் ஹார்ஸ் ரைட் போகப் போகிறேன்" என்று கூற, சசிகலாவின் காதில் ரைட் என்கிற வார்த்தை 'ரெய்ட்' என்று விழுந்தது. அடுத்த நிமிடம் -

சசிகலாவைக் காணாமல் அமைச்சர்களும் போலீஸ் அதிகாரிகளும் தேடிக் கொண்டிருந்தார்கள்!

— சத்யா

T.S.S. NIDHI LTD.

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED

Regd. Off.: 230, R.K. Mutt Road, Mylapore, Madras 600 004. ☎ 4942303 / 4943365

BRANCHES :

THIRUVANMIYUR : 112, Thiruvalluvar Salai, Kamaraj Nagar, Madras - 41. ☎ 410058

TONDIARPET : 667, T.H. Road, Madras - 81. ☎5950472

SAIDAPET : 11, Jones Road, Madras - 15.☎ 4851468

FIXED DEPOSIT SCHEME

Period (Months)	12	24	36	60
Rate of Int. P.A.	17%	18%	19%	20%

KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME

(Re-Investment Plan) For Deposit of Rs.1,000/-

Period (Months)	12	24	36	45	67
Maturity Value Rs.	1190	1425	1760	2025	3025

SENIOR CITIZEN DEPOSIT SCHEME

Minimum Deposit Rs. 10,000/-

Period - 12 months

Interest payable monthly	19.5% p.a.	Interest payable annually	21% p.a.

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, REGD. EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS)

T.S.S. SPECIAL DEPOSIT SCHEME

For Deposit of Rs.10,000/-

Period (Months)	Maturity Value
120	Rs.66,000
180	Rs.1,82,000

RECURRING DEPOSIT SCHEME

MONTHLY DEPOSIT Rs. 100/-

Period in Months	12	24	36	48	60	72
Maturity Value	1310	2850	4650	6710	9050	11,580

SAVINGS DEPOSIT SCHEME 9% P.A.

BUSINESS HOURS

	Week Days		Sunday	Holiday
Regd Office Mylapore	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Friday
Branch Offices	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Tuesday

HIGHLIGHTS

- Recognised as a **NIDHI COMPANY** by Central Government of India.
- Company is in 22nd year of service.
- Transaction with members only (Rupees two only for membership)
- Premature repayment facility as per terms and conditions.
- Monthly Interest Warrants would be despatched in advance for the year of Deposits.

LOANS

★ A) Jewel loans granted on Gold ornaments at Rs.300/- per gms. (Rs.2400/- per 8 gms.)

- ★ No Ceiling
- ★ No Charges
- ★ No Interest Tax
- ★ Recurring Deposit not required
- ★ Your Jewels are insured at our cost.

B) Property Mortgage Loans granted on RD basis within Madras city limits.

P.S. SAMBASIVAM
Secretary

G. KUMARAVELU
Vice-President

K.R.V. RAMANI
President

சமூகநலக் காடுகளும் சாம்பல் பூத்த குழந்தைகளும்

ஒரு ரசாயனத் தொழிற்சாலைக்குச் சொந்தமான அந்த கழிவுநீர் சுத்திகரிப்புக் கூடம், அசுத்தங்களின் ஆஸ்தானம் மாதிரி தோற்றமளித்தது. கான்கிரீட் குளங்களில் தேக்கங் கட்டி நிற்கிற கழிவுநீர், அதிலிருந்து கிளம்பிய அழுகல் நாற்றம், ஓடிக் கொண்டிருக்கிற யந்திரங்களின் ஓயாத இரைச்சல்... ஓரங்களில் ஓங்கி வளர்ந்திருந்த புல்லும் புதரும்...

கூடத்து வாயில் முன்னால் இன்ஜினியர் ஆனந்தின் மோட்டார் சைக்கிள் வந்து நிற்க, வாசல் கூண்டுக்குள்ளே கண்ணயர்ந்திருந்த செக்யூரிட்டி ஆள் உதறிக் கொண்டு எழுந்தார். கேட்டைத் திறந்து விட்டு சலாம் வைத்தார்.

செக்யூரிட்டியின் பார்வையில் வெளிப்பட்ட மிரட்சியில் ஆனந்தின் அனுபவப்பட்ட அறிவு எதையோ மோப்பம் பிடித்தது.

சற்றுத் தொலைவில் இன்ஜின் ரூமுக்குப் பின்னால் காம்பவுண்டு சுவரை ஒட்டினாற் போன்ற பகுதியில் பெண் பிள்ளை ஒருத்தி குனிந்து புல் அறுத்துக் கொண்டிருந்தாள். பக்கத்தில் உட்கார்த்தி வைக்கப்பட்ட ஒரு சின்னக் குழந்தை.

"ஏம்பா சம்முகம், உங்கிட்டே எத்தனை தடவை சொல்லியிருக்கேன், வெளியாட்களை உள்ளே விடக் கூடாதுன்னு?"

''வந்து சார்... பக்கத்துக் குடியிருப்பிலிருக்கிற ஏழைப் பொண்ணு சார். பால் வித்து பிழைக்கிறவ. ஒரே ஒரு சாக்கு புல் அறுத்துக்கிறேன்னு கெஞ்சினாள். பாவமா இருந்தது சார்....''

செக்யூரிட்டி அந்தப் பெண்ணிடம் இரக்கம் காட்டக் காரணம் இளகிய மனசு மட்டுமாக இருக்காது; அவள் கொடுத்த இரண்டொரு ரூபாய் சில்லறைக் காசும் இருக்கலாம் என்று ஆனந்துக்குத் தோன்றியது.

''இதோ பாரு சம்முகம், இது தான் கடைசித் தடவை. ஆபத்தான இடம்பா அது. காத்திலே, நீரிலே, ஏன் புல் பூண்டுலே கூட இங்கே நச்சு கலந்திருக்கலாம். எக்கச் சக்கமா ஏதாவது ஆகிப் போச்சுன்னா அப்புறம் நீ, நான் எல்லோருமே மாட்டிக்குவோம்.''

செக்யூரிட்டி ஆள் பதில் பேசாமல் தலைகுனிந்தபடி நின்றார்.

தொழிற்சாலையின் பிரதான வளாகத்திலிருந்து விலகி ஒதுக்குப்புறமாய் அமைந்திருந்தது இந்த கழிவுநீர் சுத்திகரிப் புக்கூடம். ஆலையிலிருந்து



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் ரூ. 1500/- முதல் பரிசு பெறும் கதை.

வெளியேறும் கழிவுநீர் பெரிய குழாய்கள் மூலமாக இங்குள்ள தேக்கங்களில் சேகரிக்கப்பட்டு, ஏரேட்டர் என்னும் ராக்ஷஸ மத்துக்களால் கடையப்பட்டு, கிளாரிஃபையர் சாதனங்களால் வடிகட்டப்பட்டு, இன்னும் வெவ்வேறு நிலைகளைக் கடந்து, சுத்தமாகி, அப்புறம் தான் பொதுச் சாக்கடைகளில் கலக்கப்படும். இந்த இடத்தின் அபாயத்தன்மை காரணமாக இங்கே வெளியாட்களுக்கு கண்டிப்பாக அனுமதி இல்லை.

தொழிற்சாலையின் சுற்றுப்புற பாதுகாப்பு இன்ஜினீயர் என்கிற முறையில் இந்த சுத்திகரிப்புக் கூடத்தின் முழுப் பொறுப்பும் ஆனந்தைச் சேர்ந்தது. தடுப்புச் சுவர், செக்யூரிட்டி காவல், திடீர் சோதனை என்று என்னதான் கண்காணித்தாலும் அவ்வப்போது சில சில்லறை அத்துமீறல்கள்... இப்போது இந்தப் பெண் பிள்ளை புல்லறுக்க நுழைந்து விட்ட மாதிரி.


இதற்குள்ளாக, ஆனந்தின் வருகையில் மிரண்டு போன அந்தப் பெண், தன் வேலையை நிறுத்திக் கொண்டு புல்லுக்கட்டை தலையிலும், குழந்தையை இடுப்பிலுமாய் சுமந்தபடி தயக்கமாய் ஆனந்தைக் கடந்து வெளியேறும் போது...

ஆனந்தின் பார்வை அந்தப் பெண்ணின் இடுப்பிலிருந்த குழந்தை மேல் விழுந்தது. அதன் கறுப்பு உடம்பு முழுதும் சாம்பல் பூத்த மாதிரி திட்டுத் திட்டாய்...

இவன் பார்க்கிற பொழுது அந்தக் குழந்தை தன் பிஞ்சுக் கை நீட்டி எட்டாத முதுகுப்புறத்தை சொறிய முயல... ஆனந்துக்கு தன் உடம்பே எரிகிற மாதிரி, அரிக்கிற மாதிரி ஒரு உபாதை.

இந்த சுத்திகரிப்புக் கூடத்தின் பின்னால் உள்ள அந்தக் குடியிருப்பில் இன்னும் எத்தனை குழந்தைகளோ, இப்படி திட்டு திட்டாய்ச் சாம்பல் பூத்த உடம்போடு!

இங்கிருந்து வெளியேறுகிற கழிவுநீர் கலக்கும் கால்வாய் ஓரத்தில், சேரி போலவும் அல்லாமல் முறையான வீடுகளாகவும் இல்லாமல் அமைந்த இரண்டுங்கெட்டான் தொழிலாளர் குடியிருப்பு அது. குடியிருப்பு வாசிகள் பெரும்பாலும் பக்கத்து தொழில்பேட்டையில் வேலை செய்கிறவர்கள்.



"பரிதாபமாய் இருக்கு மிஸ்டர் ஆனந்த், இங்கிருக்கிற ஏழை ஜனங்கள் படற அவஸ்தையைப் பார்க்கும் போது. முழு ஏரியாவையும் ஒட்டுமொத்தமாக ஆக்கிரமித்திருக்கும் பயங்கரமான ஆரோக்கிய சீர்குலைவு. ஒருநாள் நீங்கள் வந்து கொஞ்ச நேரம் என் கிளினிக்கில் உட்கார்ந்து பாருங்களேன்... ஏகப்பட்ட குழந்தைகளுக்கு ஒரு வகை சரும நோய். இது தவிர நிரந்தரமாய் தொடரும் ஜாண்டிஸ், வைரஸ் ஃபீவர் கேஸ்கள். இந்த ஆரோக்கியச் சிதைவின் மூலஸ்தானம் இவர்கள் வசிக்கிற சுற்றுப்புறம்தான் என்று எனக்குத் தோன்றுகிறது. எனக்கென்னமோ உங்கள் கம்பெனி கழிவு நீரில்தான் சந்தேகமாக உள்ளது..."

பேசிக் கொண்டிருந்த டாக்டர், ஆனந்துக்கு நண்பர். இளைஞர். பக்கத்துக் குடியிருப்பில் கிளினிக் ஆரம்பித்து அமோகமாய் பிராக்டீஸ் நடத்திக் கொண்டிருப்பவர். இருந்தாலும் மனசாட்சியுள்ளவர். சிலநாள் முன்பு ஆனந்த் அவரைச் சந்தித்த போது அவர் மனம் நொந்து பேசின பேச்சு இது. ஆனால், ஆனந்த் அப்போது விட்டுக் கொடுக்கவில்லை.

"நோ, நோ டாக்டர். அப்படி இருக்கவே முடியாது. சுத்திகரிக்கப்படாமல் எங்கள் கம்பெனி கழிவுநீர் ஒரு சொட்டு கூட வெளியே போவதில்லை. நீங்கள்தான் பார்க்கிறீர்களே, லட்சக்கணக்கில் செலவு பண்ணி இதுக்காகவே ட்ரீட்மெண்ட் பிளாண்ட் வைத்திருக்கிறது கம்பெனி. வாரத்துக்கொருமுறை சாம்பிள்கள் எடுத்து எங்கள் லேபிலேயே சோதித்துப் பார்க்கிறோம். சர்க்கார் தரப்பிலிருந்தும் சுற்றுப்புற இலாகாக்காரர்கள் அவ்வப்போது இங்கே வந்து சோதனை நடத்துகிறார்கள். ஸோ, எங்கள் கம்பெனி கழிவுநீரில் கெடுதல் எதுவும் இருக்கிற சாத்தியமே இல்லை டாக்டர்!"

இந்த விஷயத்தில் ஆனந்த் டாக்டரிடம் மனதறியப் பொய் சொன்னான். அது உறுத்தவும் செய்தது. ஒரு சின்னக் குழந்தை அவன் கண்ணுக்கு முன்னால் தோன்றி தன் சாம்பல் பூத்த உடம்பை வேதனையோடு சொறிந்தபடி, 'அடுக்குமா இது' என்று தன் பார்வையால் கட்டது; சாபமிட்டது.

"ஹாரிபிள் மிஸ்டர் ஆனந்த்! இந்த முறை இங்கிருந்து சேகரித்த சாம்பிள்களை சோதித்துப் பார்த்தோம். ரிசல்ட்ஸ் ரொம்பவும் மோசமாக இருக்கிறது. இந்த நிலையில் உங்கள் கம்பெனி கழிவு கலக்கிற எல்லா இடமும் பயங்கரமாய் 'கண்டாமினேட்' ஆகியிருக்கும். வெளியே தெரிந்தால் எங்கள் இலாகாவின் மரியாதை காற்றில் பறக்கும்; நிறைய பேருடைய தலை உருளும்!"

ஆனந்துக்கு முன்னால் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தவர் சுற்றுப்புற இலாகாவைச் சேர்ந்த அரசாங்க அதிகாரி. பேசிக் கொண்டிருந்த இடம் கம்பெனி கெஸ்ட் ஹவுஸிலுள்ள சொகுசு அறை. ஆய்வுக்காக வந்த அவரைத் 'தகுந்த முறையில்' கவனித்து அனுப்பி வைக்கும் பொறுப்பை அவனிடம் விட்டிருந்தது மேலிடம். இதன் பொருட்டு ஆகும் செலவினங்களுக்காக வழக்கம் போல் கணக்கில் வராத தொகையொன்று தாராளமாய் சாங்ஷன் செய்யப்பட்டிருந்தது.

இருந்தாலும் நிலைமையின் இப்போதைய தீவிரம் காரணமாக அதிகாரியின் தாக்குதலைச் சமாளிக்கும் வழி தெரியாமல் தடுமாறினான் ஆனந்த்.

"உங்கள் கவலை புரியுது சார்! நாங்களும் ரொம்ப கவனமாய்த்தான் செயல்படுகிறோம். வேணுமானால் நீங்களே வந்து எங்கள் ட்ரீட்மெண்ட் பிளாண்டை செக் பண்ணி..."

"வேண்டவே வேண்டாம்... ஆனந்த், உங்கள் பிளாண்டை பத்தி நீங்கள் பேசாமலே இருப்பது மேல். உங்கள் கம்பெனி ஆரம்ப காலத்தில் சலவைக் கட்டியும், சாயங்களும் தயாரித்துக் கொண்டிருந்த போது அமைக்கப்பட்ட டப்பா மாடல் பிளாண்ட் இது. இன்னைக்குக் கம்பெனி ஏகமாய் வளர்ந்து தீவிரமான ரசாயனங்களெல்லாம் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. அவ்வளவு கெமிக்கல் வேஸ்டையும் கையாள இந்த கண்டைக்காய் அமைப்பு போதுமா? எலிப்பொறி வைத்து புலி பிடிக்க



மாபெரும் மனிதர்கள் கருத்துக்களைக் குறித்து விவாதிக்கிறார்கள்.

சாதாரண மனிதர்கள் நிகழ்ச்சிகளைக் குறித்து விவாதிக்கிறார்கள்.

மட்டமான மனிதர்கள் நபர்களைக் குறித்து விவாதிக்கிறார்கள்.

சீனப் பழமொழி

– பா. அச்சுதன்

முடியுமா மிஸ்டர் ஆனந்த்? என்வைரன்மென்டல் என்ஜீனியரிங் படித்த உங்களிடம் இதன் விளைவுகள் பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை!"

அன்று அந்த அதிகாரியிடம் இங்கிதமாய்ப் பேசி, ஒரு 'விதமாய்' சமாதானம் செய்து அனுப்பி வைத்த போது ஆனந்துக்குச் சோரம் போனது மாதிரியான அவமான உணர்வு. தான் படித்த படிப்பெல்லாம் இப்படி ஒரு சமூக விரோத செயலுக்குத் தரகு வேலை பார்க்கத்தானா என்று சலிப்புத் தோன்றியது.

ஜெனரல் மானேஜர்/பராமரிப்பு, தன் கண்ணாடியைக் கழற்றி மேஜை மேல் வைத்தார். எதிரே உட்கார்ந்திருந்த ஆனந்தை, ஒரு ஹெட்மாஸ்டர் புகாருக்கு உள்ளான மாணவனைப் பார்க்கிற பாவனையில் ஏற இறங்கப் பார்த்து விட்டுப் பேசினார். குரலில் முப்பது வருஷ அனுபவ ஆழம்.

"ஆனந்த், நீங்கள் சொல்கிற எதையும் நான் மறுக்கவில்லை. நம்ம ட்ரீட்மென்ட் பிளாண்ட் நல்ல நிலைமையில் இல்லை; அதனால் சுத்திகரிப்பு திருப்திகரமா இல்லை; ஆகவே நம் கழிவுநீரால் சில விரும்பத்தகாத விளைவுகள் வரலாம்; இதற்கு தீர்வு நம்ம பிளாண்டைச் சீரமைப்பது ஒன்றுதான்... ஒத்துக்கறேன்! உங்கள் ரிப்போர்ட் நல்லாவே இருக்கு. ஆனால், அதுக்காக நீங்கள் கேட்டிருக்கிற இந்த பட்ஜெட்... மைகாட்! இது வந்து நம்ம பராமரிப்பு இலாகா முழுதுக்குமாகத் தரப்படும் ஒரு வருஷ ஒதுக்கீட்டுக்குச் சமம்! இப்படி ஒரு புரொபோஸலோட நான் மேனேஜ்மென்டிடம் போனால் என்ன செய்வாங்க தெரியுமா? முதலில் உங்களை வெளியே அனுப்பச் சொல்லுவாங்க; வேணுமானால் கூடவே நீங்களும் போகலாம் என்று எனக்கும் வாசலைக் காட்டுவாங்க. அரசாங்கமா, சுற்றுப்புற இலாகாவா... எதுவானாலும் 'வேண்டிய' முறையில் கவனித்துக் கொள்ள நாங்கள் வேறு ஆட்களை பார்த்துக் கொள்கிறோம்னுதான் சொல்வாங்க."

"..................."

"இது ஒரு உற்பத்தி ஸ்தாபனம்... வருஷ முடிவில் பாலன்ஸ் ஷீட்டில் லாபம் எவ்வளவு என்பதை அறிவதில் உள்ள ஆர்வம் மற்றதில் இருப்பதில்லை. உற்பத்தியைப் பெருக்கி, லாபம் அதிகரிக்கிற மாதிரி உங்களிடம் திட்டம் ஏதாவது உள்ளதா, கொடுங்கள்! உடனடியாகச் செயல்படுத்தப்படும். மற்றவை... தே கேன் வெய்ட்,



"எதுக்குடா உனக்கு நீயே சிரிச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கே?"

"நீங்க ஏதாவது ஜோக் அடிச்சா எப்படி சிரிக்கிறதுன்னு ஒத்திகை பார்த்துக்கிட்டிருந்தேன் சார்!"

- ஏ.ஆர்.எம்.

இதுதான் நிர்வாகத்தின் கொள்கை."

"உற்பத்திப் பெருக்கமும் லாப நோக்கமும் முக்கியம்தான் சார். கூடவே கம்பெனிக்குச் சில சமூகப் பொறுப்புக்களும் உண்டல்லவா? இதை நிர்வாகத்திடம் எடுத்துச் சொல்ல வேண்டியது நம்மைப் போன்றவர்களது கடமையில்லையா சார்?"


"சொல்லிக் கொண்டுதான் இருக்கிறோம் ஆனந்த். நிர்வாகமும் செய்து கொண்டுதானே இருக்குது! அதனால்தான் சமூகநலக் காடுகள் திட்டப்படி நம்ம கம்பெனியைச் சுற்றி ஏராளமாய் மரங்கள் வளர்த்திருக்கிறோம். மந்திரி வந்து ஆரம்பித்து வைத்து, பாராட்டிப் பேசவில்லையா? உள்ளூர் பள்ளிக்கூடத்துக்குப் பார்க் அமைத்துக் கொடுத்திருக்கிறோம்; கம்பெனி பேராலே ஸ்காலர்ஷிப் வழங்குகிறோம். இதெல்லாம் கம்பெனியின் சமூகப் பொறுப்பின் அடையாளம்தானே.. அதுவும் நீங்கள் பொறுப்பேற்ற பிறகு இந்த வேலைகளெல்லாம் ஊக்கமாய் நடந்து வருவது பெருமையான விஷயம்தான். இதுக்கு மேல் கம்பெனி என்ன செய்ய முடியும்? கழிவுநீர் கால்வாய் ஓரத்தில் ஜனங்கள் வீடு கட்டி குடியிருந்தால் நோய் நொடிகள் வந்துதான் தீரும். அதுக்கு நம் கம்பெனியா பொறுப்பு?"

"ஏழை ஜனங்க சார்! வேறு போக்கிடம் இல்லாததால்தான் இப்படியொரு நரக வாழ்க்கையில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்ம கம்பெனி மனம் வைத்தால் அவர்கள் வேதனையை ஓரளவு குறைக்க முடியும்! நாம் இது செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்...!"

"ஸ்டாப் இட் ஆனந்த்!"

ஜி.எம். கை உயர்த்தி அவனை அடக்கினார்.

"நினைவிருக்கட்டும்! நீங்கள் அந்த



இது தெள்ளத் தெளிவு. ஒரு இந்திய பிராண்ட்
காத்திருக்கிறது சர்வதேச போட்டிக்காக
சிகரத்தின் உச்சியிலே தனித்து நிற்கும் ஒனிடா கேஓய்.
தன்னிகரற்ற டிவியின் அனைத்து சிறப்பம்சங்களுடன் காத்திருக்கிறது.
சரி நிகர் போட்டிக்காக ... கடுமையான சவாலுக்காக
சவால் எனில் எப்படிப்பட்ட பிராண்டுகளிடமிருந்து ...
ஒனிடா கேஓய்யின் மகா சக்தி வாய்ந்த மாஸ்டர் கமாண்ட் கண்ட்ரோல ...
உலகின் முதன் முதலான கராவ்கே தேர்வுடன் கூடிய
53 செமீ டிவியின் வெல்ல முடியாத தரம்...
அல்லது வீட்டிலேயே அரங்க ஒலியின் அனுபவத்தைத்
தரும் இதன் ஜி-ஹார்ன் ஒலி.
Avenues.O.405.95


இயற்கையைக் கண்டு மிரளாத பிராண்டுகளிடமிருந்து.
உலகிலே முன்னேற்றம் கண்ட சில நாடுகளில்
இப்போது இதே போன்ற பிராண்டுகள்
மெதுவே தலை தூக்கி இருக்கலாம்.
ஆனால் அவற்றோடும் போட்டியிடத் துடியாய் துடிக்கிறது
ஒனிடா கேஓய். வெற்றி வாகை சூடப்போவது ஒனிடாதான்...
மற்றவரை காக்கப்போவது கடவுள்தான்.
ஒனிடா
கேஓய் சீரீஸ்
இந்தியாவிற்குப் பெருமை ... உலகிற்குப் பொறாமை



"ஹோட்டல்ல சரக்கு மாஸ்டரா இருக்கிறவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பா போச்சு."

"என்னாச்சு?"

"தோசை சுடச்சொன்னா துடைப்பம் வேணும்னு அடம்பிடிக்கிறாரே!"

– சீர்காழி வி. ரேவதி

ஏரியாவுக்கு ஸானிட்டரி இன்ஸ்பெக்டர் அல்ல. இந்தக் கம்பெனியோட சுற்றுப்புற பாதுகாப்பு இன்ஜீனியர். அநாவசியமான விஷயங்களில் தலையிட முயற்சிப்பது உங்கள் எதிர்காலத்துக்கு நல்லதல்ல!"

ஆனந்த் எழுந்து கொண்டான். மேற்கொண்டு மோதிப் பார்ப்பது விரயமே. இங்கே அவன் ஒப்புக்குச் சப்பாணி. சுற்றுப் புறப் பாதுகாப்பு என்ற பெயரில் அவனைப் பட்டம் கட்டி உட்கார்த்தி வைத்திருப்பது சட்டத்தை ஏமாற்றும் கண் துடைப்பு மட்டுமே.

"வணக்கம் சார்!"

ஒரு கையில் வேஸ்டும் மறுகையில் ஸ்பானருமாக இன்ஜின் ரூமிலிருந்து வெளியே வந்த மெக்கானிக்கின் குரல் ஆனந்தின் நினைவுகளைக் கலைத்தது. புல் மூட்டை சுமந்து வெளியேறின அந்தப் பெண்ணின் சொரிக் குழந்தையும் அதன் சாம்பல் பூத்த உடம்பும் ஊறி விட்ட நினைவுத் தொடர்.

"சார், இரண்டாம் நம்பர் இன்ஜினும் நின்னு போச்சு சார்! நேற்று நைட் ஷிஃப்டிலிருந்து ஓடறதில்லை."

"என்னப்பா... பெரிசா குண்டைத் தூக்கிப் போடறியே. என்ன ஆச்சு?"

"உங்களுக்குத் தெரியுமே சார். தடுமாறிக்கிட்டுத்தானே இருந்தது. நேத்து சுத்தமா நின்னு போச்சு சார்."

ஆனந்துக்குள் இடி இறங்கினது போன்ற உணர்வு. சாவு சேதி கேட்டது மாதிரி மனத்துக்குள் தள்ளாட்டம்.

"ஏம்பா மோட்டாரை செக் பண்ணிப் பாத்தியா? எலக்ட்ரிக்கல் கோளாறு ஏதாவது...?"

"சர்க்யூட் முழுக்கப் பிரிச்சுப் பார்த்துட்டேன் சார். அதிலே பிரச்னை ஏதுமில்லை. இன்ஜின்தான் சுத்தமா 'டெட்' ஆகிப் போச்சு."

மூன்று என்ஜின்கள் வேலை செய்தாலே போதாத இந்த இடத்தில், ஒன்று வெகு காலம் முன்பே உழைத்து ஓய்ந்து உட்கார்ந்து விட்டது. இவ்வளவு நாளும் இரண்டு இன்ஜின்களை வைத்துக் கொண்டு தந்திரமாய் சமாளித்து வந்தான் ஆனந்த். இப்போது இன்னொன்றும் பழுதுபட்டுப் போனதை அறிந்த போது சிறகுகள் வெட்டப்பட்ட பறவை மாதிரி. அஸ்திவாரமே ஆட்டம் கண்டு விட்ட மாதிரி...

இரண்டாம் நம்பர் இன்ஜின் ரூமுக்குள் நுழைந்து சோதித்துப்பார்த்துவிட்டு தளர்ந்து போய் உதடு பிதுக்கி வெளியே வந் தான் ஆனந்த்.

கண்ணுக்கு முன்னால் பிரளயம் போல ஓடும் கழவுநீர்க் கால்வாய். அதில் கட்டவிழ்த்து விட்ட மாதிரி பாம்பும் தேளும் பூரானுமாய் நெளிந்து, விஷம் துப்பும் கொடிய ஜந்துக்கள். அவற்றின் தீண்டுதலுக்கு ஆளாகி வேதனையில் துடிக்கும் ஏழைக் குழந்தைகள்... அதன் ஓல அழுகைகள். சாபமிடும் கண்கள். சாம்பல் பூத்த உடல்கள்...

"வாங்க மிஸ்டர் ஆனந்த். நானே உங்களைக் கூப்பிட நினைத்திருந்தேன்."


உள்ளே நுழைந்த ஆனந்தை விசாலமான புன்னகையுடன் வரவேற்றார் ஜெனரல் மானேஜர்.

"ஒரு சந்தோஷமான செய்தி, ஆனந்த்! சமூகநலக் காடுகள் திட்டத்துக்கான இந்த வருஷப் பரிசு நம்ம கம்பெனிக்கு கிடைச்சிருக்கு. கம்பெனி சார்பாக விழாவில் இந்தப் பரிசை பெற்றுக் கொள்ள உங்கள் பெயரைத்தான் சிபாரிசு பண்ணியிருக்கிறேன்."

"மன்னிக்கணும் சார். என்னால் முடியாது."

"ஏன்?"

"நான் என் ராஜினாமாவைத் தரத்தான் இப்போது இங்கே வந்திருக்கேன் சார்."



"எதுக்காக அவர போலீஸ் பிடிச்சிட்டுப் போறாங்க?"

"ரிடையர் ஆகியும் இன்னும் போலீஸ்ல இருக்கேன்னு பொய் சொல்லி மாமூல் வாங்கிட்டு இருந்தாராம் அதான்!"

– எஸ். பழனிவேலு

பார்த்திபன் கனவு

38. என்ன தண்டனை?

அமாவாசையன்றைக்கு மறுநாள் பொழுது புலர்ந்ததிலிருந்து மாமல்லபுரத்து அரண்மனையில் குந்தவி தேவிக்கு ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்து கொண்டிருந்தது. அடிக்கடி அரண்மனை உப்பரிகை மாடத்தின் மேல் ஏறுவதும், நாலாபுறமும் பார்ப்பதும், மறுபடி அவசரமாகக் கீழிறங்குவதும், பணியாட்களுக்கு ஏதேதோ கட்டளையிடுவதும், உறையூரிலிருந்து அவளுடன் வந்திருந்த வள்ளியிடம் இடையிடையே பேசுவதுமாயிருந்தாள். என்ன பேசினாலும், எதைச் செய்தாலும் அவளுடைய செவிகள் மட்டும் குதிரைக் குளம்படியின் சத்தத்தை வெகு ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருந்தன. பணியாட்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போதே சட்டென்று பேச்சை நிறுத்திக் காதுகொடுத்துக் கேட்பாள். விக்கிரமனையும் பொன்னனையுந்தான் அவள் அவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் என்று சொல்ல வேண்டியதில்லை.

விக்கிரமனும் பொன்னனும் வந்தவுடனேயே என்ன செய்ய வேண்டுமென்று குந்தவி தீர்மானித்து வைத்திருந்தாள். விக்கிரமனுடன் அதே கப்பலில் தானும் போய்விடுவது என்ற எண்ணத்தை அவள் மாற்றிக் கொண்டு விட்டாள். அதனால் பலவிதச் சந்தேகங்கள் தோன்றி மறுபடியும் விக்கிரமன் பிடிக்கப்படுவதற்கு ஏதுவாகலாம். இது மட்டுமல்ல; தந்தையிடம் சொல்லிக் கொள்ளாமல் அவ்விதம் ஓடிப் போவதற்கும் அவளுக்கு மனம் வரவில்லை! நரசிம்ம சக்கரவர்த்தியின் பரந்த கீர்த்திக்குத் தன்னுடைய செயலால் ஒரு களங்கம் உண்டாகலாமா! அதைக் காட்டிலும் விக்கிரமன் முதலில் கப்பலேறிச் சென்ற பிறகு, தந்தையிடம் நடந்ததையெல்லாம் கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, விக்கிரமனையே தான் பதியாக வரித்து விட்டதையும் தெரிவிப்பதே முறையல்லவா? அப்போது சக்கரவர்த்தி தன்னைக் கட்டாயம் மன்னிப்பதுடன், கப்பலில் ஏற்றித் தன்னைச் செண்பகத் தீவுக்கும் அனுப்பி வைத்துவிடுவார். 'உன்னுடைய கல்யாணத்துக்காக நான் ஒரு பிரயத்தனமும் செய்யப் போவதில்லை. உன்னுடைய பதியை நீயேதான் ஸ்வயம்வரம் செய்து கொள்ள வேண்டும்' என்று சக்கரவர்த்தி அடிக்கடி கூறிவந்திருக்கிறாரல்லவா? அப்படியிருக்க, இப்போது தன் இஷ்டத்திற்கு அவர் ஏன் மாறு சொல்ல வேண்டும்?

இத்தகைய தீர்மானத்துடன் குந்தவி விக்கிரமனுடைய வரவுக்கு வழி நோக்கிக் கொண்டிருந்தாள். வானவெளியில் சூரியன் மேலே வரவர, குந்தவியின் பரபரப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது. கடைசியாக, கிட்டத்தட்ட நடு மத்தியானத்தில் குதிரைகளின் குளம்படிச் சத்தம் கேட்டபோது, குந்தவியினுடைய இருதயம் விம்மி எழுந்து தொண்டையை அடைத்துக் கொண்டது. மறுபடியும் ஒரு தடவை விக்கிரமனைக் கப்பலில் ஏற்றி அனுப்பி விட்டுத் தான் பின் தங்குவதா? கதையிலே, காவியத்திலே வரும் வீரப் பெண்மணிகள் எல்லாரும் அவ்விதந்தானா செய்திருக்கிறார்கள்? அர்ச்சுனனோடு சுபத்திரை கிளம்பிப் போய்விடவில்லையா? கிருஷ்ணனோடு ருக்மணி போகவில்லையா? தான் மட்டும் எதற்காகப் பின் தங்க வேண்டும்? விக்கிரமனுக்கு விடை கொடுத்தனுப்புவது தன்னால் முடியாத காரியம் என்று அவளுக்குத் தோன்றிற்று. குதிரைகளின் காலடிச் சத்தம் நெருங்க நெருங்க அவளுடைய மனக்குழப்பம் அதிகமாயிற்று.

வந்த குதிரைகள் அரண்மனை வாசலில் வந்து நின்றன. வாசல் காப்பாளருக்கு, இரத்தின வியாபாரி தேவசேனர் வந்தால் உடனே தன்னிடம் அழைத்து வரும்படி குந்தவி கட்டளையிட்டிருந்தாள். இதோ, குதிரையில், வந்தவர்கள் இறங்கி உள்ளே வருகிறார்கள். அடுத்த வினாடி அவரைப் பார்க்கப் போகிறோம்!... ஆகா! இதென்ன? உள்ளே வருகிறது யார்! சக்கர

அமரர் கல்கி

வர்த்தியல்லவா?.... குந்தவியின் தலை சுழன்றது. எப்படியோ பல்லைக் கடித்துக் கொண்டு சமாளித்துக் கொண்டாள். சிறிது தடுமாற்றத்துடன், "அப்பா! வாருங்கள்! வாருங்கள்! இத்தனை நாளாய் எங்கே போயிருந்தீர்கள்?" என்றாள்.

சக்கரவர்த்தி ஆவலுடன் குந்தவியின் அருகில் வந்து அவளைத் தழுவிக் கொண்டார். உடனே, திடுக்கிட்டவராய், "ஏன் அம்மா! உன் உடம்பு ஏன் இப்படிப் பதறுகிறது?" என்று கேட்டார். "ஒன்றுமில்லை, அப்பா! திடீரென்று வந்தீர்களல்லவா?" என்றாள் குந்தவி.

"இவ்வளவுதானே? நல்லது, உட்கார். குழந்தாய்! நீ உறையூரிலிருந்து எப்போது வந்தாய்?" எதற்காக இவ்வளவு அவசரமாய் வந்தாய்?" என்று கேட்டுக் கொண்டே சக்கரவர்த்தி அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்தார். குந்தவிக்கு அப்போது ஏற்பட்ட இதயத் துடிப்பைச் சொல்ல முடியாது.

'அப்பா இங்கே இருக்கும்போது அவர் வந்து விட்டால் என்ன செய்கிறது? இப்பொழுது வருகிற சமயமாச்சே! அரண்மனைக்குள் வராமல் நேரே போய்க் கப்பலேறச் செய்வதற்கு வழி என்ன?' என்றெல்லாம் எண்ணி அவள் உள்ளம் தவித்தது. அவளுடைய தவிப்பைக் கவனியாதவர் போல் சக்கரவர்த்தி, "குழந்தாய்! இன்று சாயங்காலம் நான் உறையூருக்குக் கிளம்புகிறேன். நீயும் வருகிறாயா? அல்லது உறையூர் வாசம் போதுமென்று ஆகிவிட்டதா?" என்றார்.

"உறையூருக்கா? எதற்காக அப்பா?" என்றாள் குந்தவி.

"ரொம்ப முக்கியமான காரியங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன, அம்மா! அருள்மொழித் தேவி அகப்பட்டு விட்டார்."

"ஆகா!" என்று அலறினாள் குந்தவி.

"ஆமாம், அருள்மொழித் தேவியைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்தது யார் தெரியுமா? நீ அடிக்கடி சொல்வாயே, யாரோ வேஷதாரிச் சிவனடியார் என்று, அவர் தான்!"

"என்ன! என்ன!.... தேவி எங்கே இருந்தார்? யார் கொண்டு போய் வைத்திருந்தார்கள்? அந்தப் போலிச் சிவனடியார்... ஒரு வேளை அவரேதான்...."

சக்கரவர்த்தி புன்னகையுடன், "இன்னும் உனக்குச் சந்தேகம் தீரவில்லையே, அம்மா! இல்லை, அந்தச் சிவனடியார் அருள்மொழி ராணியை ஒளித்து வைத்திருக்கவில்லை. ராணியைக் கொண்டு போய் வைத்திருந்தவன் - நான் முன்னமேயே ஒரு தடவை சொன்னேனே - அந்தக் கபாலிகக் கூட்டத்தின் பெரிய பூசாரி - மகா கபால பைரவன். சிவனடியார் அருள்மொழி ராணியைக் காப்பாற்றிக் கொண்டு வந்ததின் பலன், அவருடைய உயிருக்கே ஆபத்து வருவதாயிருந்ததாம். நேற்று இராத்திரி மகா கபால பைரவன் சிவனடியாரைக் காளிக்குப் பலி கொடுப்பதாக இருந்தானாம். அவரைக் கட்டிப் பலிபீடத்தில் கொண்டு வந்து போட்டாகிவிட்டதாம். கழுத்தில் கத்தி விழுகிற சமயத்தில் சிவனடியாரை யார் வந்து காப்பாற்றினார்களாம் தெரியுமா?"

"யார் அப்பா?"

"செண்பகத் தீவிலிருந்து வந்திருந்தானே - இரத்தின வியாபாரி தேவசேனன் - அவனும் படகோட்டி பொன்னனும் நல்ல சமயத்தில் வந்து காப்பாற்றினார்களாம்!"

குந்தவி ஏதோ சொல்வதற்கு வாயைத் திறந்தாள். ஆனால் வார்த்தை ஒன்றும் வெளியில் வரவில்லை. அவளுடைய அழகிய வாய், மாதுளை மொட்டின் இதழ்கள் விரிவது போல் விரிந்து அப்படியே திறந்தபடி இருந்தது.

"இன்னும் ஒரு பெரிய அதிசயத்தைக் கேள், குழந்தாய்! இரத்தின வியாபாரி தேவசேனன் என்பது உண்மையில் யார் தெரியுமா? அவனும் ஒரு வேஷதாரிதான். தேசப் பிரஷ்டனான சோழநாட்டு இளவரசன் விக்கிரமன்தான் அம்மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு அவனுடைய தாயாரையும்

அருள்வாக்கு



பையன் வீட்டிலேயே ட்யூஷன் கற்றுக் கொண்டால் பையன் யஜமான், வாத்தியார் சேவகன் என்றே அர்த்தம். ஹாஸ்டலிலும் காலேஜிலும் கூடத் 'தான் யஜமான்' என்பதால்தான் ஸ்டிரைக் பண்ணுகிறான். வார்டனையும் ப்ரொபஸரையும் அடிக்கப் போகிறான். ஏனென்றால் இங்கெல்லாமும் முதலில் பையனிடம் கையை நீட்டிப் பணத்தை வாங்கிக் கொண்டு விடுகிறார்கள். குருகுலத்திலோ கடைசியாகத்தான் தக்ஷிணை. இம்மாதிரி விஷயங்களில் நம் பூர்விகர்களின் சைகாலஜி - நுட்பம் ஆச்சரியமாயிருக்கிறது! பல வருஷம் குருவோடு சேர்ந்து அன்பாகப் பழகினபின் சிஷ்யனுக்கே "எதைத்

தருவோம், எதைத்தான் தரக்கூடாது?" என்று நன்றியும் ஆர்வமுமாக இருக்கும். இம்மாதிரி சந்தர்ப்பத்தில் "இந்திராணியின் குண்டலத்தைக் கொண்டு வா" "நாகரத்தினத்தைக் கொண்டு வா" என்று கேட்ட குருமாரும் உண்டு. ஆனால் இப்படிக் கேட்டவர்கள் அபூர்வமே. சிஷ்யனால் இம்மாதிரி அஸாத்யத்தை யும் சாதிக்க முடி கிறது என்று காட்டி அவனைப் பெருமைப் படுத்தவே இவர்கள் இப்படிக் கேட்பார்கள். பொதுவில் எந்த குருவும் துராசை பிடித்து எதுவும் கேட்கமாட்டார். அல்ப ஸந்தோஷியாக எதிலும் திருப்திப்பட்டு விடுவார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



"உண்மையை நாம் பெற்றுத் திகழ்வ தற்கு நாம் பொய்மையுடன் போராடித்தான் தீர வேண்டும். அப்போது தான் உண்மையின் மதிப்பை நாம் அறிவோம். குறுக்கு வழியில் பணம் நிறைய அளவு வருகிறது என்றால் அதை மதிக்காத முறையில் செலவு செய்து விடுவோம்; ஆனால், உழைத்துச் சேர்க்கும் பணத்தை இவ்விதம் செலவு செய்ய மனம் வரவே வராது. இதைப் போல, பல வழிகளிலும் தேடி உணர்ந்த உண்மை என்னும் மாபெரும் பொக்கிஷத்தைப் பெரிதும் மதித்துப் போற்ற வேண்டும்."

— ஸ்ரீ சத்ய சாய்பாபா.

நன்றி : ஆபஸ்தம்பன் எழுதிய 'சக்திமிகு ஸ்ரீ சாயிபாபா'.

தாய்நாட்டையும் பார்ப்பதற்காக வந்தானாம்! என்ன தைரியம், என்ன துணிச்சல், பார்த்தாயா குழந்தாய்!"

குந்தவி விம்மிய குரலுடன், "அப்பா! அவர்கள் எல்லாரும் இப்போது எங்கே?" என்று கேட்டாள்.

"யாரைக் கேட்கிறாய், அம்மா! விக்கிரமனையும், பொன்னனையுமா? அவர்களை உறையூருக்குக் கொண்டு போகச் சொல்லியிருக்கிறேன். நானே நேரில் வந்து விசாரணை நடத்துவதாகச் சொல்லியிருக்கிறேன். அதற்காகத்தான் முக்கியமாக உறையூருக்குப் போகிறேன், நீயும் வருகிறாயா?"

இத்தனை நேரமும் குந்தவி அடக்கி வைத்துக் கொண்டிருந்த துக்கமெல்லாம் இப்போது பீறிக் கொண்டு வெளியில் வந்தது. தந்தையின் மடியில் தலையை வைத்துக் கொண்டு 'கோ' என்று கதற ஆரம்பித்தாள்.

இவ்வளவு நேரமும் புன்னகையுடன் பொலிந்து கொண்டிருந்த சக்கரவர்த்தியின் முகபாவத்தில் இப்போது மாறுதல் காணப்பட்டது. அவருடைய கண்களின் ஓரத்தில் ஒரு துளி ஜலம் முத்துப் போல் பிரகாசித்தது. குந்தவியின் தலையையும் முதுகையும் அவர் அன்புடன் தடவிக் கொடுத்து, "குழந்தாய்! உனக்கு என்ன துக்கம்? உன் மனத்தில் ஏதோ வைத்துக் கொண்டு சொல்லாமலிருக்கிறாய். என்னிடம் மறைப்பானேன்! எதுவாயிருந்தாலும் சொல்!" என்றார்.

குந்தவி கொஞ்சங் கொஞ்சமாக எல்லாவற்றையும் சொன்னாள். காஞ்சி நகரின் வீதியில் சங்கிலிகளால் கட்டுண்டு சென்ற விக்கிரமனைச் சந்தித்ததிலிருந்து தன்னுடைய உள்ளம் அவனுக்கு வசமானதைத் தெரிவித்தாள். பிறகு, மகேந்திர மண்டபத்தில் ஜுரத்துடன் உணர்வு இழந்து கிடந்த விக்கிரமனைப் பல்லக்கில் ஏற்றி அழைத்துச் சென்றதிலிருந்து இன்று அவனைக் கப்பலேற்றி அனுப்ப உத்தேசித்திருந்த வரையில் எல்லாவற்றையும் கூறினாள். கடைசியில், "அப்பா! அந்தச் சோழ ராஜ குமாரனையே என் நாதனாக வரித்து விட்டேன். மற்றொருவரை மனதிலும் நினைக்க மாட்டேன்" என்று கூறி விம்மினாள்.

சக்கரவர்த்தி அப்போது அன்பு கனிந்த குரலில் கூறினார் :- "குழந்தாய், இந்த உலகில் அன்பு ஒன்றுதான் சாசுவதமானது; மற்றதெல்லாம் அநித்தியம். இரண்டு இளம் உள்ளங்கள் அன்பினால் ஒன்று சேரும்போது, அங்கே அன்பு வடிவமான கடவுளே சாந்நித்தியமாயிருக்கிறார். அவ்விதம் அன்பினால் சேர்ந்த உள்ளங்களுக்கு மத்தியில் நின்று தடை செய்ய யாருக்குமே பாத்தியதை கிடையாது; தாய் தகப்பனுக்குக் கூடக் கிடையாதுதான். ஆகையால், நீ சோழ நாட்டு இளவரசனை மணம் புரிய விரும்பினாயானால், அதை ஒருநாளும் நான் தடை

செய்யேன். ஆனால், குழந்தாய்! நமது பல்லவ வம்சம் நீதி நெறி தவறாது என்று புகழ் பெற்றது. பல்லவ சாம்ராஜ்யத்தில் ராஜகுலத்தினருக்கும் ஒரு நீதிதான்; ஏழைக் குடியானவனுக்கும் ஒரு நீதிதான். ஆகையால், சோழ ராஜகுமாரன் விஷயத்தில் ராஜ்ய நீதிக்கிணங்க விசாரணை நடைபெறும். குற்றத்துக்குத் தகுந்த தண்டனை கிடைக்கும். அதற்குப் பிறகும், நீ அந்த ராஜகுமாரனை மணக்க விரும்பினால், நான் குறுக்கே நிற்கமாட்டேன்."

இதைக் கேட்ட குந்தவி, "அப்பா! தேசப்பிரஷ்டமான வர்கள் திரும்பி வந்தால் தண்டனை என்ன?" என்றாள்.

"சாதாரணமாக, மரண தண்டனைதான். ஆனால், சோழ ராஜகுமாரன் விஷயத்தில் யோசிக்க வேண்டிய அம்சங்கள் இருக்கின்றன."

"என்ன அப்பா?"

"நீதான் அடிக்கடி சொல்வாயே, அந்த ராஜகுமாரனுடைய காரியங்களுக்கெல்லாம் அவன் பொறுப்பாளியல்ல, போலிச் சிவனடியாருடைய போதனைதான் காரணம் என்று. அது உண்மைதான் என்று தோன்றுகிறது. அந்தச் சிவனடியாரும் இப்போது அகப்பட்டிருக்கிறார். அவரையும் விசாரித்து உண்மையறிய வேண்டும்."

அப்போது குந்தவி, மனதிற்குள், 'ஆமாம், அந்தப் போலிச் சாமியாரால்தான் எல்லா விபத்துக்களும் வருகின்றன. அவர் அநாவசியமாக நேற்றிரவு ஒரு ஆபத்தில் சிக்கிக் கொண்டிராவிட்டால், இத்தனை நேரம் அந்த வீர ராஜகுமாரர் கப்பலில் ஏறி இருப்பாரல்லவா?' என்று எண்ணமிட்டாள்.

"அதோடு இன்னும் ஒரு விஷயமும் யோசிக்க வேண்டியிருக்கிறது. செண்பகத் தீவின் இரத்தின வியாபாரிக்குக் குதிரை கொடுத்துச் சோழ நாட்டுக்கு அனுப்பி வைத்தது யார்? ஞாபகம் இருக்கிறதா, குழந்தாய்?"

"அப்பா!" என்று வியப்பும் ஆனந்தமும் கலந்த குரலில் குந்தவி கூச்சலிட்டாள். ஒற்றர் தலைவன் வேஷத்திலிருந்த சக்கரவர்த்தி குதிரை கொடுத்து அனுப்பித்தானே விக்கிரமன் சோழ நாட்டுக்குப் போனானென்பது அவளுக்கு நினைவு வந்தது.

"அப்படியானால், எப்படி தண்டனை ஏற்படும் அப்பா?" என்றாள்.

"எல்லாம், விசாரிக்கலாம் குழந்தாய்! விசாரித்து எது நியாயமோ, அப்படிச் செய்யலாம். பல்லவ ராஜ்யத்தில் நீதி தவறி எதுவுமே நடக்காது" என்றார் சக்கரவர்த்தி.

39. சிரசாக்கினை

"ஆகா இது உறையூர் தானா?" என்று பார்த்தவர்கள் ஆச்சரியப்படும் விதமாகச் சோழ நாட்டின் தலைநகரம் அன்று அலங்கரிக்கப்பட்டு விளங்கிற்று. பார்த்திப மகாராஜா போர்க்களத்துக்குப் புறப்பட்ட போது அவருடன் புடை பெயர்ந்து சென்ற லக்ஷ்மிதேவி மீண்டும் இன்றுதான் உறையூருக்குத் திரும்பி வந்திருக்கிறாள் என்று சொல்லும்படியிருந்தது. உறையூர் வாசிகளிடையே வெகு காலத்திற்குப் பிறகு இன்று கலகலப்பும் உற்சாகமும் காணப்பட்டன. வெளியூர்களிலிருந்து ஜனங்கள் வண்டிகளிலும், பலவித வாகனங்களிலும் கால்நடையாகவும் வந்து கொண்டிருந்தார்கள். வீதிகளில் ஆங்காங்கு ஜனங்கள் கூட்டமாய் நின்று கிளர்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அன்று காஞ்சி நரசிம்ம பல்லவ சக்கரவர்த்தி உறையூரில் பொது ஜன சபை கூட்டுகிறார் என்றும், இதற்காகச் சோழ நாட்டின் பட்டிணங்களிலும் கிராமங்களிலும் உள்ள பிரமுகர்களையெல்லாம் அழைத்திருக்கிறார் என்றும் பிரஸ்தாபமாயிருந்தது. அன்று நடக்கப் போகும் சபையில் பல அதிசயங்கள் வெளியாகுமென்றும் பல விசேஷ சம்பவங்



கன் நிகழுமென்றும் ஜனங்கள் எதிர் பார்த்தார்கள். அருள்மொழித் தேவியும், இளவரசர், விக்கிரமரும் உறையூருக்குத் திரும்பி வந்திருக்கிறார்களென்றும் செய்தி பரவியிருந்தது. இன்னும் இளவரசர் இரத்தின வியாபாரி வேஷத்தில் வஸந்த மாளிகையில் வந்திருந்தாரென்றும், குந்தவி தேவிக்கும் அவருக்கும் காதல் உண்டாகிக் கல்யாணம் நடக்கப் போகிறதென்றும் இதனால் உறையூரும் காஞ்சியும் நிரந்தர உறவு கொள்ளப் போகிறதென்றும் சிலர் சொன்னர்கள். வேறு சிலர் இதை மறுத்து, "தேசப் பிரஷ்டத் தண்டனைக்குள்ளான இளவரசரைச் சக்கரவர்த்தி விசாரணை செய்து பொதுஜன அபிப்பிராயத்தையொட்டித் தீர்ப்புக் கூறப் போகிறார்" என்றார்கள். நாலு நாளைக்கு முன்னால், அமாவாசை இரவில், கொல்லி மலைச்சாரலில் நடந்த சம்பவங்களைப் பற்றியும், மாரப்ப பூபதியின் மரணத்தைப் பற்றியும் ஜனங்கள் கூட்டியும் குறைத்தும் பலவாறாகப் பேசிக் கொண்டார்கள். பொன்னனும் வள்ளியும் அன்று உறையூர் வீதிகளின் வழியாக வந்தபோது, ஆங்காங்கே ஜனங்கள் அவர்களை நிறுத்தி, "பொன்னா! இன்று என்ன நடக்கப் போகிறது?" என்று விசாரித்தார்கள். பொன்னனோ, தலையை ஒரே அசைப்பாக அசைத்து, "எனக்கு ஒன்றும் தெரியாது. சாயங்காலமானால், தானே எல்லாம் வெளியாகிறது. ஏன் அவசரப்படுகிறீர்கள்?" என்றான். வள்ளியை அழைத்துக் கேட்ட பெண் பிள்ளைகளிடம் வள்ளியும் அதே மாதிரிதான் மறுமொழி சொன்னாள். பொன்னனுக்கும் வள்ளிக்கும் அன்று இருந்த கிராக்கிக்கும் அவர்களுக்கு அன்று ஏற்பட்டிருந்த பெருமைக்கும் அளவேயில்லை.

தேவலோகத்தில் தேவேந்திரனுடைய சபை கூடியிருப்பதைப் பார்த்தவர்கள் யாரும் திரும்பி வந்து நமக்கு அந்தச் சபையைப்பற்றிக் கூறியது கிடையாது. ஆனால் அன்று உறையூரில் கூடிய மாமல்ல நரசிம்ம சக்கரவர்த்தியின் சபையைப் பார்த்தவர்கள், "தேவேந்திரனுடைய சபை கிட்டத்தட்ட இந்த மாதிரிதான் இருக்க வேண்டும்!" என்று ஏகமனதாக முடிவு கட்டினார்கள். அவ்வளவு விமரிசையாக அலங்கரிக்கப்பட்டிருந்த சபா மண்டபத்தில் சபை கூடிற்று. குறிப்பிட்ட நேரத்திற்குள் 'தேவேந்திரனைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் வந்து தத்தம் ஆசனங்களில் அமர்ந்து விட்டார்கள். சக்கரவர்த்தியின் சிம்மாசனத்துக்கு ஒரு பக்கத்தில், வசிஷ்டரையும் வாமதேவரையும் போல், சிவனடியாரும் சிறுத்தொண்டரும் வீற்றிருந்தார்கள். சிம்மாசனத்தின் மற்றொரு பக்கத்தில் சக்கரவர்த்தியின் குமாரன் மகேந்திரனும், குமாரி குந்தவியும் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு அடுத்தாற் போல் அருள்மொழித் தேவியும் சிறுத்தொண்டரின் தர்ம பத்தினி திருவெண்காட்டு நங்கையும் காணப்பட்டனர். அவர்களுக்கு மத்தியில், சிறுதொண்டரின் அருமைப் புதல்வன் சீராளதேவன் உட்கார்ந்து, அதிசயத்தினால் விரிந்த கண்களினால் நாலாபுறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். இவர்களுக்குப் பின்னால் பொன்னனும் வள்ளியும் அடக்க ஒடுக்கத்துடன் நின்று கொண்டிருந்தார்கள். சக்கரவர்த்தயின் சிம்மாசனத்துக்கு நேர் எதிரே, சற்றுத் தூரத்தில் பல்லவ சேனாபதியும் இன்னும் சில பல்லவ வீரர்களும் சூழ்ந்திருக்க, விக்கிரமன் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து உட்கார்ந்திருந்தான். குந்தவி



இருந்த பக்கம் பார்க்கக் கூடாதென்று அவன் எவ்வளவோ பிடிவாதமாக மனத்தை உறுதிப்படுத்தி வைத்துக் கொண்டிருந்தா னென்றாலும் சில சமயம் அவனை அறி யாமலே அவனுடைய கண்கள் அந்தப் பக்கம் நோக்கின. அதே சமயத்தில் குந்தவி யும் தன்னை மீறிய ஆவலினால் விக்கிர மனைப் பார்க்கவும், இருவரும் திடுக்கிட்டுத் தங்களுடைய மனஉறுதி குலைந்ததற்காக வெட்கப்பட்டுத் தலைகுனிய வேண்டியதா யிருந்தது.

இன்னும் அந்த மகத்தான சபையில், மந்திரிகளும் படைத் தலைவர்களும் தனாதி காரிகளும் பண்டிதர்களும் கலைஞர்களும் கவிராயர்களும் பிரபல வர்த்தகர்களும் கிரா மங்களிலிருந்து வந்த நாட்டாண்மைக்காரர் களும் அவரவர்களுக்கு ஏற்பட்ட இடத்தில் அமர்ந்திருந்தார்கள். இவர்கள் எல்லாரையும் காட்டிலும் அந்தச் சபையில் அதிகமாக அனைவருடைய கவனத்தையும் கவர்ந்த ஒருவர் சக்கரவர்த்தி குமாரன் மகேந்திரனுக் குப் பின்னால் அமர்ந்திருந்தார். அவருடைய உருவமும் உடையும் அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவரல்லர் என்பதைத் தெளிவாக எடுத் துக் கூறின. சபையினர் அவரைச் சுட்டிக் காட்டி தங்களுக்குள்ளே, "சீன தேசத்தி லிருந்து வந்திருக்கும் உலக யாத்திரிகர் இவர் தான்!" என்று பேசிக் கொண்டார்கள். யுவான் சுவாங் என்னும் அவருடைய பெயரைப் பலரும் பலவிதமாக உச்சரித்து நகையாடினார்கள்.

இந்தச் சீன யாத்திரிகரைத் தவிர இன் னும் சில அயல்நாட்டாரும் அந்த மகாசபை யில் ஒரு பக்கத்தில் காணப்பட்டார்கள். அவர்கள் நடை உடையினால் அயல் நாட்டாராகத் தோன்றினாலும், அவர்கள் பேசுகிற பாஷை தமிழாகத்தான் தெரிந்தது. சற்றே அவர்களை உற்றுப் பார்த்தோமா னால், ஏற்கெனவே பார்த்த முகங்கள் என் பது நினைவு வரும். ஆம்; செண்பகத் தீவி லிருந்து வந்த கப்பலில் இரத்தின வியாபாரி தேவசேனனுடன் வந்தவர்கள்தான் இவர் கள். அச்சபையில் நடக்கவிருந்த விசாரணை யின் முடிவாகத் தங்கள் மகாராஜாவுக்கு என்ன கதி நேரப் போகிறதோ என்று தெரிந்து கொள்ளும் ஆவல் அவர்களுக் கிருந்தது இயற்கையேயல்லவா?

சபை முழுவதிலும் ஆங்காங்கு பணி யாட்களும் பணிப் பெண்களும் நின்று வெண்சாமரங்களினால் விசிறியும் சந்தனம் தாம்பூலம் முதலியவை வழங்கியும் சபை யினருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

குறிப்பிட்ட நேரம் ஆகியும் சக்கர வர்த்தி வராதிருக்கவே சபையில், "ஏன் சக்கரவர்த்தி இன்னும் வரவில்லை?" என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளும் சப்தம் எழுந்தது. இவ்விதம் பல குரல்கள் சேர்ந்து பேரிரைச்சலாகிவிடுமோ என்று தோன்றிய சமயத்தில், சிறுத்தொண்டர் எழுந்திருந்து, கையமர்த்தி, "சபையோர்களே! சக்கரவர்த்தி சபைக்கு வருவதற்கு இன்னும் சிறிது நேரம் ஆகும் என்று செய்தி வந்திருக் கிறது. அதுவரையில், இந்தச் சபை கூடிய தின் நோக்கம் இன்னதென்பதை உங்களுக்கு எடுத்து உரைக்கும்படி எனக்குச் சக்கர வர்த்தி கட்டளையிட்டிருக்கிறார்!" என்று இடி முழக்கம் போன்ற குரலில் கூறியதும், சபையில் நிசப்தம் உண்டாயிற்று. எல்லாரும் பயபக்தியுடன் சிறுத்தொண்டருடைய முகத்தையே பார்க்கலானார்கள்.

சிறுத் தொண்டர் மேலும் கூறினார் : -

"வீர சொர்க்கமடைந்த என் அருமைத் தோழரான பார்த்திப சோழ மகாராஜாவின் புதல்வர் விக்கிரம சோழர், இன்று உங்கள் முன்னால் குற்ற விசாரணைக்கு நிறுத்தப் பட்டிருக்கிறார். சக்கரவர்த்தியின் தேசப் பிரஷ்டத் தண்டனையை மீறி அவர் இந் நாட்டுக்குள் பிரவேசித்துக் கையும் மெய்யு மாய்க் கண்டுபிடிக்கவும் பட்டார். அவர் இவ்விதம் சக்கரவர்த்தியின் ஆக்ஞையை மீறி வந்ததின் காரண காரியங்களை விசா ரணை செய்து, உங்கள் எல்லோருடைய அபிப்பிராயத்தையும் கேட்டு, சர்வ சம்மத மான நியாயத் தீர்ப்புக் கூற வேண்டுமென் பது சக்கரவர்த்தியின் விருப்பம். இதற்காகத் தான் இந்தச் சபை கூடியிருக்கிறது. நீங்கள் அபிப்பிராயம் கூறுவதற்கு முன்னால் எல்லா விவரங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். விக்கிரம சோழர், சக்கரவர்த்தி யின் கட்டளையை மீறியது குற்றமானாலும், அதற்கு அவர் மட்டும் பொறுப்பாளியல்ல, இதோ என் பக்கத்தில் வீற்றிருக்கும் என் தோழர் அதற்குப் பெரும்பாலும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வந்திருக்கிறார்!" என்று சிறுத் தொண்டர் கூறியதும் சபையில் எல் லாருடைய கவனமும் சிவனடியார் மேல் திரும்பியது. அவருடைய முகத்தில் குடி கொண்டிருந்த தேஜஸைப் பார்த்து அனை வரும் பிரமித்தார்கள். "இவர் யார் இந்தப் பெரியவர்? அப்பர் பெருமானோ இறைவன் பதமடைந்துவிட்டார். சம்பந்த சுவாமியோ இளம் பிராயத்தவர். மஹான் சிறுத் தொண் டரோ இங்கேயே இருக்கிறார். வேறு யாராக இருக்கும்? விக்கிரம சோழர் விஷயத்தில்

இவர் பொறுப்பு ஏற்றுக் கொள்ளக் காரணம் என்ன?" என்று எண்ணமிட்டனர்.

பிறகு, சிறுத்தொண்டர், பத்து வருஷங்களுக்கு முன் பார்த்திப மகாராஜா போர்க்கோலம் பூண்டு உறையூரிலிருந்து கிளம்பியதையும் வெண்ணாற்றங்கரையில் நடந்த பயங்கர யுத்தத்தையும் சபையோருக்கு ஞாபகப்படுத்தினார். பார்த்திப மகாராஜாவுடன் கிளம்பிய பத்தாயிரம் பேரில் ஒருவர்கூடத் திரும்பாமல் போர்க்களத்திலேயே மடிந்ததைச் சொன்னபோது சபையோர் புளகாங்கிதம் அடைந்தனர். அந்தப் புரட்டாசிப் பௌர்ணமியன்றிரவு, இந்தச் சிவனடியார் போர்க்களத்தில் வீரமரணமடைந்த தீர மன்னரின் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று அவருடைய உடலைத் தேடியலைந்ததை எடுத்துக் கூறினார். கடைசியில் இவர் தம்முயற்சியில் வெற்றியடைந்ததையும், பார்த்திப மகாராஜாவின் உடலில் இன்னும் உயிர் இருந்ததையும், மகாராஜா சிவனடியாரிடம், "என் மகனை வீர சுதந்திரப் புருஷனாக வளர்க்க வேண்டும்" என்று வரங் கேட்டதையும்; சிவனடியார் அவ்விதமே வரங்கொடுத்ததையும் எடுத்துச் சொன்னபோது, அந்தப் பெரிய சபையின் நானா பக்கங்களிலும் 'ஆஹா'காரம் உண்டானதுடன், அநேகருடைய கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடிற்று.

பின்னர், சிவனடியார் உறையூருக்கு வந்து அருள்மொழித் தேவியைப் பார்த்துத் தேற்றியது முதல், விக்கிரமன் சுதந்திரக் கொடியை நாட்ட முயன்றது, தேசப் பிரஷ்டத் தண்டனைக்குள்ளானது, செண்பகத் தீவின் அரசனானது, தாயாரையும், தாய்நாட்டையும் பார்க்க வேண்டுமென்ற ஆசையினால் திரும்பி வந்தது, வழியில் அவனுக்கு ஏற்பட்ட இடையூறுகள் எல்லாவற்றையும் சிறுத் தொண்டர் விவரமாகக் கூறினார். இதற்கிடையில் நீலகேசி, 'மகா கபால பைரவர்' என்ற வேஷத்தில் செய்த சூழ்ச்சிகளையும், ராணி அருள்மொழித் தேவியை அவன் கொண்டு போய் மலைக் குகையில் வைத்திருந்ததையும், சிவனடியாரின் தளரா முயற்சியினால் அவனுடைய சூழ்ச்சிகள் வெளிப்பட்டதையும் சென்ற அமாவாசை இரவில் நடந்த சம்பவங்களையும் விக்கிரமன் தன் உயிரைப் பொருட்படுத்தாமல் சிவனடியாரைக் காப்பாற்ற முன்வந்ததையும் விவரித்தார். இவ்வளவையும் சொல்லிவிட்டுக் கடைசியாக, "சபையோர்களே, உங்களையெல்லாம் ஒன்று கேட்க விரும்புகிறேன். என் தோழர் சிவனடியார்

போர்க்களத்தில் பார்த்திப மகாராஜாவுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டதாக - நீங்கள் அபிப்பிராயப்படுகிறீர்களா? பார்த்திப மகாராஜாவின் குமாரர் விக்கிரமர் வீர சுதந்திரப் புருஷராக வளர்க்கப்பட்டிருக்கிறாரா?" என்று கேட்டார்.

அப்போது சபையில் ஏகமனதாக, "ஆம், ஆம்" என்ற மகத்தான பெருங்கோஷம் எழுந்து அந்த விசாலமான மண்டபம் முழுவதும் வியாபித்து, வெளியிலும் சென்று முழங்கியது.

கோஷம் அடங்கியதும், சிறுத்தொண்டர் கையமர்த்தி, "இன்னும் ஒரு முக்கிய விஷயம் உங்களுக்குச் சொல்ல மறந்து விட்டேன். போர்க்களத்தில் பார்த்திப மகாராஜாவுக்கு இந்த மகா புருஷர் வாக்குறுதி கொடுத்த பிறகு மகாராஜா இவரைப் பார்த்து, 'சுவாமி! தாங்கள் யார்?' என்று கேட்டார். அப்போது இந்த வேஷதாரி, தமது பொய் ஜடாமகுடத்தை எடுத்துவிட்டு உண்மை ரூபத்துடன் தோன்றினார். இவர் யார் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு பார்த்திப மகாராஜா தம் மனோரதம் நிறைவேறும் என்ற பூரண நம்பிக்கை பெற்று நிம்மதியாக வீர சொர்க்கம் அடைந்தார்!" என்று கூறியபோது சபையிலே ஏற்பட்ட பரபரப்பைச் சொல்லி முடியாது.

மீண்டும் சிறுத்தொண்டர், "இந்த வேஷதாரியின் உண்மை வடிவத்தைப் பார்க்க நீங்கள் எல்லாருமே ஆவலாயிருக்கிறீர்கள். இதோ பாருங்கள்!" என்று கூறி, சிவனடியார் பக்கம் திரும்பி, ஒரு நொடியில் அவருடைய ஜடாமகுடத்தையும் தாடி மீசையையும் தமது இரண்டு கையினாலும் நீக்கிவிடவே, மாமல்ல நரசிம்ம சக்கரவர்த்தியின் தேஜோமயமான கம்பீர முகத்தை எல்லாரும் கண்டார்கள்.

அப்போது அச்சபையில் மகத்தான அல்லோலகல்லோலம் ஏற்பட்டது. குந்தவி தன் ஆசனத்திலிருந்து எழுந்து, "அப்பா!" என்று கதறிக் கொண்டே ஓடிவந்து வேஷம் பாதி கலைந்து நின்ற சக்கரவர்த்தியின் தோள்களைக் கட்டிக் கொண்டாள். உணர்ச்சி மிகுதியினால் மூர்ச்சையாகி விழும் நிலைமையில் இருந்த அருள்மொழித் தேவியைச் சிறுத்தொண்டரின் பத்தினி தாங்கிக் கொண்டு ஆசுவாசம் செய்தாள். விக்கிரமன் கண்ணிமைக்காமல், திறந்த வாய் மூடாமல் உருவம் மாறிய சிவனடியாரைப் பார்த்த வண்ணம் நின்றான். அந்தப் பரபரப்பில் இன்னது செய்கிறோமென்று தெரியாமல் பொன்னன், வள்ளியின் கையைப் பிடித்துக் குலுக்கினான்.

"தர்ம ராஜாதி ராஜ மாமல்ல நரசிம்ம பல்லவ சக்கரவர்த்தி வாழ்க" என்று ஒரு பெரிய கோஷம் எழுந்தது. "ஜெய விஜயீ பவ!" என்று சபையினர் அனைவரும் ஒரே குரலில் முழங்கினார்கள். சிறிது நேரம் இத்தகைய கோஷங்கள் முழங்கிக் கொண்டிருந்த பிறகு பொன்னனுக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ, திடீரென்று உரத்த குரலில், "விக்கரம சோழ மகாராஜா வாழ்க!" என்று கோஷித்தான். அதையும் சபையோர் அங்கீகரித்து, "ஜய விஜயீ பவ!" என்று முழங்கினார்கள்.

அந்தக் குழப்பமும் கிளர்ச்சியும் அடங்கியபோது இத்தனை நேரமும் சிவனடியார் அமர்ந்திருந்த இடத்தில் அவர் இல்லை என்பதைச் சபையோர் கண்டார்கள். சிறுத்தொண்டர், "சபையோர்களே! நீங்கள் கலைந்து போவதற்கு முன்னால் இன்னும் ஒரே ஒரு காரியம் பாக்கியிருக்கிறது. மாமல்ல சக்கரவர்த்தி தர்ம சிம்மாசனத்தில் அமர்ந்து விக்கிரம சோழரின் குற்றத்தைப் பற்றி முடிவான தீர்ப்புக் கூறுவார்!" என்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் நரசிம்ம சக்கரவர்த்தி தமக்குரிய ஆடை ஆபரணங்களைத் தரித்தவராய்க் கம்பீரமாக அச்சபைக்குள் பிரவேசித்தார். அவர் சபைக்குள் பிரவேசித்த போதும், சபையில் நடுநாயகமாக இருந்த தர்ம சிம்மாசனத்தில் அமர்ந்த போதும், "ஜய விஜயீ பவ!" என்னும் முழக்கம் வானளாவ எழுந்தது. சத்தம் அடங்கியதும், சக்கரவர்த்தி எழுந்து, "விக்கிரம சோழரைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் இன்னதென்பதைத் தெரிந்து கொண்டேன். தேசப்பிரஷ்ட தண்டனைக்குள்ளானவர்கள் திரும்பி வந்தால், அதற்குத் தண்டனை சிரசாக்கினையாகும். எனவே, இதோ புராதனமான சோழ மன்னர்களின் மணிமகுடத்தை விக்கிரம சோழர் இனிமேல் தனியாகவே தலைமேல் தாங்க வேண்டுமென்னும் சிரசாக்கினையை விதிக்கிறேன்! இன்று



"நிர்வாகத் திறமை என்பது, துரிதமாக முடிவெடுத்து வேறு யாரையாவது வேலை செய்ய வைத்தல்."

— பொல்லாக்/கோபி. நாகராஜன்

முதல் சோழ நாடு சுதந்திர ராஜ்யமாகி விட்டது. இதன் பாரம் முழுவதையும் விக்கிரம சோழரும் அவருடைய சந்ததிகளும் தான் இனிமேல் தாங்கியாக வேண்டும்!" என்று கூறியபோது, சபையிலே உண்டான கோலாகல ஆரவாரத்தை வர்ணிப்பதற்கு, புராண இதிகாசங்களில் சொன்னது போல், ஆயிரம் நாவுள்ள ஆதிசேஷன்தான் வந்தாக வேண்டும்!

40. கனவு நிறைவேறியது

நல்ல சுபயோக, சுப லக்கினத்தில் விக்கிரமன் சோழ நாட்டின் சுதந்திர அரசனாக முடிசூட்டப்பட்டான். அவ்விதமே சுப முகூர்த்தத்தில் விக்கிரமனுக்கும் குந்தவிக்கும் திருமணம் விமரிசையாக நடந்தேறியது. திருமணத்துக்குப் பிறகு விக்கிரமன் நரசிம்ம பல்லவரிடம் சென்று அவருடைய ஆசியைக் கோரியபோது, சக்கரவர்த்தி, "குழந்தாய்! எக்காலத்திலும் 'பார்த்திப மகாராஜாவின் புதல்வன்' என்னும் பெருமைக்குப் பங்கமில்லாமல் நடந்து கொள்வாயாக. அதற்கு வேண்டிய மனோதிடத்தைப் பகவான் உனக்கு அருளட்டும்" என்று ஆசிர்வதித்தார். அவ்விதமே குந்தவி, அருள்மொழித் தேவியை நமஸ்கரித்த போது, "அம்மா! உனக்குச் சகல சௌபாக்கியங்களும் உண்டாகட்டும். 'நரசிம்ம சக்கரவர்த்தியின் திருமகள், பார்த்திப மகாராஜாவின் மருமகள்' என்னும் பெருமைக்கு உரியவளாக எப்போதும் நடந்து கொள்" என்று ஆசி கூறினாள்.

விக்கிரமனும், குந்தவியும் உறையூர் சிங்காதனத்தில் வீற்றிருந்தபோது, சோழவளநாடு எல்லாத் துறைகளிலும் செழித்தோங்கியது. மாதம் மும்மாரி பொழிந்து நிலங்கள் மூன்று போகம் விளைந்தன. கிராமந்தோறும் சிவாலயங்களும் விஷ்ணு ஆலயங்களும் நிர்மாணிக்கப்பட்டன. சிற்பம், சித்திரம் முதலிய கலைகள் சிறந்தோங்கின. திருமகளும் கலைமகளும் காவேரி நதிக்கரையில் கைகோத்துக் குலாவினார்கள்.

ஆனாலும், பார்த்திப மகாராஜாவின் கனவு விக்கிரமனுடைய காலத்தில் பூரணமாக நிறைவேறவில்லை. சூரியனுக்குப் பக்கத்தில் மற்றக் கிரகங்களெல்லாம் ஒளி மங்கி விடுவதுபோல் காஞ்சி நரசிம்ம பல்லவ சக்கரவர்த்தியின் மகிமையானது விக்கிரமனுடைய புகழ் ஓங்குவதற்குப் பெரிய தடையாயிருந்தது. பார்த்திப மகாராஜாவின் வீர மரணமும், விக்கிரமனுடைய வீரச்



செயல்களும் கூட மாமல்லரின் புகழ் மேலும் வளர்வதற்கே காரணமாயின.

நரசிம்ம வர்மருக்குப் பின்னரும் வெகு காலம் பல்லவர் பெருமை குன்றவில்லை. சோழநாடு ஒரு குறுகிய எல்லைக்குள் கட்டுப்பட்டுத்தான் கிடந்தது. ஆனால், விக்கிரமனும் அவனுடைய சந்ததியர்களும் பார்த்திப மகாராஜாவின் கனவை மட்டும் மறக்கவில்லை. வழிவழியாக அவரவர்களுடைய புதல்வர்களுக்குப் பார்த்திப மகாராஜாவின் வீர மரணத்தைப் பற்றிச் சொல்லி, உறையூர் சித்திர மண்டபத்தில் திட்டியிருந்த பார்த்திப மன்னரின் கனவுச் சித்திரங்களைக் காண்பித்து வந்தார்கள்.

சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னர் சோழ நாட்டின் வீரசிம்மாசனம் ஏறிய இராஜராஜ சோழன், அவனுடைய புதல்வனான இராஜேந்திர சோழன் - இவர்களுடைய காலத்திலேதான் பல்லவர் பெருமை குன்றிச் சோழ நாடு மகோன்னதமடையத் தொடங்கியது. சோழ நாட்டு வீரர்கள் வடக்கே கங்கை வரையிலும், தெற்கே இலங்கை வரையிலும், கிழக்கே கடல்களுக்கு அப்பாலுள்ள கடாரம் வரையிலும் சென்று வீரப்போர் புரிந்து புலிக்கொடியை வானளாவப் பறக்கவிட்டார்கள். புலிக்கொடி தாங்கிய கப்பல்களில் சோழநாட்டு வீரர்கள் கடல்களில் நெடுந்தூரம் பிரயாணம் செய்து சாவகம், புஷ்பகம் முதலிய தீவுகளைக் கைப்பற்றிச் சோழர்களின் ஆதிக்கத்துக்கு உட்படுத்தினார்கள். சோழவள நாடெங்கும் அற்புதமான கோயில்களும், கோபுரங்களும், சோழ மன்னர்களின் வீரப் புகழேபோல் வானளாவி எழுந்து, அக்காலத்திய சோழ சாம்ராஜ்யத்தின் மகோன்னதத்துக்கு அழியாத ஞாபகச் சின்னங்களாக இன்றைக்கும் விளங்குகின்றன. இவ்வாறு, பார்த்திப சோழன் கண்ட கனவு, அவன் வீர சொர்க்கம் அடைந்து முந்நூறு வருஷங்களுக்குப் பிறகு பரிபூரணமாக நிறைவேறியது.

(முற்றும்)

● BHEL நிறுவனக் குடியிருப்பில், ஒரு தனிநபர் வழிகாட்டி மையம் இயங்குகிறது.

பெற்றோர், குழந்தைகளிடம் நடந்து கொள்ள வேண்டிய முறைகளில் தொடங்கி, குழந்தைகளின் தனிப்பட்ட திறமைகளை அறிந்து, ஊக்குவிப்பதில் தொடர்ந்து, என்ன படிக்கலாம், எப்படி முன்னேறலாம் என்பது வரை சிறப்பாகச் சொல்லித் தரப்படுகிறது!

● – சில நாட்கள் தொடர்ந்து பட்டினி இருங்கள்.

– சில வினாடிகள் நெருப்பின் மேல் அசையாது விரலைக் காட்டுங்கள்.

– கொஞ்ச நாள் சாப்பாட்டில் சர்க்கரை + உப்பு சேர்க்காதீர்கள்.

– ஐஸ் மாதிரி குளிர்ந்த நீரில் தொடர்ந்து சில தினங்கள் குளித்து வாருங்கள்!

– குடி, புகை, பொடி எல்லாவற்றையும் பல்லைக் கடித்துக் கொண்டு நிறுத்தி விடுங்கள்.

– வாரத்தில் மூன்று நாட்கள் நீண்ட தூரம் மூச்சிறைக்க ஓடுங்கள்.

எதற்கு இதெல்லாம்? மனஉறுதியை அதிகமாக்கிக் கொள்ள இந்திரா காந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தின் MBA பாடநூல் தரும் ஐடியாக்கள் இவை.

– எஸ். எம். வி., திருச்சி - 14.

● எங்கள் ஊரில், அறிவழகன் என்பவரும் அவர் தந்தையும் சேர்ந்து ஒரு சலூன் நடத்தி வருகிறார்கள். அறிவழகனுக்கு நண்பர்கள் அதிகம். அடிக்கடி அவர்களுடன் வெளியே கிளம்பிவிடுவார். அவரைத் தேடி வருபவர்கள், அவர் தந்தையிடம், ''அறிவு இருக்குதா...?'' என்று கேட்பதும், அவர் சங்கடத்துடன் ''இல்லை'' என்பதும் தினசரி நடக்கிற காட்சி.

''தெரியாத்தனமா என் மகனுக்கு இப்படி ஒரு பேர் வெச்சிட்டு, தினம் வர்ற வங்ககிட்ட 'அறிவில்லை'ன்னு சொல்ல வேண்டி இருக்குது!'' என்று தமாஷாக வருத்தப்பட்டுக் கொள்வார் அவர் தந்தை!

● ''சான்றிதழ்கள் பெறுவதற்குப் பணம் கொடுத்து என் புனிதமான மருத்துவ சேவையை மாசுபடுத்தாதீர்!''

– இப்படி ஒரு வாசகம் எங்கள் ஊர் அரசு மருத்துவர் ஒருவர் அறைக்கு வெளியே இருந்தது. இந்தக் காலத்தில் இப்படி ஒரு டாக்டரா என்று வியந்து, அவரிடம் ஒரு attestation வாங்கப் போனேன்.


"க்யூவுல நின்னு பிச்சை போடணும்!"

''உனக்குக் கையெழுத்துப் போடுவதால் எனக்கு என்ன லாபம்?'' என்று கூசாமல் கேட்டாரே பார்க்கலாம்! பேசாமல் ரூ 10 கொடுத்து, கையெழுத்து வாங்கி வந்து விட்டேன்.

எதற்கு இந்த இரட்டை வேஷம்?

- சே. முருகன், பெட்டவாய்த்தலை.

விளம்பரங்களில்... சொல்லிய விஷயமும் சொல்லாத விவரமும்



● இந்த அரிய வாய்ப்பு ஜூலை 31 வரைதான்! (பின்பு மீண்டும் தள்ளிவைக்கப்படும்!)

● விழாக்கால சிறப்புத் தள்ளுபடி (வருடம் முழுக்க!)

● 50% சிறப்புத் தள்ளுபடி - சில குறிப்பிட்ட ரகங்களுக்கு (அவைதானே மட்டமானவை!)

● மிகக் குறைந்த விலையில் ஸ்டாக் கிளியரன்ஸ் (மீண்டும் ஸ்டாக் செய்யத்தான்!)

● டிபன் ரெடி (மூணு நாளாக)

● மாபெரும் விலைக் குறைப்பு (ஏற்றிய விலையில்)

● புத்தம்புது டிசைன்கள் (தியாகராஜ பாகவதர் காலத்தவை)

- எஸ்.எம்.வி., திருச்சி - 14.





"உன்னுடைய ஆசை என்னன்னு சொல்லுறியா?"

"பொது மக்கள் க்யூவுல நின்னு எனக்குப் பிச்சை போடணும். அந்தச் சமயத்துல கூட்ட நெரிசல் தாங்க முடியாம, போலீஸ் துப்பாக்கிச் சூடு நடத்தணும்!"

- எம். கதிஜாஹனிபா, திருச்சி - 6.

● ஸ்ரீரங்கம் வடக்கு சித்திரை வீதி கோபுர வாசலில். ஒரு வெளிநாட்டு டூரிஸ்டிடம் உள்ளூர்வாசி ஒருவர் பேசிக் கொண்டிருந்தார், 'பிரமாதமான' ஆங்கிலத்தில்.

உள்ளூர்வாசி : திஸ் இஸ் தாயார் கோவில்ஸ் என்ட்ரன்ஸ்.

டூரிஸ்ட் : ஹூ இஸ் தாயார்?

உ.வா. : லார்ட் ரங்கநாதாஸ் ஒய்ஃப். பட் ஷி நெவர் கோஸ் டு ஹர் ஹஸ் பெண்ட்ஸ் டெம்பிள். நெவர்... நெவர்"

புருஷன் வீட்டுக்கு மனைவி போகவே மாட்டார் என்று சொன்னதும் வெளிநாட்டினர் இயல்புப்படி அந்த டூரிஸ்ட், "டைவர்ஸியா?" என வியப்புடன் கேட்க, நம்மவர் புரியாமலோ அல்லது காதில் வாங்காமலோ -

"எஸ்! எக்ஸப்ட் ஒன் டே!" என்றாரே பார்க்கலாம்!

(வருடத்தில் ஒருநாள் மட்டும் தாயார் சன்னிதிக்குப் பெருமாள் வருவார்!)

— எஸ். பட்டம்மா, திருச்சி - 6.

● சென்னைவாசியான எனக்கு, டி.எம்.எஸ்., பி. சுசீலா பாடிய சோகப் பாடல்கள் மிக பிடிக்கும். அடிக்கடி டேப்பில் போட்டுக் கேட்பேன். ஆனால் என் கணவருக்கு டிரான்ஸ்பர் ஆகி, இங்கே - கருவைக்கு வந்த பின் அவற்றைக் கேட்க முடிவதில்லை. ஏனெனில் இங்கு சாவு வீடுகளில் மட்டும்தான் என் 'ஃபேவரிட்' பாடல்கள் ஒலிக்கும்! இறந்தவர் வீடுகளில் கண்டிப்பாக மைக் செட் வைத்து 'போனால் போகட்டும் போடா', 'சட்டி சுட்டதடா', 'வீடு வரை உறவு' பாடல்களை ஒலிபரப்புவார்கள்.

இந்நிலையில் நான் இவற்றை ஓய்வு வேளைகளில் போட்டுக் கேட்டால், ஊர் கூடி வரும் அபாயம் உள்ளது!

- டி. கலைவாணி, கரூர்.

● திருச்சியில் ஒரு பிச்சைக்காரர் நான்கு ஆட்டோக்கள் வைத்திருக்கிறார்! அது மட்டுமல்ல, தினக்கூலி, ரிக்ஷாக்காரர்களுக்கு வட்டிக்கும் பணம் தருகிறார்! இது கப்ஸா அல்ல! 100% உண்மை!

- மு. கருணாநிதி, தேவராயநேரி.

● தடுக்கி விழுந்தால் முட்டிபெயரும். பல் உடையும்! ஆனால் கரூரில் மட்டும் தடுக்கி விழுந்தால் ஃபைனான்ஸ் கடைகள் தட்டுப்படும்! இங்கு அதனாலேயே பணப்புழக்கம் அதிகம்! போர்வை, தலையணை உறை, கொசுவலை, பிரிண்டிங் துணிகள் என ஏற்றுமதி ரகங்கள் பல இங்கு உற்பத்தியாகின்றன. வீட்டில் இருந்தபடியே பெண்களும் இங்கே, நிறைய சம்பாதிக்கிறார்கள். (தையல், முடிச்சுகள் போடுதல் பிற பணிகள் மூலம்.)

- டி. கலைவாணி, கரூர்.

"அவர் பெரிய பேச்சாளராமே!"

"ஆமா! பறந்து வர்ற ஸ்டைலை வெச்சே 'பாட்டா' செருப்பா, சாதா செருப்பான்னு சொல்லிடுவாருன்னா பாத்துக்க!"

- பொன். குறியன், திருச்சி - 4.





அடக்கமாக அழகாக ஒரு ஃபிளாட் வேணுமே!
சொந்த வீடு வேணும்னு ஆசைதான். ஆனால், மொத்த பணமும் கொடுக்க முடியாதே...
எங்க குடும்பம் பெரிசு... கொஞ்சம் பெரிய ஃபிளாட்டா வேணுமே...?
ஃபிளாட்தான் என்றாலும் அழகாக இருக்க வேண்டாமா?
நேரத்தோட எந்த பில்டர்ஸ் முடித்துத் தராங்க.....?
தரமான கட்டமைப்புன்னு நம்பி வாங்க முடியுமா?

என்னுயிரும் நீயல்லவா

18

இதுவரை...

ஏலக்காய் எஸ்டேட் ஓனர் நாச்சியப்பச் செட்டியார், தமது இரண்டாவது மனைவி பகவதியிடம் எஸ்டேட் பொறுப்புகளை ஒப்படைத்து விட்டுக் கண் மூடுகிறார். 'செட்டியாருக்குப்பின் எஸ்டேட் யாருக்கு?' என்பது பற்றி, அவரது பங்காளிகளிடையே பேச்சு எழுகிறது. "யாரும் உரிமை கொண்டாடி வரவேண்டாம்" என்று அவர்களை அடக்கி, எஸ்டேட்டைப் பார்த்துக்கொள்ளும் பகவதிக்குத் துணையாகத் தம் மூத்த மகன் கதிரேசனை, மலைக்கு அனுப்புகிறார் செட்டியாரின் முதல் மனைவி, ஆச்சி.

மலைக்கு வந்து ஏலப்பயிர் பற்றியும் அதற்கு உள்ள 'டிமாண்ட்' பற்றியும் அறிந்து, எஸ்டேட்டை விரிவு படுத்த விரும்புகிறான் கதிரேசன்.

செட்டியாரின் இரண்டாவது மனைவி பகவதிக்குத் துணையாக வந்து சேரும் அவளது சொந்த ஊரைச் சேர்ந்த சொர்ணலஷ்மி, ஏலப்பயிரின் செழுமையும், அங்கே காணக் கிடைக்கிற வளமான வாழ்க்கையையும் கண்டு, தாமும் அதனை அடைய மாட்டோமா என்று ஏங்குகிறாள். கதிரேசனுக்கு மனைவியாகிவிட்டால், சொத்து நமக்கே வந்து விடும் என்று கணக்குப் போட்டு, அவனை வசீகரிக்கப் பலவாறு முயற்சி செய்கிறாள்.

இனி...

"அடடே! நீ உள்ள இருக்கிறதே மறந்து போச்சு! மடையன், நான் பாட்டுக்கு உன்னை உள்ள வைச்சு சாத்திட்டுப் போயிருக்கேன் பாரேன்."

விநாயகம் கதவைத் திறந்து விட்டு, திகைத்தவன் போல் பேசினான். ஏலக்காயை மீறி அவன் பேச்சில் பொய் நெடி அடித்தது.

"இந்தக் கதவு ஒரு மாதிரி நொடிப்புக் கதவு. கீல் சரியில்லையா, நிலைப்படி சரியில்லையா, தரை சரியில்லையா தெரியலை. கதவு மூடினா தானா திறந்துக்கும். அப்புறம் சூடு மொத்தமும் வெளியே போய், குளிரு மொத்தமும் உள்ளே புகுந்து காய் பழுத்து, விதை செவந்து ஏடாகூடமாயிடும். அதான், கையோட தாழ் போட்டுட்டு போயிடறேன். நீ இருக்கிறது மறந்தே போச்சு! டமடமன்னு கதவ இடிச்சிருக்கக் கூடாது... ஓடியாந்து இருப்பேனே" குரலில் போலித்தனம் தொற்றிற்று.

"எதுக்கு இடிக்கறது...?" ஒன்றுமே நடக்காதது போல் கதிரேசன் பேசினான். "நான் க்யூரிங் ரூமிற்கு வராதவனா, க்யூரிங் பத்தி தெரியாதவனா.. ஏலக்காய்க்கு மரியாதை வர்றதே இங்கதானே. உங்க மாதிரி மேஸ்திரிகளுடைய உழைப்பால்தானே! நீ கட்ட கூட போட்டுட்டா கருகிடும். கதவைத் திறந்து விட்டுட்டா அழுகிடும். செய்த பிறகு ஏன் இப்படி செய்தேன்னு கேக்கவா முடியும்?" கதிரேசன் மிக லேசாய்ப் பேச்சில் குத்தினான்.

"ஒரு நாள் தப்பு செஞ்சதில்லை தம்பி. இன்னி தேதிக்கு ஏலக்காய் தங்கம். பட்டணத்தில் நாலு காய் ஒரு ரூபாய். பாம்பேல இரண்டு காய் ஒரு ரூபா. க்யூரிங் பண்றவன் ஒரு கைப்பிடி காய் எடுத்து உள் டிராயரில் போட்டுக்கிட்டான்னா யாருக்கும் தெரியாது. ஒரு கைப்பிடியில அறுபது காய் நிக்குது. பதினைந்து ரூபாய். இடது பக்கம் பாக்கட்டில் ஒரு கை வலது பக்கம் பாக்கட்டில் ஒரு கை. முப்பது ரூபாய் ஒரு நாளைக்கு தேத்திட முடியாது...? ஆனால் இந்த விநாயகம் செய்ய மாட்டான். இது வரைக்கும் செய்ததில்லே. காரணம் நன்றி விசுவாசம். உங்கப்பா இந்த விநாயகத்தை வேலைக்காரனாவே நடத்தலை, வீட்டுல ஒரு ஆளா மதிச்சாரு. நான் கூலிக்காரன் இல்லை. வேலை தெரிஞ்ச வேலைக்காரன்! அந்த மரியாதை உங்கிட்டயும் எதிர்பார்க்கறேன் தம்பி! வயசுல பெரியவன் என்பதற்காக இல்லை... இந்த மலைதான் எனக்கு வாழ்க்கை. இந்த எஸ்டேட்தான் எனக்கு வீடு. பலபேர் என் வேலை தெரிஞ்சு, பல விதமா ஆசை காட்டினாங்க. நான் செட்டியாரே கதின்னு இருந்திட்டேனே தவிர, வேற பக்கம் தலை வைச்சுக் கூடப் படுக்கலை. அப்படி ஆசைப்பட்டுப் போயிருந்தா, இந்நேரம் நாலு ஏக்கர் நிலமாவது வாங்கியிருக்கலாம். எனக்கு விசுவாசம் தான் முக்கியம்!"

அர்த்தமில்லாத பேச்சுக்கள் அலட்டலாய் வந்து விழுந்து கொண்டிருந்தன

பாலகுமாரன்

எத்தனை சம்பாதித்தாலும் எத்தனை புகழ் கிடைத்தாலும் சில பேருக்கு வாழ்க்கையில் நெல் முனையளவும் திருப்தி இல்லாமல் போகிறது. இப்படிப் பட்டவர்கள் பாராட்டினால் திருப்தி அடைந்து விடமாட்டார்கள். பாராட்டினால் எனக்கு என்ன தெரியும் என்று போலியாய்ப் பணிவார்கள். பாராட்டாவிட்டால் 'என்னத்த கொடுத்திட்ட' என்று இகழ்வார்கள். யாரையேனும், ஏதேனும் சொல்லிக் கொண்டே இருக்க வேணும்.

"நீங்க எனக்கு குரு மாதிரி!"

கதிரேசன் சட்டென்று விநாயகத்தின் கால் தொட்டான். விநாயகம் இவ்வளவு விரைவான அன்பை எதிர்பார்க்கவில்லை

"நான் தோட்டம் பெரிக பண்ணப் போறேன் விநாயகம். ஏலக்காய் எஸ்டேட்டை விரிவு படுத்தப் போறேன். உங்கிட்ட கொஞ்சம் காசு வாங்கி மிச்சத்தை நான் போட்டு உங்களையும் ஒரு பார்ட்னரா சேர்த்துக்கப் போறேன். மாசாமாசம் காசு புடிக்கப் போறேன். டக்குனு காசுபுடிச்சா தாங்குவிங்களா.... இப்ப இருக்கிற வாரக் கூலியை மாச சம்பளமாக்கி, மேற்கொண்டு ஐந்நூறு ரூபாய் கூலி உயர்த்தப் போறேன். அந்த ஐந்நூறை மாதாந்திர சேமிப்பா வைச்சு வட்டி போட்டு, மூலதனமா மாத்தப் போறேன். மேஸ்திரிக்கு இத்தனை சம்பளமா என்று கேள்வி வரும். மானேஜர் என்று போட்டுட்டா?"

விநாயகம் திகைத்துப் போனான்.

"எனக்கு நீங்க ஒரு உதவி செய்யணும். பக்கத்து எஸ்டேட் வாங்கறதுக்கு, விவரம் சொல்லணும். ஓனரைப் பார்த்துட்டு வந்து யூனியன் ஆளுங்களோட பேசிட்டு வந்திடுங்க. ரெஜிஸ்டர் ஆபீஸ் ஆளுங்களை எனக்கு அடையாளம் காட்டணும். நிலம் கைமாறணும். உங்களுக்கு ஒரு கமிஷன் தரேன். அதையும் மூலதனமா போட்டுக்கலாம். யாருது அந்த எஸ்டேட், எங்கே இருக்காங்க அந்த ஓனர். விசாரிச்சு சொல்றீங்களா?"

விநாயகம் மெல்ல சுதாரித்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தான். 'ரெண்டு நாள் டைம் கொடுங்க தம்பி' பின்வாங்கினான்.

"வெப்பம் ரொம்ப தாக்கியிருக்கும். மோர் குடிங்க முதலாளி, பார்லி கஞ்சி குடிங்க."

"கதவு நொடிக்குதுன்னு சொன்னிங்கல்ல? அதுக்கு வேற ஒரு வழிபண்றேன் பாருங்க."

தானாய் கதவு மூடும் ஹைட்ராலிக் கருவி பொருத்த வேண்டும் என்று திட்டமிட்டான்.

சொர்ணலஷ்மி எதேச்சையாக வந்து கதவு திறக்காவிட்டால் மூச்சு திணறியிருக்கும். வெளியே வந்து காற்று வாங்கி மறுபடி கதவை மூடிக் கொண்டது கம்பீரமாய்ப் போய் விட்டது. அப்படி கதவை மூடியதை சொர்ணலஷ்மி ரகசியமாய் வைத்துக் கொண்டதும் அமைப்பாய் நடந்து விட்டது. சொர்ணலஷ்மி ஒரு தேவதை போல் வந்து காப்பாற்றினாள். விநாயகத்தைப் பேச்சால் அதிரச் செய்த தந்திரம் தான் அவனுக்கே



ஆச்சரியமாய் இருந்தது. சரமாரியாய் எப்படித் தன்னால் பொய் சொல்ல முடிந்தது என்று வியப்பு வந்தது. நீயும் பங்கு போடுன்ன உடனே பையன் அதிர்ந்து போய்ட்டான். காக கூட தரேன்ன உடனே முதலாளின்னுட்டான்.

கொடுக்கணும்னு அவசியமா? சொன்னதெல்லாம் சத்திய வாக்கா? எத்தினி ஏமாத்தி இருப்பான் இந்த வினாயகம்! இடது கை ஒரு பிடி, வலது கை ஒரு பிடின்னு மத்தவங்கள்லாம் ஏலக்காய் திருடுவாங்களாம்! இவரு சத்திய சந்தனாம். அந்த எஸ்டேட் வாங்கின பிறகு வைக்கிறேன். தூக்கி அடிக்கிறேன். இந்த மாதிரி ஆளுங்களை திருட வைச்சு மாட்டணும். மனம் கருவிற்று. புத்தி வேகமாய்ச் செயல் பட்டது. அடுத்த எஸ்டேட்டை வேலி ஓரம் நின்று பார்த்தபோது சொர்ணலஷ்மி காபியோடு வருவது தெரிந்தது.

இப்போதைக்கு மதுரைக்குப் போக முடியாது. காலேஜ் நண்பர்கள் கூட்டமோ காபி கிளப் நண்பர்களோ, மீனாட்சி அம்மன் கோவிலோ, திருவிழாவோ, சினிமாவோ நாடகமோ போக முடியாது.

மலையில் வேலைதான் பொழுது போக்கு. அப்படி வேலை இல்லையெனில் பொழுது போவது மிகவும் கடினம். பெண்டாட்டி பிள்ளைகள் இருந்து விட்டால் ஒரு மாதிரி பொழுது போய்விடும். பேசினால் சின்னம்மாவோடுதான் பேசவேண்டும். சின்னம்மா சொந்தக் கதைதான் பேசுவார்கள். சொந்தக் கதையின் எல்லாப் பகுதியும் கேட்க முடியாது. இப்போதைக்கு ஏதாவது பேச வேண்டும் என்றால் இந்தப் பெண்தான். யப்பா... சரிவில் இறங்கி வரும்போதே எத்தனை குலுக்கல்... கன்னம், மூக்கு, முகவாயில் கூட ஒரு செழுமையுள்ளது. கதவு திறந்ததுக்கு நன்றி சொல்ல வேண்டும் வார்த்தையாய் இப்போது சொல்லலாம் பிறகு கீழே தரைக்குப் போகும் போது ஏதேனும் வாங்கியும் வரலாம். என்ன வாங்கி வரலாம்? அதிக விலை இருக்கக் கூடாது. அல்பமாகவும் இருக்கக் கூடாது. ஒரு ஆயிரம் ரூபாய்க்குச் செய்யலாமா? வேண்டாம்! ஐந்நூறுக்குச் செய்யலாம். ஒரு பட்டை வெள்ளிக் கொலுசு வாங்கிப் போடலாம். யோசிக்கும் போதே சிரிப்பு வந்தது. ஆனால் கதிரேசன் சிரிக்கவில்லை. வாழ்க்கையைத் தந்திரமாய் உணர்ந்தவர்கள் வெள்ளை



யாய்ச் சிரிக்க மாட்டார்கள்.

"காபி!"

சொர்ணலஷ்மி தம்ளரை நீட்டினாள். கதிரேசன் திடுக்கிட்டவன் போல் நடித்து, அதை வாங்கிக் கொண்டான். அவள், இருப்பை முக்கியமாக்காமல் காபியை உறிஞ்சிக் குடித்தான். சொர்ணலஷ்மி அவன் பேசுவான் என்று எதிர்பார்த்தாள். பேசாமல் காபி குடிக்கவும், பொறுமை இழந்தாள்.

"ரொம்ப யோசனைல இருக்கீங்களா?"

"ஆமாம்!"

"என்னா யோசனை?"

"அந்த எஸ்டேட் வாங்கணும்!"

அந்தப் பக்கம் செடியெல்லாம் வாடினாப் போல இருக்கு."

"சரியாய் கவனிக்கலை."

"ஏன்?"

"அக்கறையில்லை!"

"எஸ்டேட் வாங்கிப் போட்டுட்டு ஏன் அக்கறையில்லாம இருக்காங்க?"

"காசு கொழுப்பு! மிதமிஞ்சின பணம். கம்மா ஒரு கம்பீரத்துக்கு வாங்கிப் போட்டுட்டு எங்கியோ உட்கார்ந்திருக்கான்!"

"நம்ம எஸ்டேட் இவ்வளவு நல்லா இருக்கே... யார் காரணம்?"

"சின்னம்மா! சின்னம்மா இல்லைன்னா இந்த எஸ்டேட் சீரழிஞ்சுருக்கும்!"

"நான் அவங்களுக்குத்தான் இந்த எஸ்டேட்னு நினைச்சேன். அப்புறமாத்தான் சொன்னாங்க அது உங்களுதுன்னு."

"அம்மா வேற, புள்ளை வேறயா? சொத்து என்னுதுன்னா லாபம் அவங்களது."

"ரெண்டாந்தாரமாயிருந்தும் உங்க வீட்டோட ஒட்டுனது ரொம்ப ஆச்சரியம்!"

"சின்னம்மா குணத்துக்கு யாரும் பிரியமாத்தான் இருப்பாங்க!"

"உங்கம்மாவும் ரொம்ப நல்லவங்களாத்தான் இருக்கணும்! அவங்க மனசு வைக்காத, பகவதியக்கா நல்லா இருந்திருக்க முடியாது."

"எங்கம்மாவும் நல்லவங்கதான்!"

"அது உங்களைப் பார்த்தாலே தெரியுது."

"எப்படி தெரியுது?"

"மிருதுவா பேசறீங்க, எப்பவும் யோசிச்சிட்டு இருக்கிங்க! பக்கத்துல ஆளு இருந்தாலும் எங்கயோ பார்த்துப் பேசறீங்க! ஒரு அசப்புல பார்க்க, உசரமா, நடிகர் சரத்பாபு போல இருக்கிங்க!"

அவள் வேண்டுமென்றே திக்கித் திணறிப் பேசினாள். கெட்டிக்காரப் பெண்களின் முதல் அம்பு கொஞ்சம் மழலை கலந்து திக்கி திணறிப் பேசுவது. தன் உருவம் பற்றி அலட்டல் உள்ள ஆளிடம் அதைப் பற்றிய பாராட்டு சீக்கிரமே செல்லுபடியாகி விடும்.

நடிகரோடு தன்னை ஒப்பிட்டுப் பேசியது கதிரேசனுக்குப் பிடித்திருந்தது. சொர்ணலஷ்மிக்குப் பட்டைக் கொலுசு வாங்கி வர வேண்டும் என்ற எண்ணம் வந்தது. அப்போதே கொலுசு வாங்கி, அப்போதே போட்டுவிட வேண்டும் என்று பரபரத்தது.

தன்னைப் பாராட்டிய பெண்ணைக் கதிரேசன் கூர்ந்து கவனித்தான். கூர்ந்து கவனிக்கின்ற ஆளைக்கண்டு சொர்ணலஷ்மி வெட்கப்பட்டாள்.

"நீயும்தான் அழகாயிருக்கே!"

அவள் கையைப் பின்னி உடம்பைக் குறுக்கிக் கொண்டாள். அந்தச் செய்கையில் நெஞ்சு விம்மிற்று.

வெட்கப்பட்டு டம்ளருக்குக் கை நீட்டினாள். அவன் வேண்டுமென்றே தொட்டுக் கொடுத்தான். அவள் வாங்கிக் கொண்டு இடுப்பு குழைய நடந்து போனாள். கூரிங் அறையைவிட அதிகமான வெப்பம் அவன் உடம்புக்குள் ஏற்பட்டது.

(தொடரும்)

அதிக வட்டி, அசையா சொத்துக்களில் முதலீடு, அசைக்க முடியாத நம்பிக்கைக்கு ஜோதியில் முதலீடு செய்யுங்கள்

JOTHI PROPERTY FINANCE & INVESTMENTS

ஜோதி

குரூப் ஆப் கம்பெனிஸ்

ஜோதி ப்ராப்பர்டி பைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் கம்பெனி

ஜோதி வழங்கும்

30% Per Annum

ஜோதி டெபாசிட்ஸ் திட்டம்

- குறைந்தபட்சம் முதலீடு ரூ. 5,000/- அதற்குமேல்.
- வட்டி : மாதம்/கால் ஆண்டு/ அரை ஆண்டு

ஜோதி பாண்ட் திட்டம்

முதிர்வு தொகைகள்

தொகை	1 வருடம்	2 வருடம்	3 வருடம்	4 வருடம்	5 வருடம்
10,000	12,650	16,000	20,000	25,650	32,500
15,000	18,975	24,000	30,000	38,475	48,750
20,000	25,300	32,000	40,000	51,300	65,000

- பென்சன்தாரர்கள், விதவைகள் மற்றும் ஊனமுற்றோர்க்கு 1% ஊக்கத் தொகை.
- வட்டிக்கும் அதன் தொகைக்கும் பின் தேதியிட்ட காசோலைகள்/ வாரண்ட்டுகள் முன்கூட்டியே கொடுக்கப்படும்.

JOTHI PROPERTY FINANCE & INVESTMENTS COMPANY

எண் 19, துரைசாமி சாலை, தி. நகர்,
சென்னை - 600 017. ✆ : 828 2353.



* ஏ.கே. ஆண்டனி

"எதிர்க் கட்சி என்றால் எதிரிக் கட்சி அல்ல!"

கேரள முதல்வர் பேட்டி

கேரள முதல்வர் ஏ.கே. ஆண்டனியின் குழந்தைகள், ஸ்கூல் வேனில்தான் தினமும் பள்ளிக்குப் போகிறார்கள். ஆண்டனியும் பயணம் போகும் போது ரயிலிலேயே போகிறார். உடன் ஒரு பி.ஏ.வை மட்டும் அழைத்துச் செல்கிறார். தினமும் காலை எட்டரைக்கே அலுவலகம் வந்து, அன்றைய கோப்புகளை அன்றே பார்த்து, முடிவெடுத்த பிறகுதான் புறப்படுகிறார். இவ்வளவு 'பிஸி'யாக இருந்தாலும் கல்கிக்குப் பிரத்யேக பேட்டிக்கென பத்து நிமிடங்கள் ஒதுக்கினார். நாம் சென்றதுமே "கல்கி! வாருங்கள் வாருங்கள்" என்று வரவேற்றார்.

"பல ஆண்டுகளாகவே 'கல்கி'யைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கேன். இம்முறை முதல்வராய் அமர்ந்த பின் தமிழ் இதழில் 'கல்கி'க்குத்தான் முதல் பேட்டி அமைகிறது..." என்றவாறே பேட்டிக்குத் தயாரானார். நம் கேள்விகளை மலையாளத்தில் முன் வைத்தோம். தமிழ்ப் பத்திரிகை என்பதால் எளிமையான மலையாள வார்த்தைகளையே உபயோகப்படுத்தினார்.

● **ஆளும் கட்சியான இ.காங்கிரசிலிருக்கும் மற்ற அணியினர் உங்கள் ஆட்சிக்கு ஏதேனும் இடைஞ்சல் செய்வதாகக் கருதுகிறீர்களா....?**

மற்ற அணியினர் என்று நீங்கள் யூகிக்கும் எந்த நபரும் இந்த ஆட்சிக்கு இடைஞ்சல் செய்யவில்லை. இந்த ஆட்சியின் மந்திரி சபையில் எல்லா தரப்பினருக்கும் பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எல்லா மக்கள் நலப் பிரச்னைகளிலும் அவர்களையும் கலந்தாலோசித்தே செயல்படுகிறேன்.

● **புதிய மந்திரி சபையிலுள்ளவர்கள் நேர்மையானவர்கள் என்பதால் தேர்வு செய்யப்பட்டுள்ளனரா...? இல்லை, கட்சியின் நன்மை கருதி, பலதரப்பட்டவர்க்கும் வாய்ப்பு தரப்பட்டுள்ளதா?**

கட்சியின் நன்மை கருதி, நேர்மையாக உள்ள பல தரப்பட்டவர் மந்திரி சபையில் இடம் பெற்றுள்ளனர். யாருக்கும் நான் வாய்ப்பு கொடுக்கும் வண்ணம் தன்னிச்சையாய்ச் செயல்படவில்லை. பலரையும் கலந்தாலோசித்தே நியமனங்கள் செய்தேன்.

● **அர்ஜுன் சிங்கிற்காகத் தாங்கள் குரலெழுப்பியதைத் தொடர்ந்து நரசிம்ம ராவுடன் தங்களின் உறவு எப்படி இருந்து வருகிறது?**

எப்பொழுதும் போல் சுமுகமாகவே இருந்து வருகிறது. அர்ஜுன் சிங்கிற்காக நான் குரலெழுப்பியது தனியாய் ஒரு அணி என்ற ரீதியில் அல்ல. இன்னமும் காங்கிரஸ் தேசிய அளவில் ஒன்றுபட்டு மாபெரும் சக்தியாக உருவெடுக்க வேண்டுமென்பதே எனது விருப்பம். 1969க்குப் பிறகு பிளவு



"எதுக்குங்க இப்படி கண்ணீர் விட்டு அழறீங்க?"

"நான் கடை ஆரம்பிச்ச நாற்பது வருஷத்தில் முதல் முதலா ரெண்டே நிமிஷத்தில் சேலை செலக்ஷன் செய்த பெண்மணி நீங்க தானம்மா! அதைப் பார்த்ததும் ஆனந்தக் கண்ணீர் வந்துருச்சம்மா!"

— எஸ். அனந்தகுமார்

பட்ட நேரத்தில் காங்கிரசை விட்டுப் பிரிந்து போனவர்கள் மீண்டும் இணைந்து செயல்பட வேண்டும். அது நரசிம்மராவின் தலைமையின் கீழாய் இருக்க வேண்டும். இன்னமும் காங்கிரஸ் மீது மதிப்பு கொண்டு மக்கள் அதை உற்று நோக்குகிறார்கள். அதனாலேயே காங்கிரஸ் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியுள்ளது.

● **ஆட்சிக்கு வந்ததிலிருந்து தங்களுக்குச் சவாலாய் அமையும் பிரச்னை?**

சவால் என்று சொல்ல முடியாவிட்டாலும் பிரச்னைகள் உண்டு! தீர்வு காண்பதற்கான பல முயற்சிகளையும் இந்த அரசு செய்து வருகிறது. நான் முதல் மந்திரியாகப் பொறுப்பேற்ற நூறு நாட்களில் பல திருப்திகரமான சீர்திருத்தங்களைச் செய்ய முடிந்தது. பல துறைகளில் அரசின் தேவையற்ற தலையீடுகளை நிறுத்த முடிந்தது. முக்கியமாக காவல்துறை, பொதுப்பணித் துறை போன்ற அமைப்புகளில்.

● **எதிர்க்கட்சிகள் தங்களுடைய ஆட்சிக்கு நிரந்தர இடையூறு தருவதாகக் கருதுகிறீர்களா?**

என்னைப் பொறுத்தமட்டில் எதிர்க்கட்சிகள் கூறுவதையெல்லாம் கண் மூடித்தனமாக எதிர்ப்பதோ, ஆதரிப்பதோ இல்லை. அவர்கள் எழுப்பும் பிரச்னைகளில் உண்மை நிலை உணர்ந்து என் முடிவுகளை எடுக்கின்றேன். சில பொதுவான பிரச்னைகளில் அவர்களது கருத்துக்களையும் ஒத்துழைப்பையும் ஏற்று செயல்படுகிறேன். எதிர்க்கட்சி என்றாலே 'நித்திய சத்ருக்கள்' அல்லவே...? அண்மையில் விழிஞ்ஞம் துறைமுகத்தில் ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து, துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்தது. இந்தப் பிரச்னையில் எதிர்க்கட்சி தலைவர்களான அச்சுதானந்தன் போன்றவர்களின் கருத்துக்களையும் ஏற்றே செயல்பட்டேன்.

● **கேரளாவில் மதக்கலவரம் பரவும் அபாயம் உள்ளதா?**

கேரள மக்கள் பொதுவாய் அமைதியை விரும்புபவர்கள். மேலும் மத ஒற்றுமையை கடைப்பிடிப்பவர்களும் கூட. ஒரு சில இடங்களில் சிறு சிறு கலவரங்கள் நேரிடினும் அவையும் அமைதியான முறையில் தீர்க்கப்பட்டு விடுகிறது.

● **தமிழ்நாட்டில் ஆட்சி செய்யும் ஜெயலலிதா அவர்களைக் குறித்து?**

தனி நபர் கருத்து என்னால் கூறுவதற்கில்லை. மற்றபடி இரு அரசுகளுக்கும் இடையிலுள்ள உறவுகள் நல்லபடியாய் இயங்கி வருகின்றன.

● **மலையாள மண்ணில் வாழும் தமிழர்கள் பற்றி...**

இரு இன மக்களாய் அல்லாமல் ஒரு தாய் பெற்ற மக்களாய்த்தான் கேரளாவில் தமிழர்கள் இருந்து வருகிறார்கள். பொதுவாக தமிழ் மக்களைப் பற்றிக் கூறும் போது சிறந்த உழைப்பாளிகள், அழகுணர்வும் கலையுணர்வும் கொண்டு திகழ்பவர்கள். பழகுவதற்கு இனியவர்கள். சற்று உணர்ச்சி வசப்படுபவர்கள் என்பதல்லாமல் மற்றபடி பாராட்டிற்குரியவர்கள்தாம்.

● **தமிழக கவர்னர் சென்னரெட்டி, தமிழக முதல்வர் மீது வழக்கு தொடர சுப்பிரமண்ய சுவாமிக்கு அனுமதியளித்தது குறித்து ஒரு முதல்வர் என்ற ரீதியில் உங்கள் கருத்து....**

இது அந்த மாநிலத்தைச் சார்ந்த உள் பிரச்னை. இதில் நான் தனிப்பட்ட முறையில் கருத்துக்கள் ஏதும் சொல்வதற்கில்லை.

● **அரசியல் என்றாலே ஆடம்பரம் எனும் ரீதி எல்லா மாநிலத்திற்கும் பொதுவானதாய் இருக்கையில் உங்களால் எப்படி அரசியலில் எளிமையைப் பின்பற்ற முடிகிறது?**

நான் இளம் வயதிலேயே தந்தையை இழந்தவன். தாயின் பராமரிப்பில் மிகவும் ஏழ்மையோடு வளர்ந்தவன். அதனால் குடும்ப வாழ்விலும் சரி, அரசியல் வாழ்விலும் சரி.... ஆடம்பரம் கடைப்பிடிக்க என்னால் முடியாது. பலருக்கு இது ஏதோ அபூர்வமாய்த் தோன்றினாலும் எனக்கு அது பெரிய விஷயமாகத் தோன்றவில்லை.

பேட்டி : **ந. சுந்தர்**

தங்கள் மகளின் மணவாழ்வு இன்பமாக அமைய!



CITY FINANCE(REGD)

293,Royapettah High Road, Royapettah,
Madras-14, Ph:8267537

7 ஆண்டுகள் ஆழ வேரூன்றிய நம்பிக்கை நிதி நிறுவனம் வழங்கும்

பூர்ண கும்பம்

'பூர்ண கும்பம் பிக்சட் டெபாசிட்' திட்டத்தில் உங்கள் முதலீடு ரூ. 1000 X 4 மட்டும். இத்தொகையை ஆண்டுக்கு ரூ. 1000 வீதம் 4 ஆண்டுகளில் செலுத்தினால் போதும்.

இத்திட்டம் தொடங்கிய நான்காவது ஆண்டிலிருந்து 22 ஆண்டுகளுக்கு ஆண்டு தோறும் ரூ. 1000 மட்டும் வட்டித் தொகையாக வழங்குகிறோம்.

இத்திட்டம் 22 ஆண்டு இறுதியில் முதிர்வுறும் பொழுது

ரூ. 1 லட்சம்

முதிர்வுத் தொகையை பூர்ண கும்பத்துடன் உங்களுக்கு சமர்ப்பிக்கிறோம்.

சிட்டி ஃபைனான்ஸில் முதலீடு செய்து முன்னேறுங்கள்.

53

PEOPLE SELDOM RECOGNISE OPPORTUNITY; BECAUSE IT COMES DISGUISED AS HARD WORK.

மைக்கேல் யாசின் என்று எனக்கொரு சிங்கப்பூர் நண்பர். இன்னும் திருமணமாகாத இளைஞர். எனக்கும் அவருக்கும் இரண்டு தலைமுறை இடைவெளி. ஆனாலும் எனது ஆப்த நண்பர்களில் அவரும் ஒருவர்.

Count your age by friends, and not years.

அப்படிப் பார்த்தால் என் வயது ரொம்பவும் கம்மி. எனக்கு மிகவும் நெருக்கமானவர்கள் குறைந்தது ஒரு தலைமுறை இடைவெளிக்குப் பின்னால் தோன்றியவர்கள்.

ஆமாம்! மைக்கேல் யாசினும் வைரமுத்துவும் பாரதிராஜாவும் நடிகர் கிருஷ்ணனும் 45 வயதிற்குட்பட்டவர்கள். அப்பொழுது நானும் 45 வயதைத் தாண்டாதவன்தானே!

சுருக்கங்கள் என் முகத்தில் மட்டுமே தவிர, இதயத்தில் இல்லை!

மைக்கேல் யாசின், சின்ன வயதில் தந்தையிடம் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி கடல் கடந்து பிழைப்பைத் தேடிச் சென்று, உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, நாணயம், நேர்மை, ஈடுபாடு, credibility இவைகளை மட்டுமே முதலாகக் கொண்டு உழைத்து முன்னுக்கு வந்தவர்.

இன்று அவர் ஒரு கோடீஸ்வரர்.

எனது 'புன்னகை' திரைப்படம் ஏற்படுத்திய பாதிப்பினால்தான் தன்னால் இந்தச் சாதனைகளைப் புரிய முடிந்தது என்று அவர் கூறியதாகப் பலர் என்னிடம் வந்து சொல்லியிருக்கிறார்கள்.

He is a standing example of what good films can do.

கே. பாலசந்தர்

நான் ஒரு இலக்கியவாதியில்லை; சுருங்கச் சொல்லி விளங்கவைப்பவன்தான் நல்ல எழுத்தாளன்.

A good writer is the one who gives you most knowledge by taking the least time. — C. C. Colton.

ஆனால் எனக்கோ, என் நினைவுகளை விளக்கிச் சொல்ல 52 வாரங்கள் தேவைப்பட்டிருக்கிறது!

தான் செய்யும் தொழிலை எவனொருவன் தனது பிழைப்புக்கான வழிமுறையாக மட்டும் இல்லாமல் தனது வாழ்க்கை முறையாக்கிக் கொள்கிறானோ அவன் சிறப்பானவன். இதுவேதான் எனது கொள்கையாகவும் இருந்திருக்கிறது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

31 ஆண்டுகால கலைத்துறைப் பணி என்னைக் களைப்படையச் செய்யவில்லை.

ஆம்! ஒரு வேலையும் செய்யாமலிருப்பவன்தான் அதிகமாகக் களைத்துப் போகிறான்.

தோட்டியிலிருந்து தொண்டமான் வரை, செருப்புத்தைக்கும் தொழிலாளியிலிருந்து திரைப்படத் தயாரிப்பாளன் வரை எல்லோருக்குமே ஒரு சமூகப் பார்வை இருக்க வேண்டுமென்று நினைப்பவன் நான்.

ஆகவேதான், கடமையே கண்ணாக இருப்பதும்



devotion to duty என்பதும் நாம் செய்கின்ற தியாகங்கள் இல்லை; நமது வாழ்க்கையை மெய்ப்பிக்கின்ற செயல்கள்!

They justify our existence.

It is good to learn history;
But it is better you make it.

என்று பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்கள் சொன்னார்கள்.

தமிழ்த்திரை வரலாற்றின் ஒரு வரியிலாவது எனது பெயர் இடம்பெறுமேயானால் எனது கடமையைச் செய்துவிட்ட அல்லது இன்னமும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிற மனநிறைவைப் பெறுவேன்.

திரைத்துறையில் 31 ஆண்டு காலமும் நாடகத் துறையில் 15 ஆண்டு காலமும் ஒவ்வொரு நாளும் எனக்கு ஒவ்வொரு அனுபவம்தான்! ஒவ்வொரு படமும் எனக்குப் பாடம்தான்! ஒவ்வொரு சின்னத் தவறும் எனக்கு அறிவுரைதான்! நான் செய்தவை மட்டுமல்ல; மற்றவர்கள் செய்த தவறுகளும் எனக்கு அறிவுரைகளாக அமைந்திருக்கின்றன.

ஒவ்வொரு நாளும் நான் கற்றுக் கொண்டேதான் இருந்திருக்கிறேன்....

கடந்த 52 வாரங்களாக நான் கல்கியில் எழுதி வந்த கருத்துக்கள், சிந்தனைகள், அனுபவங்கள் அனைத்தும் திரைத் துறையைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமே தொடர்புடையதாகவோ அல்லது பயன்படத்தக்கதாகவோ இருக்க வேண்டுமென்கிற அவசியம் இல்லை. எல்லோருக்குமே அவை பொருந்தியதாகவும் இருக்கலாம்!

இந்த 52 வாரங்களில் சொல்வதற்கு விட்டுப் போன சுவையான நினைவுகள் எண்ணிலடங்காது.

உதாரணமாகச் சில :

- திருவல்லிக்கேணி தோப்புத் தெருவிலிருந்த ராஜா (நடிகர் ஸ்ரீகாந்த்) அறையில் உட்கார்ந்து கொண்டு நாடகங்கள் எழுதிய இனிய நினைவுகள்...
- P.M.G.'s office நாயர் ராமன், ஹரி கிருஷ்ணன், இராமையா, கோவிந்தராஜன் போன்ற நண்பர்களுடன் கூடிக் குலவிய அந்த நாடக ஒத்திகை நாட்கள்...
- பம்பாய் ஷண்முகானந்தா சபாவில் எங்கள் நாடகக் குழு நாடகங்கள் போட்டதும் எங்களுக்குக் கிடைத்த அமோகமான வரவேற்பும் பாராட்டுக்களும்....
- மேஜர் சுந்தர்ராஜனுடன் தினம் தினம் நடக்கும் சூடான வாதப் பிரதிவாதங்கள்...
- எனது ஆரம்ப காலத் தயாரிப்பாளர், என் உடன் பிறவாச் சகோதரர் அரங்கண்ணல் அவர்களுடன் சேர்ந்து பணியாற்றிய அந்த இனிய நாட்கள்...
- என் திரையுலகத் திருப்புமுனையில் ஆணிவேர்களாக இருந்து அகால மரணமடைந்த கோவிந்தராஜன், துரை அவர்கள், இப்பொழுதும் என் இல்லத்திற்குள் நுழைந்தால் நேராகச் சமையலறை வரை சென்று பொரித்த அப்பளத்தை சுவைத்தபடியே எல்லோரையும் குசலம் விசாரிக்கும் கலாகேந்திரா கிருஷ்ணன்...
- நடிகை மும்தாஜுடனும் நடிகர் ராஜேஷ் கன்னாவுடனும் இந்தி 'அரங்கேற்றம்' திரைப்படத்திற்காகப் பணிபுரிந்தபோது கிடைத்த அனுபவங்கள்...
- நடிகை ஹேமமாலினியுடனும் நடிகர் ராஜ் குமாருடனும் 'அபூர்வ ராகங்கள்' இந்தி திரைப் படத்தில் எனக்குக் கிடைத்த புதுப் புது அனுபவங்கள்...
- இனிய உருதுக்கவிஞர் குல்ஸாருடனும் இசை மேதை நௌஷாத் அவர்களுடனும் சேர்ந்து பணிபுரிந்த இனிய நினைவுகள்...
- நமது கவிஞர்களின் தனித்துவச் சிந்தனைகளை இந்திப் பாடலில் கொண்டு வர முடியாமல் அவர்கள் தவித்த அந்த நேரங்கள்.
- காலை 7 மணியிலிருந்து வேலைகளைத் தொடங்கிப் பழக்கப்பட்ட எனக்கு, மதியம் 12 மணி சுமாருக்குத்தான் ஜரூராக வேலைகளைத் துவக்குகின்ற சில பம்பாய் நடிகர்களின் நிதானம் சற்றும் ஒத்து வராத படப்பிடிப்புச் சம்பவங்கள்....
- எனது இனிய நண்பர் S.P. முத்துராமன் எனது கவிதாலயா நிறுவனத்திற்காகப் படங்களை இயக்கித் தந்தபோது அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்ட சில நல்ல குணங்கள்...
- மணிரத்தினம் அவர்கள் எனக்காக 'ரோஜா' திரைப்படத்தை இயக்கிய போது, நான் அவரிடமிருந்து நேரில் கற்றுக் கொண்ட சில கலைநுணுக்கங்களும், பார்த்து பிரமித்த அந்த workaholic உழைப்பும்....
- இருபத்தி நான்கு வயதிலே திரை இசையிலே ஒரு பெரும் புயலை அகில உலகத்திலும் ஏற்படுத்தி விட்டிருக்கிற அந்த மெல்லிசை Mozart, A.R. ரகுமான் அவர்களுடன் பணிபுரிந்த இனிய நினைவுகள்...
- உலகமெங்கும் விரவிக் கிடக்கும் தமிழர்கள் மத்தியில் கவியரசின் வாரிசு என்கிற பெருமைக்குரியவராக உலா வந்து கொண்டிருக்கும் எனது விரல் விட்டு எண்ணக் கூடிய நண்பர்களில் ஒருவராக இருக்கும் வைரமுத்துவோடு அளவளாவிய

சவுத் ஈஸ்ட் பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட 'நிதி' நிறுவனம். துவக்கம் - 1989.
கார்த்திக் அபார்ட்மெண்ட்ஸ், அடித்தளம், 6 செயிண்ட் மேரீஸ் சாலை, மந்தைவெளி, சென்னை - 28. போன் : 49 40 255.
எழும்பூர் கிளை - 76, எழும்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 8.

பிக்சட் டிபாசிட் திட்டம் (மாதங்கள்)					'உதவும் கரங்கள்' டிபாசிட் திட்டம் (மாதங்கள்)			இத்திட்டம் முதியோர், உடல் ஊனமுற்றோர், விதவையர் ஆகியோருக்கு மட்டும். ஆண்டுக்கு ஒரு முறை வட்டி வாங்கினால்
12	24	36	48	60	12	24	36	
17%	18%	19%	19.5%	20%	20%	20.5%	21.0%	**21%**

'குத்து விளக்கு' மறு முதலீட்டுத் திட்டம் -1		
36 மாதங்கள்	1. Rs. 2,925/-	Rs. 5,000/-
	2. மற்றும் அதன் பெருக்கில்	
	3. Rs. 14,625/-	Rs. 25,000/-

'குத்து விளக்கு' மறு முதலீட்டுத் திட்டம் - 2		
252 மாதங்கள் (21 வருடங்கள்)	1. Rs. 345/-	Rs. 20,000/-
	2. மற்றும் அதன் பெருக்கில்	
	3. Rs. 1,725/-	Rs. 1,00,000/-

'கலங்கரை விளக்கம்' மறு முதலீட்டுத் திட்டம் - 1 (மாதங்கள்)					
டிபாசிட்	12	24	36	45	60
1,000/-	1,184/-	1,430/-	1,735/-	2,000/-	2,535/-

'கலங்கரை விளக்கம்' மறு முதலீட்டுத் திட்டம் - 2		
டிபாசிட்	120 மாதங்கள்	180 மாதங்கள்
2,500/-	16,500/-	45,500/-

'கல்பதரு' திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு முடிவில் பெறும் தொகை	10-ம் ஆண்டு முடிவில் பெறும் தொகை	15-ம் ஆண்டு முடிவில் பெறும் தொகை
Rs. 6,320	Rs. 6,000/-	Rs. 6,000/-	Rs. 56,300/-

'காமதேனு' மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 30 ஆண்டுகள்	10-ம் ஆண்டு முடிவில் நீங்கள் பெறும் தொகை	மேலும் 20 ஆண்டுகள் கழித்து நீங்கள் பெறும் தொகை
Rs. 12,500/-	Rs. 12,500/-	இருபத்தைந்து லட்சம்
Rs. 25,000/-	Rs. 25,000/-	ஐம்பது லட்சம்
Rs. 50,000/-	Rs. 50,000/-	ஒரு கோடி

ரெக்கரிங் டிபாசிட் திட்டம் மாதாந்திர வட்டி 19%

தங்க நகைக் கடன் ஒரு கிராமுக்கு ரூ. 300/-
மதிப்பீட்டுக் கட்டணம் இல்லை.
ஆர்.டி. தேவை இல்லை.
உச்சவரம்பு இல்லை.
வட்டி வரி இல்லை.

ஏ.வி.இராமநாதன் இயக்குனர் ஆடிட்டர்	எம். பி. பாண்டுரங்கம் துணைத் தலைவர் மற்றும் தலைமை நிர்வாகி	பி. கே. சாமிநாதன், தலைவர், ஓய்வு பெற்ற மாநில அரசு துணைச் செயலாளர்

நேரம் : 9 - 12.30 & 3 - 5.30	பங்குத் தொகை ரூ. 1/-தான்	மாதத்தின் கடைசி நாள் வேலை நாளாகும்.

படியே பணிபுரிந்த அந்த சுவையான நாட்கள்...

- என்னை ஒரு மூத்த சகோதரனாகப் பாவித்து என் மீது பாசத்தைப் பொழியும் பாரதிராஜாவுடன் generation gap என்கிற இடைவெளிக்கப்பாலும் அவருடன் பேசிப் பழகக் கிடைத்த இனிய நேரங்கள்....
- இசைஞானி இளையராஜாவின் இசை ஞானத்தையும் பொங்கிப் பொங்கி எழும் அவரது இசைத் திறமையையும் நேரில் அனுபவிக்கக் கிடைத்த வாய்ப்புகள்...
- என்னிடம் உதவி இயக்குநர்களாக இருந்து அவ்வப்பொழுது எனது கோபத்திற்கு உள்ளாகி, இரவு பகல் என்று பாராமல் என்னுடன் கூடவே உழைத்து என்னை நெகிழ வைத்த அமீர்ஜான், சுரேஷ்கிருஷ்ணா, வசந்த் போன்றவர்கள் இன்று நல்ல இயக்குநர்களாக வளர்ந்து எனக்குப் புகழ் தேடித் தந்த சம்பவங்கள்...
- அன்றும், இன்றும், என்றும் எனக்கு friend, philosopher, guide ஆகவும் அதே நேரத்தில் உதவியாளராகவும் உறுதுணையாகவும் விளங்கும் அனந்துவின் ஆற்றலும் அவரைப் பற்றிய தகவல்களும்....
- கார்ட்டூன்களாகவே எனக்குத் தபாலில் அனுப்பி வைத்து எனது கவனத்தைக் கவர்ந்து என்னிடம் உதவியாளராகச் சேர்ந்து, இன்று இணை இயக்குநராக உயர்ந்திருக்கும் அந்த சடில்லா உழைப்பாளி சரவணன்...
- கடந்த இருபத்திரெண்டு ஆண்டுகளாக அந்த மார்ச் மாதம் 11-ம் தேதி எனக்கு 'ஹார்ட் அட்டாக்' வந்து நான் செத்துப் பிழைத்த நாளை, மறுபிறவி எடுத்த நாளாகக் கருதி அவர் எங்கே வேலையில் ஈடுபட்டிருந்தாலும் அன்று நேரில் வந்து என்னைச் சந்தித்து கையில் ஒரு ஆப்பிள் பழத்தைக் கொடுத்து விட்டுப் பிறந்த நாள் வாழ்த்துக் கூறிவிட்டுப் போகும் பாசமிகு என் முன்னாள் உதவியாளன் T.P. அருணாசலம்;
- ஃபிரெஞ்ச் அரசின் 'செவாலியே' விருது பெற்றதற்காக டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு ஒரு மாபெரும் விழா ஏற்பாடு செய்த விழாக் குழுவின் தலைவராக இருந்து திரு M. சரவணன் அவர்களின் நேரடிப் பொறுப்பில் அந்த விழாவினை மற்ற சக பொறுப்பாளர்களுடன் தோளோடு தோள் நின்று ஒரு சரித்திர விழாவாக நடத்திய பெருமைக்குரிய இன்ப நினைவுகள்...
- M. சரவணன் அவர்கள் அகில உலகத் தயாரிப்பாளர் சம்மேளனத்தின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமைக்காக தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்களின் சார்பிலே அவருக்கு சென்ற வாரம் எடுக்கப்பட்ட விழா வரை...

இன்னும்,
இன்னும்,
இன்னும்,
எத்தனை எத்தனையோ!

நினைத்துப் பார்க்கையில் பயன்தரும் சுவையான சம்பவங்கள் இன்னமும் ஆயிரம் உண்டென்றாலும் எல்லாவற்றையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமெனில் இன்னும் குறைந்தது 52 வாரங்களாவது தேவைப்படுமோ என்கிற நிலையில்...

All good things should come to an end என்கிற எழுதப்படாத ஒரு இலக்கணத்தின்படி இந்தத் தொடரை நிறைவு செய்து கொள்வதில் மனநிறைவு கொள்கிறேன்.

ஆத்மதிருப்தியை எனக்களித்த இந்தத் தொடர், சற்று நின்று பின்னால் திரும்பிப் பார்த்து என்னையே சுயவிமர்சனம் செய்து கொள்கின்ற நல்வாய்ப்பினையும் எனக்கு ஒவ்வொரு வாரமும் தந்தது என்று சொன்னால் அது மிகையாகாது!

வாழ்க்கைப் பயணத்தில் வெற்றி பெறத் துடிக்கும் இளைஞர்களுக்கு ஒரு வார்த்தை. விரக்தியடையாதீர்கள்; கடவுள் என் மீது கருணை காட்டவில்லையென்று ஆண்டவனைக் குறைகூறாதீர்கள். ஏனெனில், God often visits us; But most of the while, we are not at home! — Joseph Roux —

புதிய திரைப்பட இயக்குனர்களுக்கு மட்டும் ஒரே ஒரு advice.

எனது வார்த்தைகளில் இல்லை;
ரஜனீஷ் அவர்கள் சொன்னது
Commit an error
Don't mind.
But don't repeat it.


எனது அருமை நண்பர் கவியரசு வைரமுத்து அவர்களின் வரிகளில் சொல்லி இத்தொடருக்கு முத்தாய்ப்பு வைக்கிறேன்.

சுடும் வரைக்கும்
நெருப்பு
சுற்றும் வரைக்கும்
பூமி
போராடும் வரைக்கும்
மனிதன்

போராட்டம் என்பது வாழ்க்கைப் பயணம் கூடத்தான்!

ஆகவே தொடர்தான் முடிகிறதே தவிர, பயணம் தொடர்கிறது...

(முற்றும்)



ஒவ்வொரு மனிதனும் அசலாகப் பிறந்து நகலாகச் சாகிறான்.
— எட்மண்ட் ஃபர்க்/இராமேஸ்வரம் மூனா

சேஷன் தலைக்கு தொப்பியா? துண்டா?

● அம்பி தம்பி, சென்னை - 48.

? 'முதல்வர் விருப்பப்பட்டால் பதவியை இழக்கத் தயார்' என்கிறாரே ஆர்.எம்.வீ?

! ஏற்கெனவே இலாகாவை இழந்து விட்டாரே! திரும்பக் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பதற்கு ஆளுனரின் 'கருணை'யே காரணம்!

● க. மாரியப்பன், கோவை - 11.

? அடுத்து சேஷன் தலையை அலங்கரிக்கப் போவது தொப்பியா? துண்டா?

! எப்போதும் போல் அது பளபளக்கும் வழுக்கையாகவே இருக்க வேண்டும் என்பதுதான் நமது ஆசை!

● ஜி. அர்ஜுன், திருப்பூர்.

? 'உரிய அதிகாரம் கொடுத்தால் காஷ்மீர் தீவிரவாதிகளைக் கூட முதல்வர் அடக்கிக் காட்டுவார்' என்று இந்திரகுமாரி பேசியிருக்கிறாரே?

! 'கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன், வானம் ஏறி வைகுண்டத்துக்கு வழிகாட்டுவதாகச் சொன்னது போல..' என்று அண்ணாதுரை கூறிய உவமை தான் நினைவுக்கு வருகிறது.



* துரும்பும்...

● எம். சக்திவேல், மணியனூர். ☐

? இலங்கை ராணுவத்தால் விடுதலைப் புலிகளை அடக்க முடியுமா? அழிக்க முடியுமா? முடியும் என்றால் இவ்வளவு காலமாக ஏன் விட்டு வைத்தார்கள்?

! கொரில்லா போர் முறையைக் கையாள்வோரை நேர்மையான யுத்தம் செய்து முறியடிப்பது மிகவும் கஷ்டம். வியட்காங் கொரில்லாக்களும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினரும் நடத்திய யுத்தங்களே இதற்குச் சான்று. அதனால்தான் இப்பிரச்னைக்குப் பேச்சு வார்த்தை நடத்தி, நிரந்தரமான அரசியல் தீர்வு காண வேண்டும் என்று அதிபர் சந்திரிகா சொல்லி வருகிறார்.

● லல்லி பாலகிருஷ்ணன், மதுரை - 9.

? நீங்கள் அமைச்சராக இருந்து, பாட்ஷா பட விழா மேடையில் இருந்திருந்தால், ரஜினி பேச்சுக்கு மறுப்பு சொல்லியிருப்பீர்களா?

! வெறும் அமைச்சராக இருக்கும் யார் வேண்டுமானாலும் சொல்லியிருப்பார்கள். தயாரிப்பாளர் 'cum' அமைச்சர் என்னும் போதுதானே பிரச்னை!



* இளிச்ச வாயன்...?



* தொப்பியா? துண்டா?

● ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

? 'காதல் தெய்வீகமானது என்பதெல்லாம் சுத்தப் பொய்' என்று ஜெமினி கணேசன் சத்தியம் செய்கிறாரே?

! அவர் கருத்தை மறுப்பதற்கு ஆதாரமான சரித்திரச் சான்றுகளும் ஏராள



* இரும்பும்...!

நீங்கள் கேட்டவை - தராசு

மாக உள்ளன.

● **வசந்தா காந்த், கருப்பம்புலம்.**


? வெடிகுண்டு பற்றிய ரஜினி பேச்சுக்கு, போட்டி போட்டுக் கொண்டு அ.தி.மு.க வினர் அறிக்கை விடும் போது, ரஜினிக்கு ஆதரவாக எந்தவொரு திரையுலகப் புள்ளி யும் அறிக்கை விடவில்லையே?

! அதுதான் உலகம் - குறிப்பாக சினிமா உலகம்!

● **ஆர். பிரகாஷ், பொன்மலை.**

? மதுரை மீனாட்சியம்மன் கோயில் குளக் கரை சுவர்களில் இருந்த நாயக்கர் கால ஓவியங்களையெல்லாம் வெள்ளையடித்து அழித்திருப்பது குறித்து....?

! சுவரில் வெள்ளையடித்தது போதாதென்று அந்த உண் மையை மறுக்கப் போய் தன் முகத்திலும் அரக கரி பூசிக் கொண் டுள்ளது! அரசின் மறுப்பை ஏற்காமல், 'தான் வெளியிட்ட செய்தி சரியே' என்று ஹிந்து நாளிதழ் உறுதி யளித்துள்ளதே!



* நடத்திய பாடம்!



* "சுத்தப் பொய்!"

● **எஸ். ராமசுப்பிரமணியன், தூத்துக்குடி.**

? அ.தி.மு.கவினர் ரஜினியுடன் மோதாமல் வீரப்பனுடன் மோதுவது ஏன்?

! துரும்பைத்தான் ஊதிப் பார்க்கலாம். இரும்பை உரசினால் தீப்பொறிதான் வரும்!... அதனால்தான்!

● **என். பாலகிருஷ்ணன், வளவனூர்.**

? தேசிய முன்னணியிலிருந்து தி.மு.க விலகியதால் நஷ்டம் தி.மு.கவுக்கா? தேசிய முன்னணிக்கா?

! அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதை யாக தே.மு.தான் அவதிப்படுகிறது! அ.தி.மு. கவைச் சேர்த்துக் கொள்வதில் கம்யூனிஸ்டு களுக்கு ஒப்புதலில்லை. கம்யூனிஸ்டுகளையும் ம.தி.மு.கவையும் சேர்த்துக் கொண்டால் தாம் சேரப் போவதில்லை என்கிறார் ஜெ.... முன்னணிக்குப் பெரிய பின்னடைவு.

● **புளியரை கணேசன், சென்னை - 30.**

? 'வீரப்பன் இருப்பிடம் பற்றிச் சரிவர தகவல் கிடைக்காததால்தான் அவனைப் பிடிப்பது கஷ்டமாக உள்ளது' என்று கர் நாடக டி.ஜி.பி கூறியிருக்கிறாரே?

! இருப்பிடம் பற்றித் தகவலும் கொடுத்து, யாராவது போய் பிடித்துக் கொண்டு வந்தும் கொடுத்தால், மெடல் மட்டும் வாங்கிக் கொள்வார்கள் போலிருக்கிறது!

● **வீ.ஆர். ராஜேஷ், ஒசூர்.**

? பாட்ஷா படவிழாவில் ரஜினிக்கு மறுப்பு சொல்லாத ஆர்.எம்.வீ.யைப் பதவி விலகச் சொல்லும் நபர்களெல்லாம், திரைப்பட நகர் விழாவில் ஜெ. முன்னிலையிலேயே அவரைக் குற்றம்சாட்டி ரஜினி பேசிய போது கொதித்தெழவில்லையே, அப்போது ஜெ. மறுப்பு சொல்லாமல் பேசாமல் தானே இருந்தார்?

! தலைவியை குளிர்வித்து 'ஆசி' பெறத்தான் 'துரோகி வீரப்பன்' நாடகமேயொழிய, ரஜி னிக்குப் பதில் சொல்லியிருக்க வேண்டும் என்ற மெய்யான அக்கறையினால் அல்ல. அன்றும் இன்றும் குற்றச்சாட்டுக்கள் உண் மையே என்பதால்தான் சம்பந்தப்பட்ட இரு வருமே பதில் சொல்லவில்லை!

❑ **ரூ. 25 பரிசு பெறுபவர் :**
எம். சக்திவேல்,
5/72, பொடாரன் நகர்,
மணியனூர் அஞ்சல்,
சேலம் - 636 010.

● **ஷோபனாதாசன், நாட்டரசன் கோட்டை.**


? 'காங்கிரஸ் கட்சியின் உயர்ந்த மதிப்பை, ஒவ்வொருவரும் பாதுகாக்க வேண்டும்' என நரசிம்மராவ் கேட்டுக் கொண்டிருக்கி றாரே?

! அது மட்டுமா? சூரஜ்குந்தில் எண்பது நிமி டங்கள் பேசி, எப்படியெல்லாம் கட்சி மதிப்பை உயர்த்தலாம் என்று தொண்டர் களுக்குப் பாடமே நடத்தியுள்ளார்! ஆனால் இருக்கும் கொஞ்சம்-நஞ்சம் நல்ல பெயரை யும் உடைத்தெறிய, சுகில் ஷர்மா, ஹர்ஷத் மேத்தா ரீதியிலான விவகாரங்கள் அவ்வப் போது வெடிக்கின்றனவே!

● **எஸ். ரோஜா, நாட்டரசன்கோட்டை.**

? இந்த வருடமும் சிவாஜிக்கு மத்திய அரசு 'பேபே' காட்டி விட்டது பற்றி...?

! அவர்கள் 'பேபே' காட்டியது இருக்கட்டும்; இவர் ஏன் தம்மை 'இளிச்சவாயன்' என்று வருணித்துக் கொண்டு தம் மதிப்பையே குறைத்துக் கொள்ள வேண்டும்? திலீப் குமாருக்கு ஒரு வாழ்த்து தெரிவித்து உச்சா ணிக்கு உயர்ந்திருக்கலாமே!



Lloyds Finance *Multimoney* Deposits

☆ **The unrivalled choice of 50,000 depositors for total of Rs.114 crores.**

☆ **200+% growth for the 4th consecutive year.**

Lloyds Finance

Member of the
LLOYDS GROUP

Rating
CARE* AA (FD)**

Networth
Rs. 140 crores

Lloyds Finance *Multimoney* Deposits

Safer than many a bank. Higher returns too!

MOULIS/B/LF/95

Lloyds Finance Limited: MADRAS: No. E&F, 1st Floor, Prince Arcade, 22A, Cathedral Road, Madras-600 086. Tel: 8259634/44. Fax: 8257897. **COIMBATORE:** Tel: 439780/439959/449586/447281. Fax: 448653. **MADURAI:** Tel: 31343. **TRICHY:** Tel: 467904. **COCHIN:** Tel: 368524. **HYDERABAD:** Tel: 816224/843493. Fax: 816228. **BANGALORE:** Tel: 5586150/5597451/5594147. Fax: 5597906.

This advertisement does not purport to solicit deposits. * An RBI approved credit rating agency. ** Indicates high quality in terms of investment grade and high by all other standards.

“முதலாளி திட்டினா, கண்டுக்கக் கூடாது!”



அரை நிஜாரும் அழுக்கு பனியனும் பெருங் காய வாசனையும் திருநெல்வேலித் தமிழுமாக பொட்டலம் கட்டுவதையே வாழ்வின் தலையாய காரியமாகக் கொண்டு இயங்கும் மளிகைக் கடைப் பையன்களை எப்போதும் சந்திக்கிறோம். எப்போதாவது சற்று உள்ளார்ந்த பார்வையை அவர்கள் பக்கம் வீசி இருக்கிறோமா?

சென்னை ஐ.ஐ.டி. வளாக மளிகைக் கடைப் பையன் மாரிமுத்துவைச் சந்தியுங்கள் :

“தூத்துக்குடியிலிருந்து 36 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கிற மேல் மந்தைன்ற கிராமத்தைச் சேர்ந்தவன் நான்.

எட்டாவது வரை மேல் மந்தையிலேயே படிச்சேன். அப்போ அப்பா, ''வேலைக்குப் போறியா? குடும்பத்துக்கு சௌகரியமா இருக்குமே''ன்னாரு.



• மாரிமுத்து



சென்னை தரமணியிலே இருக்கிற எங்க மாமா, ''இங்கே தெரிஞ்ச மளிகைக் கடையிலே வேலை ஒண்ணு காலியாயிருக்குது''ன்னு சேதி அனுப்ப, என்னை மெட்ராஸுக்கு அனுப்பினாங்க.

அஞ்சு வருஷமா நூல் பிடிச்சாப்புல ஒரே மாதிரி வாழ்க்கை போயிட்டிருக்கு. காலையிலே எட்டு மணியிலேயிருந்து ராத்திரி எட்டு மணி வரை கடையிலே இருக்கணும். டிபன், சாப்பாடெல்லாம் முதலாளி வீட்டிலேயிருந்து வரும். மதியம் ரெண்டிலிருந்து நாலு வரைதான் கொஞ்சம் ரெஸ்ட். முதலாளி வீட்டுக்கு எதிரே இருக்கிற ஒரு அறையிலேதான் நானும் வேறே ரெண்டு பையன்களும் தங்கியிருக்கோம். வாடகை மாசம் 250 ரூபா. மாசச் சம்பளம் 400 ரூபா கொடுப்பாங்க. கிடைக்கிற சம்பளத்தைச் சேர்த்து வைப்பேன். செலவுன்னு பார்த்தா ரெண்டு மாசத்துக்கொரு தடவை ஒரு படம் பார்ப்பேன். ரஜினி படம்னா ரொம்ப இஷ்டம்.

டூத்பேஸ்ட், குளியல் சோப்பு, துணி சோப்பு இதெல்லாம் மட்டும்தான் நான் வாங்குவேன். எங்க கடையிலேயே வாங்கிக்குவேன். கணக்கு வச்சு சம்பளத்திலே கழிச்சுக்குவாங்க.

காலையிலேயிருந்து இரவு வரை கடையிலே நின்னுக்கிட்டே இருக்கணும். வேலைக்குச் சேர்ந்த சமயம் ரெண்டு மாசத்துக்குக் கால் ரொம்ப வலிச்சுது. இப்ப பழகிடுச்சு.

வருஷத்துக்கு ஒரு தடவை (தீபாவளிக்காவது, பொங்கலுக்காவது) ஊருக்குப் போய் வருவேன். ''வேலையை நல்லாப் பழகிக்கடா''ன்னு அப்பா அடிக்கடி எடுத்துச் சொல்லுவாரு. அம்மாதான் 'ஓ'ன்னு அழுவாங்க - இப்படி என்னைப் பிரிஞ்சிருக்க வேண்டியிருக்குதேன்னு. மாசம் ஒரு தடவை லெட்டர் போடுவேன்.

இந்த மளிகைக் கடையிலே நிறைய வியாபார உத்திகளைக் கத்துக்கிட்டேன். கஸ்டமர் கேக்கிற பொருள் இல்லேன்னா, நாமே அடுத்த கடையிலேயிருந்து அதை வாங்கியாவது தரணும். விதவிதமாப் பொட்டலம் கட்டறதுன்றது சுலபமில்லே. அதைச் சரியாக் கத்துக்கவே கொஞ்ச நாளாச்சு.

நாம வேகமா பொட்டலம் கட்டினாக் கூட, கஸ்டமர் பொறுமையிழந்துட்டா, முதலாளி ''என்னடா மெதுவாக் கட்டறே''ன்னு கோவிச்சுக்கலாம். நாம கண்டுக்கக் கூடாது.

இன்னும் கொஞ்ச வருஷத்திலே சொந்தமா ஒரு கடை தூத்துக்குடியிலே தொடங்க ஆசை. முடிஞ்ச வரை சேமிக்கிறேன். அப்பாவும் ஒரு சின்ன தொகை தந்தாருன்னா, கடை வைக்க சௌகரியமா இருக்கும். கடவுள் பார்த்துக்குவாரு!''

- ஜி.எஸ்.எஸ்.

படங்கள் : **ஸ்ரீஹரி**





• சங்கரா ஹாலில்...

முன்பெல்லாம் 'செகண்ட்ஸ்' வாங்குவது என்றால் மூர்மார்க்கெட்டை நோக்கிப் படையெடுப்பார்கள் சென்னைவாசிகள் - மற்றவர்கள் பயன்படுத்திய புத்தகங்கள், உடைகள் ஆகியவற்றைக் குறைந்த விலையில் அள்ளிப் போட்டுக் கொள்ள. ஆனால் இன்று 'செகண்ட்ஸ்' ஷாப்பிங் என்பதன் அர்த்தம் மாறி விட்டது.

செகண்ட்ஸ் என்பது என்ன? ஐ.எஸ்.ஐ. தர நிர்ணயத்தை எட்டாததை செகண்ட்ஸ் என்பார்கள். அல்லது ஏற்றுமதிக்கான ஆடைகள் சர்வதேசத் தர அளவீட்டை எட்டவில்லையென்றாலும் செகண்ட்ஸ் மார்க்கெட்டுக்கு வரும். அது மட்டுமல்ல! அழுக்கான, சரியான அளவு இல்லாத, சின்ன ஓட்டை உடைய, சரியான பாவு இல்லாத - இப்படிப் பட்டவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேலான காரணங்களினால் ஒரு தயாரிப்பு செகண்ட்ஸாகக் கருதப்படலாம்.

மயிலை லஸ்ஸில் உள்ள ஹரி ஏஜென்ஸியினர் கடந்த 23 வருடங்களாக 'டான்டெக்ஸ்' ஜட்டி மற்றும் பனியன்களை செகண்ட்ஸில் விற்கின்றனர். உரிமையாளர் ஹரி சொன்னார் :



• ஹரி

" '45 ரூபாய் கொடுத்து ஜட்டி வாங்குவதை விட அதே ப்ராண்டின் செகண்ட்ஸை பதினைந்து ரூபாய் குறைவாக வாங்குவதுதான் புத்திசாலித்தனம். உள்ளாடை கொஞ்சம் முன்னே பின்னே இருந்தா என்ன?' என நினைப்பவர்கள் அதிகமாகிவிட்டனர். ஆகவே, டிமாண்ட் அதிகமாகிப் போய் செகண்ட்ஸ் சப்ளை குறைஞ்சிடுச்சு!"

வி.ஐ.பி. சூட்கேஸ்கள், ப்ரீஃப்கேஸ்கள், கைப்பைகள் ஆகியவற்றின் செகண்ட்ஸ் பிரிவைச் சேர்ந்த ஒரு விற்பனை அதிகாரியிடம் பேசிப் பார்த்தோம்.

வி.ஐ.பி. லக்கேஜ்களைப் பொறுத்தவரை பழுதடைந்தவையோ, தரம் குறைந்தவையோ செகண்ட்ஸாக விற்கப்படுவதில்லையாம். சின்னக் கீறல்கள் விழுந்தவையே செகண்ட்ஸாகின்றன. பெட்டிகளின் பூட்டுகள் சரியில்லையென்றால் அவை நிச்சயம் செகண்ட்ஸ் விற்பனைக்குக் கூட வராதென்றார். பழுதடைந்த தயாரிப்புக்கள் (நாசிக், நாக்பூர் போன்ற) வட இந்தியாவிலுள்ள அவர்களது தொழிற்சாலைக்கே திருப்பி அனுப்பப்பட்டு விடுமாம். குறைந்த அளவிலேயே இந்தப் பொருள்கள் செகண்ட்ஸுக்கு வருவதால் விற்பனை அமோகம்!

ஸ்ரீ சங்கரா ஹால் முழுவதும் வெவ்வேறு விதமான உடைகள் - டவலிலிருந்து ஜீன்ஸ் வரை, கைக்குட்டையிலிருந்து கரிதார் வரை - பரப்பப்பட்டிருந்தன.

"சிராகோ எக்ஸ்போர்ட்ஸ்" என்ற பம்பாய் நிறுவனம் ஒன்று இங்கே 'ஸேல்' என்ற அறிவிப்புடன் செகண்ட்ஸ் கடையை ...ர்த்திருந்தது.

அதன் முக்கியப் பிரதிநிதி அரவிந்த் பண்டாரி.

"நிறைய பேர் செகண்ட்ஸுகளை வாங்கக் காரணங்கள் உண்டு. தரம் கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும் மிகக் குறைவான விலைக்குக் கிடைக்குதே! சொல்லப் போனா பல உடைகள் ஏற்றுமதிக் கோணத்தில் நிராகரிக்கப்பட்டிருந்தாலும் உள்ளூர் நோக்கில் நல்ல தரம் உள்ளதாகவே கூட இருக்கும்.

"தவிர, சிறுவர் சிறுமிகளுக்கு விலை உயர்ந்ததாக ஒரு செட் ட்ரெஸ் எடுப்பதை விட, விலைக்குறைவாக ரெண்டு மூன்று செட்கள் எடுப்பதையே நிறைய தாய்மார்கள் விரும்புகிறார்கள். வெரைட்டியாக வாங்க முடிகிறது; எப்படியிருந்தாலும் வளரும் குழந்தைக்கு எந்த ட்ரெஸ்ஸுமே கொஞ்ச நாளிலே டைட்டாயிடப் போகுது. அதனாலே விலை குறைந்ததாகவே வாங்கிப் போடுவோம் என்ற மனோபாவம் மற்றொரு காரணம்" என்றார்.

— **ஜி.எஸ்.எஸ்.**

படங்கள் : **ஸ்ரீஹரி**



இளம்பிள்ளை வாதம் பாதிக்கப்பட்ட மூளை வளர்ச்சியற்ற குழந்தைகளு

இந்தியாவிலேயே சிறந்த முறையாக குடந்தை மருத்து

இளம்பிள்ளை வாதம் மற்

பேச முடியாத வலிப்பு நோய்களால் பாதிக்

பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான ஊனமுற்

அண்ணையில் குடந்தை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று ந



இந்தப் படத்தில் காணும் சிறுவன் வயது 12. அப்பாஸ் த/பெ. முகம்மது யூசுப், 64, வாவா ராவுத்தர் தெரு, புளியங்குடி (P.O.) திருநெல்வேலி ஜில்லா. இச்சிறுவன் கடந்த நான்கு ஆண்டுகளாய் உட்கார்ந்தால் எழுந்திருக்க முடியாமலும், முழங்காலுக்குக் கீழ்கெண்டை சதை பருத்தும், முதுகெலும்பு வளைந்து வயிறு முன்னோக்கி தள்ளியும், நடக்க இயலாமலும் எம்மிடம் வந்து தங்கி சிகிச்சை பெற்றதில் முதுகெலும்பு நேராகி கெண்டை சதை குறைந்து நன்றாக எழுந்து நடக்கும் காட்சியைக் காணுகிறீர்கள்.



இப்படத்தில் காணும் சிறுமி பவ்யா வயது 9, த/பெ. சம்போ கவுடா, P. அள்ளி கிராமம், கெடையாளம் (P.O.), மாண்டியா (Dt.), கர்நாடகா மாநிலம். இச் சிறுமிக்கு 3 வயதில் இளம் பிள்ளை வாத நோய் ஏற்பட்டு இரண்டு கால்களும் சூம்பி, நிற்க இயலாத நிலையில் எம்மிடம் இரண்டு மாதம் தங்கி சிகிச்சை பெற்று நடக்கும் காட்சி.



இப்படத்தில் காணும் சிறுமி வயது 8. சத்தியபாமா, த/பெ. கிருஷ்ணமூர்த்தி, 13-A, ச.அ. காம்பவுண்ட், வைகை வடகரை, மதுரை-21. இச்சிறுமி 8 மாத குழந்தையில் இரண்டு கால்களும் இளம் பிள்ளை வாத நோயால் பாதித்து இரு கால்களும் மிகமிக சூம்பி நடக்க இயலாத நிலையில் எம்மிடம் வந்தபின் தற்சமயம் சிகிச்சை பெற்று நடக்கும் காட்சி.



இப்படத்தில் காணும் சிறுவன் யுவராஜ் த/பெ. A. செல்வம், No. 103, டாக்டர் அம்பேத்கார் நகர், T. கைலாசம் பாளையம் (P.O.) திருச்செங்கோடு (T.K.) இச்சிறுவன் 4 மாத குழந்தையாக இருக்கும் போது இடதுகால் இளம் பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டு இடதுகால் சூம்பியும், நடக்க இயலாமலும் முழங்கால் பகுதி முடங்கி காலை நீட்ட முடியாமலும் இடதுபாதம் மோசமாக வளைந்தும் எம்மிடம் சிகிச்சைக்கு வந்து 3 மாதம் சிகிச்சை பெற்று எழுந்து நடக்கும் காட்சி.



Dr. M.A. இஸ்மத்பாஷா
(நரம்பியல் நிபுணர்)

இதுபோன்று எத்தனையோ குழந்தைகள் சிகிச்சை பெற்று வந்துள்ளனர்!

குடந்தை மருத்துவமனை (Regd.)

27, காமாட்சி ஜோசியர் தெரு,
கும்பகோணம் - 612 001.

்க சிகிச்சை பெற, முன்கூட்டியே எழுதித் தெரிவித்துவிட்டு வாருங்கள்!!

மனையில், கை-கால்கள் சூம்பி செயல்பாடு இழந்த

ழும் மூளை வளர்ச்சியற்ற

பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு சிகிச்சை!


ர்கள் சிகிச்சை பெற்றுக் குணமாகி உள்ளனர்.


மடைந்து வருபவர்கள் சிலரின் காட்சிகளைக் கீழே காணுங்கள்!

வேலு த/பெ. வெங்கடாச ம், C/o. ரெத்தினசாமி மேஸ்திரி, டிஸ்டிரிக்ட் லிவ் டார்க் பார்ம், ஒரத்த டு. போன் : 206. இந்தப் டத்தில் காணும் திரு லு வயது 65. 21-3-94 ன்று வலது கை, வலது ல், பட்சவாதம் ஏற்பட்டு ம்மிடம் 26-3-94 அன்று ன்கு பேர்கள் தூக்கிக் காண்டு வந்தனர். எம்மி ம் ஒரே மாத சிகிச்சை ல் நன்றாக நடக்கும் ட்சியை காணுகிறீர்கள்.



இப்படத்தில் காணும் பெண் கலையரசி வயது 17, த/பெ. சச்சிதானந்தம், 48, II கிராஸ், 2வது மெயின் ரோடு, கௌதமபுரம், பெங்களூர் - 8, இப்பெண் 1½ வயதுச் சிறுமியாக இருக்கும்போது இளம்பிள்ளை வாத நோயால் வலதுகை, வலது கால் பாதித்து சூம்பி நிற்க, நடக்க இயலாத நிலையில், வலிப்பு நோய் அடிக்கடி வந்தும் பாதித்து எம்மிடம் தங்கிச் சிகிச்சை பெற்று குணமடைந்து எழுந்து நடக்கும் காட்சி. வலிப்பும் குணமாகிவிட்டது.





இந்தப் படத்தில் காணும் சிறுவன் வயது 5, அப்துல் ஹபீஸ், த/பெ. அப்துல் ஹலீம், 3/83-3, முஸ் லிம்பூர் தெரு, ஏரிகுத்திமேடு, பேரணாம்பேட்-635 810. இப் படத்தில் காணும் சிறுவன் இளம்பிள்ளை வாத நோயால் கழுத்து, இரண்டு கைகள், இரண்டு கால்கள் முதுகெலும்பு முதலியவைகள் பாதித்து துவண்டு மிகமிக மோசமான நிலையில் பாதிக்கப்பட்டு எம்மி டம் தூக்கி வந்தனர். எமது இரண்டு மாத சிகிச்சையில் நன்றாக எழுந்து நடக்கும் காட்சியை காண்கிறீர்கள்.



இந்தப் படத்தில் காணும் சிறுமியின் வயது 9, பெயர் செல்வி, D/o. பாட்டப்பன், 16, மெயின் ரோடு, கௌந்தப் பாடி (P.O.) பெரியார் மாவட்டம். 1 வயதில் வலது காலும் இடது காலும், இடது கையும் இளம் பிள்ளை வாதத்தால் பாதிக் கப்பட்டு எமது மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெற்று குணம் அடைந்து நடக்கும் காட்சி.

ூரண விவரங்களுக்கு ரூ. 1/- ஸ்டாம்பு வைத்துக் கடிதம்

எழுதுங்கள். அல்லது நேரில் அழைத்து வாருங்கள்.

இலவச தங்குமிட வசதியுண்டு.

பிரதி வெள்ளிக்கிழமை விடுமுறை.

ந்தி : NEUROCURE. போன் : 20259, 23259. வீடு : 24259. STD. 0435.

உறவுகள் தொடரட்டும். மகிழ்ச்சிகள் பெருகட்டும்.



கட்டுரைப்போட்டி

தொடரும் இனிய உறவுகள்!

காலம்காலமாய் தொடர்ந்து நிலைத்திருக்கும் உறவுகள் எப்போதுமே இனிமையானவை. உதாரணமாக, ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனத்துக்கும் அதன் 9 லட்சத்துக்கும் அதிகமான சந்தாதாரர்களுக்குமிடையே நிலைத்து நீடிக்கும் உறவு.

இதைப்போல் உங்கள் ஊரில், உங்கள் குடும்பத்தில், உங்களுக்குத் தெரிந்தவர்கள் மத்தியில் எத்தனையோ விதங்களில் உறவுகள் தொடர்ந்து நிலைத்திருக்கக்கூடும். உதாரணமாக —

50 பேர், 100 பேர் என ஒரே குடும்பமாகச் சேர்ந்து வாழ்வது...

காலம் காலமாய் தொடர்ந்து இடம்பெறும் கலை நிகழ்ச்சிகள்...

தொடர்ந்து இடம்பெறும் வித்தியாசமான பஞ்சாயத்துக்கள்...

உலகின் எந்தப்பகுதியில் வசித்துவந்தாலும், ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்காக உறவினர்கள் அனைவரும் ஒன்று கூடுவது...

தொடரும் இனிய உறவுகள்!

இப்படி எத்தனையோ இருக்கக்கூடும். இவை பற்றிய விவரங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். இவை தவிர, பள்ளி-கல்லூரி முன்னாள் மாணவர் அமைப்புகள், அலுவலக மனமகிழ் மன்றங்கள் போன்ற 'உறவுகள் அடிப்படையில்' நடத்தப்படும் நிகழ்ச்சிகள் பற்றியும் நீங்கள் எழுதலாம்.

இவற்றில் சுவையானவற்றைத் தேர்ந்தெடுத்துத் தொலைக்காட்சியில் ஒளிபரப்ப எங்கள் படப்பிடிப்புக்குழுவினர் உங்கள் ஊருக்கு நேரில் வருவார்கள். இது சம்பந்தமாக உங்களுடன் தொடர்புகொள்ள வசதியாக உங்கள் முழு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடுவதுடன், தொலைபேசி இருந்தால் அதன் எண்களையும் குறிப்பிட்டு 10 நாட்களுக்குள் உங்கள் கட்டுரைகளை எழுதி அனுப்புங்கள். கட்டுரைகள் இரண்டு பக்கங்களுக்கு மேல் அமையக் கூடாது.

தேர்ந்தெடுக்கப்படும் முதல் 50 கட்டுரைகளுக்கு மில்டன் ஹாட் அண்டு கோல்ட் (Milton Hot & Cold) பரிசாக அளிக்கப்படும்.

விதிகளும் நிபந்தனைகளும்:

- பரிசுக்குரிய கட்டுரைகளை நடுவர் குழு தேர்ந்தெடுக்கும்.
- தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகளைப் பொருத்தமாகத் திருத்தி, சுருக்கிப் பத்திரிகைகளில் வெளியிடும் உரிமை நிறுவனத்துக்கு உண்டு.
- கட்டுரைகள் அனைத்தும் ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனத்துக்கே சொந்தமாகும். அவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது.
- நிறுவனத்தின் முடிவே இறுதியானது.

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் சிட்ஸ் &
இன்வெஸ்ட்மென்ட்ஸ் பி. லிமிடெட்.
நிர்வாக அலுவலகம்: "சுப்பிரமணியம் பில்டிங்,"
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன் : 8520700/8523932/8522651/
8525636/8520797

திருமுறை – நூல்கள் – ஆசிரியர்கள் – பாடல்கள் – தொகுதிகள் – விலை அட்டவணை

திருமுறை எண்	நூல்கள்	ஆசிரியர்கள்	பாடல்கள்	தொகுதிகள்	விலை
முதலாம் திருமுறை	தேவாரம்	திருஞானசம்பந்தர்	1469	2	175.00
இரண்டாம் திருமுறை	தேவாரம்	திருஞானசம்பந்தர்	1331	2	175.00
மூன்றாம் திருமுறை	தேவாரம்	திருஞானசம்பந்தர்	1346	2	175.00
நான்காம் திருமுறை	தேவாரம்	திருநாவுக்கரசர்	1069	1	125.00
ஐந்தாம் திருமுறை	தேவாரம்	திருநாவுக்கரசர்	1015	1	125.00
ஆறாம் திருமுறை	தேவாரம்	திருநாவுக்கரசர்	980	1	125.00
ஏழாம் திருமுறை	தேவாரம்	சுந்தரர்	1026	1	100.00
எட்டாம் திருமுறை	திருவாசகம், திருக்கோவையார்	மாணிக்கவாசகர்	656 + 400 = 1056	2	170.00
ஒன்பதாம் திருமுறை	திருவிசைப்பாக்கள் திருப்பல்லாண்டு	திருமாளிகைத் தேவர், சேந்தனார் முதலான ஒன்பது பேர் பாடியவை	301	1	55.00
பத்தாம் திருமுறை	திருமந்திரம்	திருமூலர்	3047	3	200.00
பதினொன்றாம் திருமுறை	தொகுப்பு	காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமாள் நாயனார் முதலான பன்னிரண்டு பேர் பாடிய பாடல்கள்	1400	2	175.00
பன்னிரண்டாம் திருமுறை	திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்)	சேக்கிழார்	4286	6	400.00

பணத்தினை D.D. (அ) M.O. மூலம் அனுப்புக. புத்தகங்கள் வழக்கம்போல் V.P.P.யில் அனுப்பப்படும். தபால் செலவினைத் தபால்காரரிடம் செலுத்தி, நூல்களைப் பெறுக.

(குறிப்பு : ஒரே தடவையில் ரூ.1500/- அனுப்பி 34 தொகுதிகளையும் பெற விரும்புவோர், புத்தகங்களின் எடையும் எண்ணிக்கையும் கூடுதலாக இருப்பதால் ஏதேனும் லாரி சர்வீஸ் மூலம் பெறலாம்.)

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

தமிழ் நிலையம்,
ஏ.ஆர்.ஆர். காம்ப்ளக்ஸ், 141, உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை – 17.
(பனகல் பார்க் அருகில்)

மொட்டைமாடியில் மூன்று கார்கள்!

சாம்பலிலிருந்து உயிர்ப்பெற்று எழுந்த ஃபீனிக்ஸ் பறவையாக இன்று ஸ்பென்ஸர் கட்டடம்!

பனிச்சென்று இருக்கிறது. இனிய சங்கீதம் ஒலிக்கிறது. ஏ.சி. வசதி; அதேநேரம் நல்ல வெளிச்சம். நீரூற்று; அனைத்தையும் ரசித்தபடி நாம் நிற்க, எஸ்கலேட்டர் நம்மை மேலே கொண்டு போனது. சிங்கப்பூர், துபாயில் இருப்பது போல் உணர்ந்தோம்! நம் பிரமிப்பைப் புரிந்து கொண்டு பேசினார் கணேசன். தீக்கிரையான பழைய ஸ்பென்ஸர் கட்டடம் இருந்த இடத்தை வாங்கி, அங்கே சென்னையிலேயே மிகப் பெரியதாக, ராட்சஸ ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மங்கள் தீர்த் எஸ்டேட் நிறுவனத்தின் மார்க்கெட்டிங் மேனேஜர்.

"இப்போது மூன்று தளங்களில் கடைகள். அதற்குமேல் இன்னும் நான்கு தளங்களில் அலுவலகங்கள்... இவையெல்லாம் எங்கள் மொத்தத் திட்டத்தின் மூன்றில் ஒரு பகுதிதான்! பத்து ஏக்கர் பரப்பில் முழுமையாய் ஸ்பென்ஸர் பிளாஸா கட்டி முடிக்கப்படும் போது மொத்தம் பத்து லட்சம் சதுர அடிக்கு அலுவலகங்களும் கடைகளும் இருக்கும்.

"அயல்நாட்டு டூரிஸ்ட் கையேடுகளிலெல்லாம்கூட, சென்னையைப் பற்றிக் குறிப்பிடும்போது, ஸ்பென்ஸர் பிளாஸா பற்றித் தவறாமல் குறிப்பிடுகிறார்கள். 1998 வாக்கில், மூன்று கட்டப் பணியும் முடிந்து விட்டால் இந்தியாவின். பிரம்மாண்டமான ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் ஆக இது அமையும்" என்றார்!

மூன்றாவது மாடிக்குப் போய்ச் சேர்ந்தால் இலேசான ஷாக்! அங்கே நாலைந்து கார்கள்!

"இங்கே எப்படி கார்கள்?"

"அதுதான் ஸ்பென்ஸர் பிளாஸாவின் ஸ்பெஷாலிடி! கீழே உள்ள கார் நிறுத்துமிடமே விஸ்தாரமானதுதான் என்றாலும், எதிர்காலத் தேவை கருதியும், நவீனம் கருதியும் மூன்றாம் தளத்துக்குமேல், சுமார் முன்னூறு கார்களுக்கும் அதிகமாக நிறுத்த வசதி செய்திருக்கிறோம்!"

"கார்கள் மேலே ஏற வழி?"

"இப்போது சரிவான பாதை இருக்கிறது. விரைவில் கார்களை மேலே எடுத்துவர பிரத்தியேகமான லிஃப்ட் தயாராகிவிடும்!

"அதெல்லாம் சரி! இங்கே விலை எல்லாம் எப்படி? ஸ்பென்ஸர் விலை தானா?"

"அதிகபட்ச விலை குறிப்பிடப்பட்டுள்ள பொருளானால், வெளியே என்ன விலையோ அதற்குமேல் விற்க முடியாதே?"

"அவை தவிர, மற்றவையெல்லாம்?"

சிரித்தார் கணேசன்.

புரிஞ்சு போச்!

— எஸ். சந்திரமௌலி

படம் : யோகா




நாற்பதிலிருந்து நாலாயிரம் வரை...

அந்தச் சிறுவன், எஸ்.எஸ்.எல்.ஸி. முடித்ததும் மேலே படிக்க ஆசைப்பட்டான். அதற்கு வழிசெய்ய இயலாத குடும்பச் சூழல். நாற்பது ரூபாய் சம்பளத்தில் ஒரு நகைக் கடையில் வேலைக்குச் சேர்த்து விட்டார் அப்பா. இது நடந்தது 1956இல்.

குலத்தொழிலே நகை தயாரிப்புதான் என்பதால் வேலைக்குச் சேர்ந்த இடத்திலும் அவனால் சிறப்பாகப் பரிணமிக்க முடிந்தது. சுறுசுறுப்பான பையன் என்று முதலாளி வாயால் பாராட்டுப் பெற்றான். பாராட்டு, பரிசாக மாறியது - அவனுக்குத் திருமணம் நிச்சயமான போது!

நாற்பது ரூபாய் சம்பளம் அறுபதானது. விரைவில், 'இவனை நம்பி கடையை விட்டுப் போகலாம்' என்று முதலாளி நம்பிக்கை வைக்கிற அளவுக்கு உயர்ந்தான்.



• நாலாயிரம் சதுர அடியில்... • பாலு

அனுபவம் கூட, சொந்தமாகக் கடை வைக்கிற ஆசை வந்தது. ஆனால் பணம்? பத்து வருடங்கள் கழித்து, ஒரு வாடிக்கையாளரிடம் தம் ஆசையைச் சொல்ல, அவர் உடனே வாழ்த்தி ரூபாய் ஐயாயிரம் கொடுத்தார்!

1966இல் என்.எஸ்.ஸி. போஸ் ரோடில் எட்டடிக்கு எட்டடி - ஒரு பெட்டிக் கடை அளவில் நகைக் கடை தொடங்கினார். பழைய வாடிக்கையாளர்கள் ஆதரவு காட்ட ஆரம்பித்தார்கள்.

ஏற்றத்தாழ்வுகள் எக்கச்சக்கம். வாடிக்கையாளருக்குக் கொடுத்த வாக்கைக்காக, தம் மோதிரத்தையும், மனைவியின் கைவளையல்களையும் கூட அவசரத்துக்கு உருக்கி நகை செய்துதர வேண்டிய சந்தர்ப்பங்கள் வந்தன.

முகம் சுளிக்காமல் அதையும் செய்ய முடிந்தது அவரால்!

தொடர்ந்து தொழில் விரிவடைந்தது. 1980இல் உஸ்மான் ரோடில் 300 சதுர அடியில் ஒரு ஷோரூம். 85இல் அது 600 சதுர அடியாக விரிந்து பிறகு 900 சதுர அடி ஆகி, கூட்டத்தைச் சமாளிக்க அதுவும் போதாமல் இன்று 4000 சதுர அடியில் பிரும்மாண்ட புதிய ஷோரூம் ஆகி இருக்கிறது!


ஹீரோ யாரென்று இப்போது புரிந்திருக்கும். பாலசுப்பிரமணியம். பாலு ஜுவல்லர்ஸ் என்றால் இன்னும் பழமாகப் புரியும்! நகைத் துறையில் கொடிகட்டிப் பறந்தாலும் பாலுவுக்கு நடிப்புத் துறையின் மீது சின்ன வயதிலேயே மோகம்!

SSLC முடித்ததும் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸுக்கு, தம் நடிப்பார்வம் பற்றியும் வாய்ப்பு கேட்டும் லெட்டர் போட்டிருக்கிறார்.

இன்டர்வியூவுக்கு அவர்கள் கூப்பிட, வீட்டில் அனுமதி கிடைக்காததால் திட்டம் கைவிடப்பட வேண்டியதானது!

இன்றைக்கு சினிமாக்காரர்களைக் கூப்பிட்டு அவ்வப்போது கௌரவிப்பதன் மூலம் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்கிறார் பாலு. "என் தொழிலுக்கும் இது பப்ளிஸிட்டியாகிறது" என்று வெளிப்படையாக ஒப்புக் கொள்ளவும் செய்கிறார்!

- மௌலி





பாம்புக் காது.

மணிகண்டன் அரைக் கணம் வழிந்து விட்டு, டெலிபோனில் புதைந்தான்.

"மணி என்ன ஆறது?"

"அடுத்த நாள் பிறக்க அஞ்சு நிமிஷம்."

"ஆறு மணிக்கு வரலனா நீ? நமக்கு லவ் ஒரு கேடு."

"ஸாரி."

"வாங்கிக் குடு. உடுத்திக்கறேன்."

சிணுங்கலான செல்லக் கோபம் மாதிரி உலகில் அழகான விஷயம் வேறில்லை என்று மணிகண்டன் நினைத்தான். பெண்கள் வசீகரமானவர்கள். கோபப்படும் பெண்களுக்குச் சற்றுக் கூடுதல் வசீகரம் வாய்க்கிறது.

மாலினிக்கு இந்நேரம் கன்னம் சிவந்திருக்கும்.

அவள் வீட்டு ஹாலில் ஒரு ஃபோன். படுக்கை அறையில் அதன் எக்ஸ்டென்ஷன். ஒரு பூர்த்தியாகாத ஓவியம் மாதிரி ஒயிலாகப் படுக்கையில் சாய்ந்து கொண்டு பேசு

ஊருக்கென்ன புட்டு?

"மணிகண்டா, ஃபோன்!"

அய்யங்காரின் அமானுஷ்யக் குரல் காதில் அறைந்தது.

"இல்லேன்னு சொல்லிடட்டுமா?"

சட்டென்று எழுந்து போய் டெலிபோனை எடுத்தான்.

"யாரது இழவு? செமை அலட்டல்."

எதிர்முனையில் மாலினியின் குரல். ரிஸீவரில் ஐஸ் வாட்டர். மணிகண்டன் உற்சாகமானான்.

"காட்! நீயா? இந்த நேரத்தில்?"

"இருக்கியான்னு பார்த்தேன். கேட்டேனே, யார் அந்தக் கெழ போல்ட்?"

"உஷ்... சீனியர்!"

"என்னவாம் உங்காளுக்கு? என்னைப் பத்தி தெரிஞ்சுக்கணுமாக்கும். பயோடேட்டா கம்போஸ் பண்ணி அனுப்பட்டுமான்னு கேள்."

கிறாளாயிருக்கும். கருநீல நைட்டி... காற்றில் புரளும் கேசம்...

"உன்னால் ஒரு நாள் கூட சொன்ன நேரத்துக்கு வர முடியாது இல்லியா? ஒரு ஃபோன் பண்ணி தகவல் சொன்னா, உங்க பத்திரிகை ஆபீஸ் சொத்து அழிஞ்சிடும், இல்லியா?"

சொற்கள். அவை எப்படி இவள் உச்சரிப்பில் சங்கீதமாகின்றன?

"இவனே! ஃபோனை வெச்சுட்டு வந்து அந்த சட்டைக்காரி சமாசாரத்தை முடிக்கிற உத்தேசமே இல்லியா?"

'ஓய் அய்யங்காரே! இதே எழுநூறு

பா. ராகவன்



ரூபாய் அப்பரன்டிஸ் சம்பளத்தில் அடுத்த ஜென்மத்தில் என் அஸிஸ்டென்ட்டாகப் பிறக்க உம்மைச் சபிக்கிறேன்.'

"என்ன பேச்சே காணோம்?"

"என்ன சொல்லட்டும்? தப்புதான். இவ னிக்கு உன்னை மீட் பண்ணறதா சொல்ல னதே மறந்து போச்! ஸாரி. கொஞ்சம் வொர்க் லோட். ஒரு சட்டைக்காரி நியூ யார்க்குல என்ன பண்ணான்னா...."

"போருமே? நாளைக்கு வரியா? ஷ்யூர். வரே! நிச்சயம் வரே! ஆறுமணி... கண்ணகி சிலை. கண்டிப்பா வரே! பிகாஸ், நாளைக்கு என் 'பர்த்டே."

சட்டென்று ஃபோனை அவன் இதயத் தில் வைத்தாள்.

மணிகண்டன் ஆயாசமாய் இருக்கை யில் விழுந்தான். மேலே லொடலொடக்கும் டல்ஹௌஸி காலத்து விசிறி. அடுக்கடுக்கு அலமாரிகளில் அழுக்கழுக்குத் தாள்கள். குப் பைக் கூடைகளுக்கு வெளியே குப்பைகள். தரையில் மைச் சிதறல். சிகரெட் வாசனை. கேலண்டர். குறிப்புகள். தகவல்கள். தெருப் புழுதி.

சிங்கிள் டீ. கிராக்கிகளின் மேல் கூட கடவுள் சில கிராம் கருணை வைக்கத்தான் செய்கிறார். மேற்கு மாம்பலத்தில் உறங்க ஒரு பொந்து. அண்ணா சாலையில், புழங்க ஒரு ஆபீஸ். ஆழ்வார்பேட்டையில், மயங்க ஒரு மாலினி...

கடிகார முள் பனிரெண்டரை என்றது. இது இரவு. சட்டைக்காரியின் கல்யாணப் புரட்சி சமாசாரத்தை ஒருவாறு முடித்து. அய்யங்கார் தலையில் கட்டி விட்டு, மணி கண்டன் வெளியே வந்தான்.

மாலினிக்கு பர்த்டே. என்ன செய்ய லாம்? வாழ்க்கையில் அவள் காணாத ஏதே னும் ஒன்றைப் பரிசாகத் தர அவன் மிக விரும்பினான்.

'மடையா, மாசச் சம்பளம் ரூபா எழு நூறும் கன்வேயன்ஸ் நூற்றைம்பதும்தான்' என்றது மனம்.

ரூம் வாடகை. மெஸ் பாக்கி. டீக்கடை பாக்கி. பிற பாக்கிகள். ரூமில் ரூபா நூற்றி ருபது இருப்பது ஞாபகம் வந்தது. அதைச் செலவழிக்க முடியாது. அடுத்த சம்பளத் துக்கு இன்னும் பத்து நாள் தவமிருந்து சட் டைக்காரிகள் பற்றிய செய்திகளை மொழி பெயர்த்துத் தீர்க்க வேண்டும்.

அய்யங்காரிடம் கேட்டால் என்ன? சொந்த வீடு. சொந்த மனைவி. இருக்கிற



இரண்டே பெண்களுக்குக் கல்யாணம், சீமந்தம் எல்லாம் முடித்து விட்டு, மூன்று வேளையும் மோர் சாதம் மட்டும் கரைத்து சாப்பிட்டுக் கொண்டு, வருகிற ஏழாயிரத்து சொச்ச சம்பளத்தையும் நேஷனல் ஸேவிங்ஸில் தான் போட்டுக் கொண்டு வருகிறார்....

நடந்தே ரூமுக்குப் போய் படுத்து, தூங்கி, எழுந்து, குளித்து, சாப்பிட்டு, ஆபீஸ் வந்து, அய்யங்கார் முன் நின்று, "சார், ஒரு நூறு ரூபா அவசரமா வேணும்! கூடவே இன்னைக்கு ஒன் அவர் பர்மிஷன்" என்றான்.

"என்ன சமாசாரம்? உன் ஆள் மாலினிக்கு மசக்கையா?"

"அசிங்கமா பேசாதீங்க சார்! அவளுக்கு இன்னிக்கு பர்த்டே"

"ஜமாய்டா ராஜா! என்ன பிரஸன்ட் பண்ணப் போறே? சங்கரா ஹால்ல சகாய விலைக்கு ராஜஸ்தான் ஸாரீஸ் எக்ஸிபிஷன் வெச்சிருக்கான். அப்படியே பிஷப் வாலர்ஸ் ரோடுல நம்ம சீனிவாசவரதன் தெரியுமில்லையா... ஆஸ்திரேலியாவுல மெக்டர்மட்னு ஒரு கிரிக்கெட் பிளேயர், பீச்சுல லவ்வரோட உல்லாசமா இருந்தப்ப எடுத்த போட்டோஸ் வந்திருக்குன்னான். அதையும் கலெக்ட் பண்ணிண்டு..."

"நான் ரிஸைன் பண்ணிடலாமான்னு பாக்கறேன்."

"கோச்சுக்காதடா. அடுத்த மாசம் உனக்கு ஜோலி கன்ஃபர்ம் ஆகப் போறது. மாலினிகிட்ட சொல்லு. தை மாசம் முகூர்த்தம் வெச்சுக்கலாமான்னு கேளு. அவ ஆத்துல யாரும் அப்ஜெக்ட் பண்ணுவாளோ? விசாரி. இல்லேன்னா இருக்கவே இருக்கு, ரிஜிஸ்தர் ஆபீஸ்."

"தேங்க்யூ சார். நான் கேட்டது...."

"சாயந்தரம்தானே! போறச்சே வாங்கிண்டு போ."

மணிகண்டன் உற்சாகமானான். வெறி வந்தவன் போல் வேலை தொடங்கினான். ப்ரூஃப் படித்துத் தீர்த்தான். மொழிபெயர்த்துப் போட்டான். படங்களுக்கு சைஸ் மார்க் செய்து ஃபிலிம் எடுக்க அனுப்பினான்.

மணி நாலு அடிக்கையில், அய்யங்கார் பரபரப்பாக எங்கிருந்தோ ஓடி வந்தார்.

"கண்ணா, கோச்சுக்காத! தலை போகிற காரியம்... கராச்சியிலேருந்து முத்துகுமாரசாமி ரிப்போர்ட் அனுப்பியிருக்கான். கலவரம் நடக்கறதில்லையா? அது பத்தி. பாரு, பரிமேலழகர் காலத்து பாஷைல வசவசன்னு நாப்பது பக்கம்! கொஞ்சம் படிச்சி, ஒழுங்கு பண்ணி வெச்சுட்டுப் போயிடு. அவசரமா என்னை எடிட்டர் கூப்ட்ருக்கார். சொத்துல பாதி எழுதி வெக்கப் போறார் போலருக்கு! வரட்டுமா? முடிச்சுடு."



"கவர்மெண்டு ஆபீஸ்களுக்கு லீவே விடப்படாது, சார்..."
"என்ன... இப்படிச் சொல்றீங்க?"
"பின்னே... லீவு நாட்கள்ல ஏற்படற லஞ்ச இழப்பை, மறுநாள் சேர்த்தில்லே வசூல் பண்ணிடறாங்க...!"
- அ. சுகுமார்

மணிகண்டனுக்கு அழுகை வந்தது. வாழ்க்கையில் நிம்மதியான பொழுதுகளே தனக்கு வாய்க்காதா என்று ஏங்கினான். என்ன உத்தியோகம். என்ன பிழைப்பு. என்ன அலைக்கழிப்பு.

சரசரவென்று பேப்பர் உருவி முத்துகுமாரசாமியின் அசகாய கட்டுரையை சீராக்கத் தொடங்கினான்.

நாலரை.

நாலே முக்கால்.

ஐந்தே கால்.

முடித்து, தூக்கிப் போட்டு விட்டு, விரைந்து வெளியேறி, எதிரே வந்து கொண்டிருந்த அடுத்த ஷிப்ட் ஸ்கூட்டர்காரனை வழிமறித்து, வண்டியைப் பிடுங்கிக் கொண்டு, தி.நகருக்கு விரைந்தான்.

ரங்கநாதன் தெரு. ஜகஜ்ஜோதியாகக் கடைகள். சரவணா ஸ்டோர்ஸ். அம்பிகா ஸ்டோர்ஸ். கேரளா ஜுவல்லர்ஸ். பிளாட்பார மலைகள். கத்தரிக்காய் கிலோ பனிரெண்டு ரூபாய். கேஸட்ஸ். தாயே கருமாரி. டேக் இட் ஈஸி பாலிஸி. அருண் ஐஸ்கிரீம். திருநெல்வேலி பழரசம். எருமை மாடு. புத்தகக் குன்றுகள். பனியன் குவியல்கள். கூடு திரும்பும் மனிதப் பூச்சிகள். எதெடுத்தாலும் பத்து ரூபா. ரூபா. ரூபா. ரூபா.

மணிகண்டனுக்கு திக்கென்றது. அய்யங்காரிடம் பணம் வாங்கிக் கொள்ள எப்படி மறந்தேன்?

சே, என்ன ஒரு மடையன் நான்? கையில் காலணா இல்லாமல் மாலினிக்கு என்ன வாங்கிப் போவது?

ரங்கநாதன் தெருவே அவனைப் பார்த்து சிரிப்பது போல் இருந்தது.

ஸ்கூட்டரை ஓரம் கட்டி, அவசரமாக பாக்கெட்டைத் துழாவினான். பஸ் டிக்கெட். அஜந்தா பாக்கு, மற்றும் இரண்டே முக்கால் ரூபாய்.

மறுபடி போய் அய்யங்காரிடம் காசு வாங்கிக் கொண்டு... அல்லது ரூமுக்குப் போய் இருப்பதை எடுத்துக் கொண்டு...

மணி ஆறு. இந்நேரம் மாலினி, கண்ணகி சிலைக்கு வந்திருப்பாள். முகம் முழுக்கப் புன்னகையும் மனம் முழுக்க சந்தோஷமுமாக. இவன் என்ன கொண்டு வரப் போகிறான்? எதிர்பார்ப்பில் நொடிகளைக் கரைத்துக் கொண்டிருக்கக்கூடும்.

மணிகண்டன் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான். காலணாவுக்கு நிரந்தரமில்லாதவர்கள் காதலிக்கத் தகுதியற்றவர்கள் என்று தோன்றியது.

என்ன தரப் போகிறோம் என்பதல்ல; ஏதாவது தந்தாக வேண்டாமா? அன்புக்கு ஒரு அடையாளம். கணநேர சந்தோஷம். ஜில்லென்று ஒரு உணர்வு... அந்த க்ஷணப் பார்வையில் தெறிக்கும் பன்னீர்ச் சிறதல்...

மணிகண்டன் ஒரு முடிவுக்கு வந்தான்.

"இந்த ரோஜாப்பூ என்ன விலைங்க?"

இருட்டி இருந்தது. கடற்கரையில் திட்டுத்திட்டாக ஜோடிகள். வேர்க்கடலை. சுண்டல். காற்றாடி. குதிரை.

கண்ணகி சிலை அருகே மாலினி உட்கார்ந்திருந்தாள். தனியாக. சோர்வாக. குழல் பறக்க.

மணிகண்டன் கிட்டே போய் அவள் தோளைத் தொட்டான். சட்டென்று நிமிர்ந்தாள். புன்னகைத்தாள்.

"அரை மணிதான் லேட். பரவாயில்லை."

"ஸாரி."

"தினம் தான் சொல்லறியே! ஐ கேன் அண்டர்ஸ்டாண்ட்."

சே. என்ன ஒரு வாழ்க்கை.

சோகம் மறைத்து. அருகே அமர்ந்து புன்னகைத்தான்.

"மெனி மோர் ஹாப்பி ரிட்டன்ஸ்."

மாலினி, மென்மையாக அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

மணிகண்டன் கடவுளுக்கு நன்றி சொன்னான். சோகங்களுக்கு நடுவில் ஒரு சின்ன சந்தோஷத் தீவை அவன் இளைப்பாற அருளி இருக்கிறார். மாலினி. அவன் குறை

களை அதன் நிஜத்துடனே ஏற்றுக் கொண்டு தன் காதலால் அவனை கௌரவித்துக் கொண்டிருக்கிறாள்.

மனிதர்களைப் புரிந்து கொள்ளுதல் ஒரு பெரிய கலை. இந்த வயதிலே அது இவளுக்கு சாத்தியமாகி இருப்பது பெரிய விஷயம்.

"ஏய், ஏன் ஒண்ணும் பேச மாட்டேங்கறே?"

"ம்?"

"என்னடா இவளை இப்படி அலைக் கழிக்கறோமேன்னு கஷ்டமா இருக்கா?"

"ப்ச்."

"போகட்டும். எனக்கு என்ன பிரஸன்ட் வாங்கிண்டு வந்தே?"

மணிகண்டனுக்குச் சங்கடமாக இருந்தது. தன் மேல் கோபமாக வந்தது. என்ன மனிதன் நான்? பூ! வெறும் ரோஜாப்பூ! ஒரு பிளாட்பார வாசி கூட தன் காதலிக்குச் சுலபமாக வாங்கிச் சூடி விடக் கூடியது. தனக்கு மட்டும் ஏன் தருணங்கள் சிறைக் கம்பிகளாகி விடுகின்றன?

"ஏய், என்னாச்சு? ஆபீஸ்லேர்ந்து நேரா வந்துட்டியா? தட்ஸ் ஆல் ரைட்! நான் சும்மா கேட்டேன். எதுவும் கொடுத்தாத் தான் காதலா என்ன?"

அவனுக்கு வெட்கமாக இருந்தது. அடுத்த மாதம் வேலை கன்ஃபார்ம் ஆகி விடும். இரண்டாயிரத்து ஐநூறு வரும். மாலினியைக் கடைக்கு கூட்டிப் போய்...

முற்றிலும் இருட்டி விட்டது.

"கிளம்பலாமா?"

"உம்!"

சட்டென்று தைரியம் வந்தவனாக சட்டைப் பையிலிருந்து அந்த ரோஜாப் பூவை எடுத்து அவள் கூந்தலில் சூட்டினான்.

"தேங்க்யூ."

இருட்டில் அவள் விழிகள் விரியப் புன்னகைத்தது மங்கலாகத் தெரிந்தது.

"நான் உனக்கு ஒண்ணு குடுக்கப் போறேன்!"

"அதென்ன?"

"இதுவரைக்கும் வாழ்க்கையில் உனக்கு கிடைக்காதது. ஆயுசு முழுக்க மறக்க முடியாதது!"

மாலினி, அவனை நெருங்கி, கன்னத்தில் தன் ஒளி உதடுகளை ஒற்றி எடுத்தாள். ரோஜாப் பூ மாதிரி மெத்தென்று.... ஈரமாக...

மணிகண்டன் திகைத்துப் போய் அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

கடல் காற்று அவன் முகத்தை மென்மையாக வருடிப் போனது.

இன்றைய சேமிப்பு நாளைய பொற்காலம்



உங்கள் முதலீட்டிற்கு

டெபாசிட்டுகள் ரூ. 5,000/-ம் அதற்கு மேலும்
ரூ. 10,000/- டெபாஸிட்
செலுத்துபவர்களுக்கு

சிறப்பு அன்பளிப்பு
உண்டு

30% + 6%

வட்டி ... வைக்கத் தொகை


ரூ. 15,000/- மேல் நகை வாங்குபவர்களுக்கு சிறப்பு அன்பளிப்பு உண்டு.

அமுதா கோல்டு பேலஸ்


43, டாணாத் தெரு, புரசைவாக்கம், சென்னை - 7.

போன் : 6423471, 6426385 ஓர்க்ஸ் : 6411235, 6425973

(ஞாயிறு விடுமுறை)



க்கி
'ஷாப்பிங்'
ரொம்ப பெரிய இடத்திலேருந்து உன் கடைக்கு ஷாப்பிங் செய்ய வந்த பிறகும் ஏன் சோகமாயிருக்கே? எதையுமே வாங்காம போயிட்டாங்களா?
நீ வேறே, கடையையே வாங்கிட்டாங்க!
இதுதான் நம்ம பல் அமைப்புக்கு ஏற்ற நீதி பிரஷ்ன்னு நேற்று விளம்பரம் செய்தாங்க!
லிஸ்ட்ல போட்ட எல்லாத்தையும் இன்னிக்கே வாங்கித்தான் ஆகணுமா?
— குல்லா
என்னங்க... பார்த்து வாங்க!


S.K. FAN HOUSE
ஒரு மின்விசிறி வாங்கினால் ஒரு கைவிசிறி இனாம்!
ஏன் தான் நம்ம கடையில் மட்டும் வியாபாரமே ஆகமாட்டேங்குதோ?
என்னடா இது! கியாரண்டி அட்டையிலே 'மின்தொடர்பு இல்லாத போது கருவியில் பழுது ஏற்பட்டால் நாங்கள் பொறுப்பு இல்லை'ன்னு போட்டிருக்கு!
ஏன் அதானாலென்ன?
அடப்பாவி! நான் வாங்கினது ஜெனரேட்டர் செட்டாச்சே!
K.S. DEPARMENTAL STORES
கெ.எஸ்.டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர்ஸ்
என்ன பெரிய கடை! இட்டிக் கரியும், விறகும் விக்கறதில்லையாம்!.....
என்னங்க இது? பால் குக்கரை வாங்கி வாச் சொன்னா கூடவே ஒரு பையனையும் கூட்டிக்கிட்டு வந்திருக்கீங்க?
குக்கரில் விசில் அரியில்லையாம்! அதனாலே பால் பொங்கும் போது இவன் விசில் அடிப்பானாம்

ESEMAR CHITS

(MADRAS) PRIVATE LTD.,

Head Office : 5-A, Poes Road, Off. Eldams Road,
Madras - 18. Phone : 451462, 455936

One more Bonus Season on the Eve of Independance Day

We offer the Following Groups

Monthly Subscription Rs.	Duration Months	Chit Value Rs.
500	20	10,000
1,250	20	25,000
750	40	30,000
1,000	50	50,000
2,500	20	50,000
2,500	40	1,00,000
5,000	20	1,00,000
10,000	20	2,00,000
12,000	25	3,00,000
25,000	20	5,00,000

Our Group Concerns :

ESEMAR MARKETING PVT. LTD.

ESEMAR CREDIT CORPORATION,

offers **24%** on Fixed Deposits

Branches

Arakkonam
271, Mosur Road,
Arakkonam-631 001
Ph : 22882


Tiruvottiyur
802/5, T.H. Road,
Thiruvottiyur Market,
Ph : 544828

Madipakkam
1, Medavakkam Rd.,
Madipakkam Koot Rd.,
Ph : 2342869



GROW WITH ESEMAR CONFIDENTLY

ஷாப்பிங் போறீங்களா?



கன்ஸ்யூமர் உரிமைகள் பற்றி ஊரெல்லாம் பேசுகிறார்கள். என்ன அவைகள்? சிட்டிசன் கன்ஸ்யூமர் அண்ட் சிவிக் ஆக்ஷன் குரூப் என்ற அமைப்பின் சட்ட ஆலோசகர் கவிதா சொல்கிறார் :

"ஒரு கன்ஸ்யூமருக்குச் சில உரிமைகள் இருக்கின்றன. அவற்றைச் செயல்படுத்தினாலே போதும். பிரச்னைகளுக்குத் தீர்வுகள் காண முடியும்.

"இப்போது கன்ஸ்யூமர் ப்ரொட்டெக்ஷன் ஆக்ட் (1986) என்று தனிச் சட்டம் வந்த பிறகு நுகர்வோருக்கு நிறையப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாகப் பலரும் இதை எல்லாம் அறிந்திருப்பதில்லை.

"ஒரு ஷாப்பிங் சென்டருக்குள் நுழைந்தவுடன், கண்டதை எல்லாம் வாங்கத் தோன்றும். டீவியிலும், பத்திரிகைகளிலும் கலர் விளம்பரங்களாகப் பார்த்தவை எல்லாம் வேறு நினைவுக்கு வந்து, தேடிப் போய் வாங்கத் தூண்டும். முதலில் தீர்மானிக்க வேண்டியது நமக்கு இந்தப் பொருள் அவசியம் தேவைதானா? இதன் விலை நியாயமானதுதானா? இந்தப் பொருளுக்கு வாரன்ட்டி அல்லது காரண்ட்டி இருக்கிறதா? ஒரு வேளை ரிப்பேர் ஆகி விட்டால், ஸ்பேர் பார்ட்டுகளும் சர்வீசும் எளிதாகக் கிடைக்குமா?

'சட்டத்திற்கு உட்பட்ட வகையில் பாதுகாப்போடு இயங்கக்கூடியவாறு இந்தப் பொருள் தயாரிக்கப்பட்டிருக்கிறதா?'"

ஒரு புத்திசாலியான கன்ஸ்யூமருக்கு உண்டான லட்சணங்கள் என்ன?

"ஷாப்பிங் புறப்படு முன், என்னென்ன வாங்க வேண்டும் என்று ஒரு லிஸ்ட் போட வேண்டும். கடைக்காரரின் உபசாரம், சின்ன (கூல்டிரிங்) ட்ரீட் எல்லாவற்றுக்கும் மயங்கி, பட்டியலைத் தாண்டிப் போகக் கூடாது. நீங்கள் வாங்கும் பொருளின் தேவையும், அந்தப் பொருளின் சேவையும் இணைகிறதா என்று பாருங்கள்.

"ஒரு கடைக்கும் இன்னொரு கடைக்கும் விலையில் வித்தியாசம் இருக்கிறதா என்று பாருங்கள் - முக்கியமான பர்ச்சேஸ் ஆக இருக்கும்பட்சத்தில். போட்டிருக்கிற விலையுடன் கூட, டெலிவரி சார்ஜ், இன்ஸ்டலேஷன் சார்ஜ், சர்வீஸ் சார்ஜ் என்று ஏதானும் தனியே கொடுக்க வேணுமா என்று விசாரியுங்கள். பிரச்னை வந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதை காரண்டி கார்டில் தெளிவாகச் சொல்லியிருக்கிறதா என்று பதட்டப்படாமல் பாருங்கள்.



"படிவங்கள் எதிலேனும் கையெழுத்துப் போட வேண்டி வந்தால், பொறுமையாகப் படித்து விட்டு, முழுமையாகப் பூர்த்தி செய்து, பின்னர் கையொப்பம் இடுங்கள். திரும்ப எடுத்துக் கொள்ளும்படி நேர்ந்தால், கடைக்காரரின் சார்பில் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதையும் முன்கூட்டியே தெரிந்து கொள்ளுங்கள்."

"ஓ.கே. அப்புறம்?"

"வாங்கிய பிறகும், அதை எப்படி உபயோகிப்பது என்று நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். பில்களை ஒழுங்காக வைத்திருக்க வேண்டும். பாக் செய்யப்பட்ட பொருள் என்றால், லேபிளில் அதன் எடை, விலை எல்லாம் தவிர, தயாரிப்பாளர் முகவரி இருக்கிறதா என்று பாருங்கள்.

பிரச்னை என்று வந்து விட்டால் உடனே தயாரிப்பாளருக்குத் தெரிவியுங்கள். போனில் பேசினால், யாரிடம் குறையைத் தெரிவிக்கிறீர்கள் என்று குறித்து வைத்துக் கொள்ளுங்கள்."

சி.ஏ.ஜி.யில் ஒரு கன்ஸ்யூமர் கையேடு வெளியிட்டிருக்கிறார்கள். 25 ரூபாய் புத்தகம். நுகர்வோரின் உரிமைகள், அதற்கான சட்டங்கள், அணுகும்விதம் பற்றியெல்லாம் புட்டு புட்டு வைத்திருக்கிறார்கள்!

- சாருகேசி



• கவிதா
(படம் : பாலாஜி)



• குருசாமி & தட்சிணாமூர்த்தி



பருக்கு பட்ஜெட் பெரிய தடையாக இல்லை. மனசுக்குப் பிடித்ததாய்த் தேர்ந்தெடுப்பதில்தான் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள்.

இன்றைக்கு இளைய தலைமுறைப் பெண்கள், பட்டுப்புடைவையைவிட, டிசைன் டிசைனாக பட்டுத் துணிகளையே அதிகமாக வாங்குகிறார்கள். அதிலே புதுப்புது டிசைனில் சுரிதார், மிடி போன்ற நவநாகரிக உடைகளைத் தைத்துக் கொள்ளுகிறார்கள்.

"ஏழு, எட்டு அங்குல அகலத்துக்கு ஜரிகை பார்டர் போட்ட பட்டுப்புடைவை இரண்டாயிரத்துக்குக் கிடைக்கும். அதுதான் அன்றைக்கு ரொம்ப விலை உயர்ந்த பட்டுப் புடைவை" என்கிறார் குருசாமி.

"இது இருபத்தைந்து வருடங்களுக்கு முந்தைய நிலவரம். இன்று அரை இஞ்ச் ஜரிகை கூட வராது, அந்த விலைக்கு! எட்டு அங்குல ஜரிகை என்றால் இன்று முப்பத்து ஐயாயிரம் வரை ஆகும்! நல்ல ரிச் லுக் கிடைக்கும்" என்கிறார் தட்சிணாமூர்த்தி.

குருசாமியும், தட்சிணாமூர்த்தியும் சென்னை 'நல்லி'யில் பழுத்த அனுபவசாலியான விற்பனையாளர்கள். 'இன்றைய வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவது அத்தனை சுலபமான பணியில்லை' என்கிற இவர்கள், காரணத்தை விளக்குகிறார்கள் :

"அந்தக் காலத்தில் மாந்துளிர், மயில் கழுத்து, அரக்கு, எம்.எஸ். புளூ என்று விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய நிறங்கள்தான் உண்டு. ஆனால் இன்று ஏகப்பட்ட புதுமைகள். ஒரே நிறத்தில் விதம்விதமான shade. இரண்டு மூன்று நிறங்களின் சேர்க்கையில் புதிய வண்ணங்கள். விதம்விதமான டிசைன்கள். இதில் கம்ப்யூட்டர் வேறு அசுர சாதனை புரிந்து கொண்டிருக்கிறது! இன்று கஸ்டமர்களுக்கு எண்ணிலடங்காத சாய்ஸ்!

இப்போதெல்லாம், முக்கால் வாசி

ராஜ்கபூர் வாங்கிய எட்டு புடைவைகள்!

புடைவை தேர்ந்தெடுப்பதில் கணவன்மார்களின் பங்கு எப்படி? பணம் கொடுக்க மட்டும்தானா?

"சிலர் வெறுமனே நின்று பார்த்துக் கொண்டிருப்பார்கள். சிலர், அபிப்பிராயம் சொல்லுவார்கள். ஆனால் மனைவிமார்கள் அதைக் கண்டுகொள்ள மாட்டார்கள். சில சமயம் இருவரும் சேர்ந்து தேர்ந்தெடுப்பார்கள். சில ஆண்கள், ஒதுங்கியே இருப்பார்கள். சிலருக்கு குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் பணி. இப்படி ஏகப்பட்ட ரக கணவன்மார்கள் உண்டு."

"வி.ஐ.பி. கஸ்டமர்களில் மறக்க முடியாத கஸ்டமர்?"

தட்சிணாமூர்த்தியின் மறக்க முடியாத வி.ஐ.பி. கஸ்டமர் இந்தி நடிகர் ராஜ்கபூர்.

"அவர் ஒரு புடைவையை எடுத்து, வேண்டாம் என்று வைத்தார். நான், 'நல்ல டிசைன்' என்று அதன் நுணுக்கமான பெருமைகளைச் சொன்னபின், அதே டிசைனில் வெவ்வேறு கலர்களில் எட்டு, பத்து புடைவைகளை வாங்கிச் சென்றார்! மன்மோகன்சிங் கூட இங்கே வந்து புடைவை வாங்கிக் கொண்டு போயிருக்கிறார்."

— மௌஷ்மி

படம் : ஸ்ரீஹரி

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

